தமிழரசு

Tamilarasu

(Monthly)

ஜூன் 2024 (June 2024)
விலை ரூ.30/– (Price Rs.30/-)

செய்தி – மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

மலர் (Vol.) : 54
இதழ் (Issue) : 12

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் முடிவுகள் - 2024



1.15 கோடி மகளிர் பயன்பெறும்
கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்

17 இலட்சம் மாணவர்கள் பயன்பெறும்
முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்

2.72 இலட்சம் கல்லூரி மாணவிகள் பயன்பெறும்
புதுமைப் பெண் திட்டம்

3.50 இலட்சம் மனுக்களுக்கு தீர்வு கண்ட
மக்களுடன் முதல்வர் திட்டம்

445 கோடி முறை பயணம் செய்த
மகளிர் விடியல் பயணத் திட்டம்

1.70 கோடி நபர்கள் பயன்பெறும்
மக்களைத் தேடி மருத்துவத் திட்டம்

28 இலட்சம் மாணவர்களுக்கு திறன்பயிற்சி வழங்கப் பெற்ற
நான் முதல்வன் திட்டம்

12 இலட்சம் குழுக்கள் பயன்பெறும்
மகளிர் சுய உதவிக் குழுக்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள்

28.04.2024 அன்று FIDE கேண்டிடேட்ஸ் தொடரில் வெற்றி பெற்ற
தமிழ்நாட்டைச் சேர்ந்த செஸ் வீரர் குகேஷ் அவர்களுக்கு உயரிய ஊக்கத்தொகையாக
ரூபாய் 75 இலட்சத்திற்கான காசோலை மற்றும் கேடயத்தையும் வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.

தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தித்துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2055
வைகாசி - ஆனி
ஜூன் 2024

மலர் : 54 விலை ரூ.30 இதழ் : 12

ஆசிரியர் - வெளியிடுபவர்
மரு. **இரா.வைத்திநாதன்,** இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு துணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
இரா. அண்ணா
இணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்
க.அ. முகம்மது ரசூல்
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
எஸ். உதயா கதிரவன்
ப. கருணாகரன்
ச. மஞ்சுளா
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

உதவி ஆசிரியர்கள்
மு. மணிமேகலை
சி. சுஜிதா
இரா. பாலாஜி
கு. சுபாஷ்

நிருபர்கள்
எஸ்.ஆர்.எஸ்.ஸ்ரீந்தர்
ஜெ.ஜெயசிம்ஹன்

ஓவியர்
இரா. உமாமகேஸ்வரி

இதழ் உதவியாளர்
நி. ஷீலா

கணினி வடிவமைப்பு
தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர்
கோ. சந்திரசேகர்

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
எண்.5, இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை-600 113.
தொலைபேசி : 22542221/22542224
மின்னஞ்சல் : ddpub.tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tndipr.gov.in

தமிழரசு இதழுக்கு
www.tamilarasu.org என்ற இணையதளத்தில்
சந்தா தொகையினை நேரடியாகச் செலுத்தலாம்.

கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்ட தமைச்சு. (குறள் - 631)

உரிய கருவி, உற்றகாலம், ஆற்றும் வகை, ஆற்றிடும் பணி ஆகியவற்றை ஆய்ந்தறிந்து செயல்படுபவனே சிறந்த அமைச்சன்.

– திருக்குறள் **கலைஞர்** உரையிலிருந்து...

இந்த இதழில்...

★ "முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு" 4
★ மூன்றாண்டு ஆட்சி, மக்களின் மகிழ்ச்சியே சாட்சி 10
★ தமிழ்நாடு முழுவதும் நடத்தப்பட்ட 2,058 முகாம்களில் 3.50 இலட்சம் மனுக்களுக்குத் தீர்வு கண்ட "மக்களுடன் முதல்வர் திட்டம்" 13
★ உங்கள் நலன் காக்கும் "நீங்கள் நலமா" திட்டம் 17
★ சென்னை, மெரினா கடற்கரையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நினைவிடம் 25
★ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் உலகம் போற்றும் மூன்றாண்டுச் சாதனைகள் ஓர் பார்வை 32
★ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசின் மகளிர் சமுதாயத்தைக் காக்கும் பயனுள்ள பல்வேறு திட்டங்கள் 38
★ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசு மூன்றாண்டுகளில் ரூ.3,198 கோடியில் 28,824 அடுக்குமாடிக் குடியிருப்புகள் 40
★ கடந்த மூன்றாண்டுகளில் எண்ணற்ற தமிழ் வளர்ச்சித் திட்டங்கள், தமிழ்ச் சான்றோர்களுக்கு பாராட்டு 43
★ முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டுப் பொன்விழா "டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டம்" 66
★ நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள்-2024 75

நான்காம் பக்க அட்டை

முத்தமிழறிஞர் **கலைஞர்** அவர்களின் 101ஆவது பிறந்த நாளையொட்டி 03.06.2024 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தமிழரசு அச்சகத்தின் சார்பில் தயாரிக்கப்பட்ட **"கலைஞர் நூற்றாண்டு நிறைவு மலர்–ஜூன் 2024"** தொகுதி 1, 2, 3 ஆகிய சிறப்பு மலர்களை வெளியிட, மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள : tndiprnews DIPR TN tndipr TN DIPR www.dipr.tn.gov.in

“முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு”

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
சிறப்பு மலர் வெளியிட்டார்கள் – 03.06.2024

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 101ஆவது பிறந்தநாளையொட்டி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 03.06.2024 அன்று சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தி, கலைஞர் நூற்றாண்டு நிறைவு மலர்-தொகுதி -1, தொகுதி -2, தொகுதி -3 ஆகிய சிறப்பு மலர்களை வெளியிட்டார்.

ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தவரும், 13 முறை சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு 13 முறையும் வெற்றி பெற்றவரும், தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், தமிழ்நாட்டின் அரசியல் தலைவராக மட்டுமல்லாமல் இந்திய அரசியலின் திசையைத் தீர்மானிப்பவராகவும் திகழ்ந்தார் நூற்றாண்டு நாயகர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

அவரது பன்முக ஆற்றலையும், அவர் படைத்தளித்த மக்கள் நலத்திட்டங்களையும், சமுதாயத்தில் அதன் தாக்கத்தையும் வருங்காலங்களில் தமிழ்நாட்டு மக்கள் என்றென்றும் நினைவில் கொள்ளும் வகையிலும், நவீனத் தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பியான தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக அறிவித்து நிறைவேற்றிய திட்டங்களை இளைய சமுதாயத்தினர் அறிந்து கொள்ளும் வகையிலும்,

முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடம்

வாழும் காலத்திலே தமிழ்நாட்டு மக்களுக்கு எண்ணற்ற நலத்திட்டங்களை வாரி வழங்கி இன்றும் வரலாறாய் வாழ்ந்து கொண்டிருக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை ஓராண்டுக் காலம் மக்களுக்கு பயன் தரத்தக்க வகையில் நடத்திட வேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டிருந்தார்.

அந்த ஆணைக்கிணங்க, 12 சிறப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு, தமிழ்நாடு முழுவதும் மிகச் சிறப்பாகப் பொதுமக்கள், மாணவ, மாணவியர்கள், மகளிர் என அனைத்து தரப்பினராலும் கொண்டாடப்பட்டது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடம் திறக்கப்பட்ட நாள் முதல் தினந்தோறும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் வருகை தந்து, அவருடைய வாழ்க்கை வரலாறு, அரசியல் பயணம், சமூக நீதிக்கான பங்களிப்புகள், செயல்படுத்திய திட்டங்கள், இதழியல் துறை, கலைத்துறை போன்ற பல்வேறு துறைகளில் அவர் புரிந்த சாதனைகள் குறித்து ஆர்வத்துடன் பார்வையிட்டு வருகின்றனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலைஞர் நூற்றாண்டு நிறைவு மலர்களை வெளியிட்டார்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 101ஆவது பிறந்தநாளையொட்டி இன்றைய தினம் சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில், செய்தி மக்கள் தொடர்பு துறையின் 'தமிழரசு' வாயிலாகத் தயாரிக்கப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு மலர் - தொகுதி -1, தொகுதி -2, தொகுதி -3 ஆகிய சிறப்பு மலர்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட, மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

கலைஞர் நூற்றாண்டு நிறைவு மலர் – தொகுதி 1

இந்நூற்றாண்டு மலரில், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு இலச்சினை வெளியீட்டு விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் "காலடிச் சுவடுகள்" என்னும் தலைப்பில் அவரது வாழ்க்கை வரலாறு பற்றிய ஒரு சிறு குறிப்பு, "சமூக அரசியல் ஆளுமைகள்" என்னும் தலைப்பில் கலைஞர் தொலைக்காட்சியின் தலைமை செய்தி ஆசிரியர் திரு. திருமாவேலன் அவர்கள் எழுதிய கட்டுரை, கனல் தெறிக்கும் கவிதைகள், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 100 சாதனைகள், "பொருளாதாரத்துக்கு ஊக்க உணவு அளித்த கலைஞர்" என்னும் தலைப்பில் தமிழ்நாடு திட்டக்குழுத் துணைத் தலைவர் திரு. ஜெயரஞ்சன் அவர்கள் எழுதிய கட்டுரை, "எல்லோரையும் காத்த கலைஞரின் கொடை" என்னும் தலைப்பில் தி இந்து குழுமத்தின் இயக்குநர் திரு. என்.ராம் அவர்கள் எழுதிய கட்டுரை, "தமிழ்நாட்டை வளர்த்த பெருமை அவரையே சாரும்" என்னும் தலைப்பில் மூத்த பத்திரிகையாளர்

முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடம்

திரு. ஏ.எஸ்.பன்னீர்செல்வம் அவர்கள் எழுதிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. மேலும், தமிழ்நாடு முழுவதும் நடைபெற்ற 12 கலைஞர் நூற்றாண்டு விழாக் குழுக்கள் நடத்திய கலை நிகழ்ச்சிகள், பேச்சுப்போட்டிகள், கவிதைப் போட்டிகள், ஓவியப் போட்டிகள், கட்டுரைப் போட்டிகள், புகைப்படக் கண்காட்சி, பட்டிமன்றம் போன்ற விழாக்கள் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.

கலைஞர் நூற்றாண்டு நிறைவு மலர் – தொகுதி –2

இந்நூற்றாண்டு மலரில், இதழாளர் - கலைஞர் குழுவின் சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எழுதிய கட்டுரைகள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எழுதிய "கலைஞர் அவர்களின் கட்டுரைகளைப் படித்தால் புழுவும் புலியாகும்" என்ற தலைப்பிலான கட்டுரை, திராவிடர் கழகத் தலைவர் திரு. கி. வீரமணி அவர்கள் எழுதிய "இதழாளராக கலைஞர் என்றும் வாழ்வார்" என்ற தலைப்பில் கட்டுரை, "திரையாண்ட கலைஞர்" என்னும் தலைப்பில் கவிஞர் வைரமுத்து அவர்கள் எழுதிய கட்டுரை, "கலைஞரும் நானும்" என்னும் தலைப்பில் ஓவியர் ட்ராஸ்கி மருது அவர்கள் எழுதிய கட்டுரை, "நான் கண்ட கலைஞர்" என்னும் தலைப்பில் மூத்த பத்திரிகையாளர் திரு. சண்முகநாதன் அவர்கள் எழுதிய கட்டுரை, "கலைஞரின் காலம் ஒரு பொற்காலம்" என்னும் தலைப்பில் மூத்த பத்திரிகையாளர் திரு. பகவான் சிங் அவர்கள் எழுதிய கட்டுரை, "பகுத்தறிவுவாதிகள்" என்னும் தலைப்பில் மூத்த பத்திரிகை ஆசிரியர் திரு. சுந்தா அவர்கள் எழுதிய கட்டுரை, "கலைஞரின் இயல்பு" என்னும் தலைப்பில் மூத்த பத்திரிகை ஆசிரியர் திரு. கே.சி.லக்ஷ்மி நாராயணன் அவர்கள் எழுதிய கட்டுரை, "கலைஞரின் கவிதைத் தூரிகை படைத்திட்ட சொல்லோவியங்கள்" எனும் தலைப்பில் மூத்த பத்திரிகையாளர் திரு. கோவி. லெனின் அவர்கள் எழுதிய கட்டுரை, "பிறவிப்பத்திரிகையாளர்" எனும் தலைப்பில் பேராசிரியர் கான்ஸ்டன்ட்டைன் ரவீந்திரன் அவர்கள் எழுதிய கட்டுரை, "கட்சி ஆட்சி இரண்டையும் கச்சிதமாக வைத்திருந்தவர் தான் கலைஞர்" என்னும் தலைப்பில் மூத்த பத்திரிகையாளர் திரு. குபேந்திரன் அவர்கள் எழுதிய கட்டுரை, கலைஞரின் புகைப்படத் தொகுப்பு,

பண்பாட்டுப் பாசறை - கலைஞர் குழுவின் சார்பில், "திராவிடம் பேணும் தீப்பிழம்பு மானுடம் பேசும் மயிலிறகு" எனும் தலைப்பில் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன் அவர்கள் எழுதிய கட்டுரை, "அலைகடல் நடுவே அய்யனுக்கோர் சிலை" என்னும் தலைப்பில் திரு. அஜயன் பாலா பாஸ்கரன் அவர்கள் எழுதிய கட்டுரை, "மாண்புக்கெல்லாம் மாண்பான மாண்பமைந்த முதல்வா" எனும் தலைப்பில் கவிஞர் வாலி அவர்கள் எழுதிய கவிதை, இந்து சமய அறநிலையத் துறையில் கலைஞர் செய்த சாதனைகள் இடம்பெற்றுள்ளன.

மேலும், பகுத்தறிவுச் சீர்திருத்தச் செம்மல் கலைஞர் குழுவின் சார்பில், "இளமை பலி" என்னும் தலைப்பில் கலைஞர் எழுதிய முதல் கட்டுரை, "சுயாட்சியின் சுடரொளி" என்னும்

ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகம்

தலைப்பில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் எழுதிய கட்டுரை, "சமரசமில்லாப் பகுத்தறிவாளர் - கலைஞர்" எனும் தலைப்பில் மக்களவை உறுப்பினர் திருமதி கனிமொழி கருணாநிதி அவர்கள் எழுதிய கட்டுரை, "பகுத்தறிவு இமயம் - கலைஞர்" என்னும் தலைப்பில் நீதியரசர் திரு. சந்துரு அவர்கள் எழுதிய கட்டுரை, "பிரம்மரிஷி" என்னும் தலைப்பில் திரு. முரசொலி செல்வம் அவர்கள் எழுதிய கட்டுரை, "மாற்றுத்திறனாளிகளின் நலனில் டாக்டர் கலைஞர்" என்னும் தலைப்பில் திரு. நல்லக்கண்ணு அவர்கள் எழுதிய கட்டுரை, "தமிழ் சமூகத்தைச் சீர்திருத்திய கலைஞரின் பகுத்தறிவு" என்னும் தலைப்பில் பேராசிரியர் சுப. வீரபாண்டியன் அவர்கள் எழுதிய கட்டுரை, "இப்போதும் இருக்கிறார் கலைஞர்" என்னும் தலைப்பில் நக்கீரன் கோபால் அவர்கள் எழுதிய கட்டுரை, "கலைஞரைக் கவர்ந்த ஓவியம்" எனும் தலைப்பில் நடிகர் சிவகுமார் அவர்கள் எழுதிய கட்டுரை, "மகளிர் நலனில் கலைஞர்" என்னும் தலைப்பில் திருமதி ஓவியா அவர்கள் எழுதிய கட்டுரை, "கலைஞர் ஆட்சியில் சீர்திருத்தங்கள் ஒரு பார்வை" என்னும் தலைப்பில் புலவர் முத்து வாவாசி அவர்கள் எழுதிய கட்டுரை,

நவீனத் தமிழ்நாட்டின் சிற்பி - கலைஞர் குழுவின் சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆளுமைப் பண்புகள், கலைஞர் கால அரசு கட்டடங்கள், கலைஞர் எழுப்பிய நினைவகங்கள், கலைஞர் வடித்த சிலைகள், நினைவுத்தூண்கள், நினைவுச் சின்னங்கள், கலைஞர் உருவாக்கிய நெடுஞ்சாலைகள் மற்றும் மேம்பாலங்கள், கலைஞர் கால தொழில் புரட்சி,

நிறுவனங்களின் நாயகர் - கலைஞர் குழுவின் சார்பில், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட முன்னோடி நிறுவனங்கள் பற்றிய கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன.

கலைஞர் நூற்றாண்டு நிறைவு மலர் – தொகுதி –3

இந்நூற்றாண்டு மலரில், முத்தமிழறிஞர் கலைஞர் பொதுவாழ்வில் கடந்து வந்த பாதை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு நினைவிட அறிவிப்பு அறிவித்த அறிக்கை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடக் கட்டுமானப் பணிகளைப் பல்வேறு கட்டங்களில் ஆய்வு செய்தவை, முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடம் பொதுமக்கள் பார்வைக்கு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைத்த நிகழ்ச்சி, ஆற்றிய உரை, பத்திரிகைகளின் பார்வையில் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடம் பற்றிய குறிப்புகள், முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடம் தொடர்பான புகைப்படத் தொகுப்புப் பற்றிய ஒரு பார்வை, முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடத்தைப் பார்வையிட்ட பொதுமக்களின் கருத்துக்கள் ஆகியவையும் இடம் பெற்றுள்ளன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவையொட்டிச் சிறப்புப் புகைப்படக் கண்காட்சி, குறும்படத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்

அதனைத் தொடர்ந்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவையொட்டி, செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் அமைக்கப்பட்டிருந்த "கலைஞர் நூற்றாண்டு நிறைவு நினைவலைகள்" சிறப்புப் புகைப்படக் கண்காட்சியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வாழ்க்கை வரலாறு, அரசியல் பயணம், செயல்படுத்திய அரசுத் திட்டங்கள் போன்றவற்றை விளக்கும் குறும்படத்தையும் பார்வையிட்டார்.

தொடர்ந்து, சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச்சிலைக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

முன்னதாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கோபாலபுரம், சி.ஐ.டி. காலனி இல்லத்திற்கும் நேரில் சென்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். மேலும், அண்ணா அறிவாலயம், முரசொலி அலுவலக வளாகங்களில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச்சிலைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

மழைநீர் வடிகால் தூர்வாரும் பணிகள் ஆய்வு

படமும்/செய்தியும்

தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., அவர்கள் 25.05.2024 அன்று பெருநகரச் சென்னை மாநகராட்சி, கோடம்பாக்கம் மண்டலம், வார்டு-132க்குட்பட்ட சுப்ரமணியன் நகரில் உள்ள மழைநீர் வடிகாலில் ரூ.1.20 இலட்சம் மதிப்பில் 685 மீ. நீளத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வண்டல்கள் தூர்வாரும் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மூன்றாண்டு ஆட்சி...
மக்களின் மகிழ்ச்சியே சாட்சி...

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
தலைமையிலான அரசு பொறுப்பேற்று மூன்றாண்டுகள் நிறைவு பெற்று
நான்காவது ஆண்டில் அடியெடுத்து வைப்பதையொட்டி
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் காணொலி உரை

வணக்கம். முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான் - உங்கள் நல்லாதரவையும், நம்பிக்கையையும் பெற்று, நம்முடைய மாநிலத்திற்கு முதலமைச்சராகப் பொறுப்பேற்று மூன்றாண்டுகள் நிறைவு பெற்று நான்காவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் நாள் மே-7.

இந்த மூன்றாண்டு காலத்தில் நான் செய்து கொடுத்த சாதனைகள் - திட்டங்கள் - நன்மைகள் என்னென்ன என்பதை தினந்தோறும், பயனடைந்த மக்களின் முகங்களில் இருக்கும் மகிழ்ச்சியே சாட்சி.

திராவிட மாடல் அரசு செய்துகொடுத்த திட்டங்களை நான் சொல்வதைவிட, பயனடைந்த மக்கள் சொல்வது தான் உண்மையான பாராட்டு!

மகளிர் உரிமைத் திட்டம்

இந்த ஆயிரம் ரூபாய் இருக்கிறது. வேலைக்குப் போனாலும், போகா விட்டாலும் நம்ம பெற்ற பிள்ளை கொடுக்காவிட்டாலும் ஸ்டாலின் எங்களுக்கு மகனாகக் கொடுக்கிறார்.

சுயஉதவிக் குழுவினருக்கான திட்டங்கள்

சுய உதவிக் குழுவினால் முன்னேறி இருக்கிறோம் நாங்கள். ரூ.4 ஆயிரம் முதல் ரூ.5 ஆயிரம்தான் சம்பளம் வாங்கினோம். இன்றைக்கு எனக்கு மட்டும் மாதம் 15 ஆயிரத்திற்கு மேல் வருமானம் வருகிறது.

நினைத்துப் பாருங்கள் ஒரு இலட்சம் கடன் வாங்கினால் வட்டி எவ்வளவு போடுகிறார்கள். நம்முடைய வங்கிக் கணக்கில் பணம் போடுகிறார்கள். குறிப்பிட்ட தேதியில் பணத்தைக் கட்டினால், மீண்டும் அழைத்து கடன் கொடுக்கிறார்கள்.

தோழி விடுதித் திட்டம்

அரசு, மகளிருக்காக விடுதி வசதித் திட்டத்தை செய்துகொடுப்பார்கள் என்று நான் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை. பெண்களை, வேலைக்கு அனுப்புவதே அரிது. வேலைக்குச் செல்லும் போது பாதுகாப்பான இடத்தில் தங்குவதற்கு ஏற்பாடு செய்துகொடுத்திருக்கும் இந்தத் திட்டம் மிகவும் பெரிய விஷயம்.

விடியல் பயணத் திட்டம்

கட்டணமில்லா பேருந்துப் பயணம். நான் சில நேரங்களில் ஜன்னலோரங்களில் அமர்ந்து செல்லும் போது அவருக்கு (முதலமைச்சருக்கு) மனதிலிருந்து நன்றி கூறியுள்ளேன். ஒரு தாயைப் போல நமக்காக இவர் எந்த அளவுக்கு யோசித்து இருக்கிறார். அவருக்கு மனமார்ந்த நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.



முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்

எனது மகள் காலையில் சாப்பிடுவதற்கு அடம்பிடிப்பாள். இப்போதெல்லாம் காலையில் உணவை விரும்பிச் சாப்பிடுகிறாள். அதுவும் சிறுதானிய உணவு வழங்குவதால் குழந்தைகள் அதிகம் விரும்பிச் சாப்பிடுகிறார்கள். குழந்தைகளுக்கு ஊட்டச்சத்தும் அதிகமாகக் கிடைக்கிறது.

சுய தொழில் கடனுதவித் திட்டம்

நாங்கள் இதுவரைக்கும் ஒரு தொழிலாளியாக இருந்தோம். ஆட்டோ முதன்முதலில் வாங்கும் போது ஒரு முதலாளியாக மாறியுள்ளோம்.

நான் முதல்வன் திட்டம்

எனது அப்பா நான் பன்னிரெண்டாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தபோது கேன்சரால் உயிரிழந்துவிட்டார். அதற்குப்பிறகு எனது அம்மாதான் எனது தேவைகள் அனைத்தையும் பார்த்துக்கொண்டார். முதலமைச்சரின் கனவுத் திட்டமான நான் முதல்வன் திட்டத்தை அறிமுகம் செய்தார்கள். இன்றைக்கு அந்தக் கனவு நனவாகி விட்டது என்று நினைக்கிறேன். இந்தத் திட்டங்கள் எல்லாம் தான் நாளைய இந்தியாவை வடிவமைக்கும் என்று நான் நினைக்கிறேன்.

புதுமைப் பெண் திட்டம்

என்னுடைய அப்பா மிகவும் கஷ்டப்பட்டு என்னை வளர்த்து வந்தார். மாதா மாதம் ஆயிரம் ரூபாய் உதவித்தொகை என்பது மிகவும் உதவியாக இருக்கிறது. அந்த உதவித்தொகையை வைத்துதான் துணிமணிகளை வாங்கி வருகிறோம்.

திருநங்கையர்களுக்கான நலத்திட்ட உதவிகள்

எங்களுக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 3 செண்ட் இடம் கொடுத்து ஒரு தனி வீடும் கட்டிக் கொடுத்துள்ளார்கள்.

குடும்பத் தலைவிகளுக்குப் புதிய ரேஷன் கார்டு

என்னுடைய கணவர் என்னை விட்டுப் பிரிந்து சென்றுவிட்டார். 8 வருடங்களுக்கு முன்பு என்னுடைய ரேஷன் கார்டு, அடையாள அட்டைகளை எடுத்துச் சென்று விட்டார். ஐந்தே நிமிடத்தில் குடும்பத்தலைவர் என்ற அவருடைய பெயரை நீக்கிவிட்டு, என்னுடைய பெயரையும், என்னுடைய மகனின் பெயரையும் பதிவு செய்து புதிய ரேஷன் கார்டு கொடுத்தார்கள்.

மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்திட்ட உதவிகள்

பீச் சாலையில் செல்லும் போது அவ்வளவு ஆசையாக இருக்கும். கடற்கரையில் காலை நனைக்க வேண்டும், குடும்பத்தோடு மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்று அவ்வளவு ஆசையாக இருக்கும். அதற்கு ஒரு நிரந்தரத் தீர்வாக மரத்திலான பாதை அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள்.

உளப்பூர்வமான வாழ்த்து

"ஸ்டாலின் என்றால் உழைப்பு - உழைப்பு - உழைப்பு!" என்று சொன்னார் எங்களையெல்லாம் உருவாக்கிய அன்புத்தலைவர் கலைஞர்!

இந்த மூன்றாண்டுக் காலத்தில் ஸ்டாலின் என்றால் செயல் - செயல் - செயல் என நிரூபித்துக் காட்டியுள்ளேன்!

எப்பொழுதும் நான் சொல்வது, இது எனது அரசு அல்ல. நமது அரசு. அந்த வகையில் நமது அரசு நான்காவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. நாடும் மாநிலமும் பயனுற எந்நாளும் நான் உழைப்பேன் என உறுதியேற்று ஆட்சிப் பயணத்தை உங்கள் வாழ்த்துக்களுடன் தொடர்கிறேன்!

நன்றி, வணக்கம்!

தமிழ்நாடு முழுவதும் நடத்தப்பட்ட 2,058 முகாம்களில், 3,50 இலட்சம் மனுக்களுக்குத் தீர்வு கண்ட

“மக்களுடன் முதல்வர் திட்டம்”

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 16.02.2024 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் முதல்வரின் முகவரித் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், “மக்களுடன் முதல்வர்” திட்டத்தில் மாநிலம் முழுவதும் நடத்தப்பட்ட 2,058 முகாம்களில், 3.50 இலட்சம் மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டு, இத்திட்டத்தில் பயன்பெற்ற பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். மேலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தெரிவு செய்யப்பட்ட 1,598 இளைஞர்களுக்கு அரசுப் பணிக்கான பணி நியமன ஆணைகளையும் வழங்கினார்.

"மக்களுடன் முதல்வர்" திட்டத்தில் பயன்பெற்ற பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்

அரசுத் துறைகளை அன்றாடம் அணுகும் பொதுமக்களுக்கு, அரசின் சேவைகள் விரைவாகவும், எளிதாகவும் அவர்களைச் சென்று சேரும் வகையிலும், நிருவாகத்தில் வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்திடவும், திராவிட மாடல் ஆட்சியின் மற்றுமொரு

> **பயனாளி**
>
> திருமதி வளர்மதி அவர்கள் தனது வாழ்வாதாரம் உயர்ந்திட வழிவகை செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துப் பாராட்டு...

மைல்கல்லாக “மக்களுடன் முதல்வர்” என்ற புதிய திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 18.12.2023 அன்று கோயம்புத்தூர் மாவட்டம், ஆவாரம்பாளையத்தில் தொடங்கி வைத்தார்.

“மக்களுடன் முதல்வர்” என்ற இப்புதிய திட்டத்தின்கீழ், பொதுமக்கள் அதிகமாக அணுகும் எரிசக்தித் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, ஊரக வளர்ச்சித், துறை, நகராட்சி நிருவாகத் துறை, ஆதிதிராவிடர் நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, காவல்துறை, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, தொழிலாளர் நலன்

மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, கூட்டுறவுத் துறை, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை ஆகிய 13 அரசுத் துறைகள் சார்ந்த கோரிக்கைகளைப் பெற்றுத் தீர்வு காண்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நேரடிக் கண்காணிப்பில், அனைத்து நகர்ப்புற, கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளில் வார்டு, கிராம ஊராட்சி அளவில், அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன.

அனைத்துத் தரப்பு மக்களுக்கும் மேற்கண்ட 13 அரசுத் துறைகளின் சேவைகள் எளிதில் கிடைத்திடவும், தாமதங்களைத் தவிர்த்திட வேண்டும் என்பதும்தான் இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

"மக்களுடன் முதல்வர்" திட்டத்தின் முதற்கட்டமாக அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், நகர்புறங்களை ஒட்டியுள்ள கிராம ஊராட்சிகளில் சுமார் 2,058 முகாம்கள் நடத்தப்பட்டன. அடுத்தகட்டமாக அனைத்து மாவட்டங்களில் உள்ள ஊரகப் பகுதிகளில் முகாம்கள் நடத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போது நடைபெற்ற முகாம்கள் வாயிலாக இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 3.50 இலட்சம் மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளன.

இவற்றில் குறிப்பாக,

- வருவாய்த்துறை மூலமாக 42,962 பட்டா மாறுதல்கள், 18,236 நபர்களுக்கு உதவித் தொகைகள்;
- எரிசக்தித் துறை / மின்சார வாரியம் மூலமாக 26,383 நபர்களுக்குப் புதிய மின் இணைப்புகள்/ பெயர் மாற்றங்கள்;
- நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மூலமாக 37,705 நபர்களுக்கு வரிவிதிப்பு / குடிநீர் / கழிவுநீர் இணைப்பு / கட்டட அனுமதி / பிறப்பு, இறப்புப் பதிவுகள்;
- ஆதிதிராவிடர் நலத்துறை மூலமாக ரூ.62.60 இலட்சம் மதிப்பில் 435 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா / தையல் இயந்திரம் / கடனுதவிகள்;
- மகளிர் மேம்பாட்டுத் துறை மூலமாக ரூ.1.42 கோடி மதிப்பில் 23 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் வழங்குதல்;
- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை மூலமாக 1,190 நபர்களுக்கு ரூ.60.75 கோடி மதிப்பில் தொழில் கடன் உதவி வழங்குதல்;
- சமூக நலத்துறை மூலமாக 1,768 நபர்களுக்கு தையல் இயந்திரம் / பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் / புதுமைப்பெண் திட்டப் பயன்கள் வழங்குதல்;
- மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலமாக ரூ.9.46 கோடி மதிப்பில் 3,659 நபர்களுக்கு மூன்று சக்கர வாகனம் / கடன் உதவிகள் / உபகரணங்கள் / அடையாள அட்டைகள் வழங்குதல்;
- கூட்டுறவுத்துறை மூலமாக ரூ.6.66 கோடி மதிப்பில் 766 நபர்களுக்குக் கடன் உதவி வழங்குதல்;
- தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை மூலமாக 15,504 நபர்களுக்கு நல வாரிய உறுப்பினர் அட்டை / ஓய்வூதியங்கள் வழங்குதல்;
- பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை மூலமாக ரூ.2.10 கோடி மதிப்பில் 3,376 நபர்களுக்குத் தையல் இயந்திரம் / தேய்ப்பு பெட்டி வழங்குதல்;

இவ்வாறு 'மக்களுடன் முதல்வர்' திட்ட முகாம்கள் வாயிலாகப் பயனடைந்த பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கிடும் அடையாளமாக 15 பயனாளிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 16.02.2024 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். பிற மாவட்டங்களில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களாலும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களாலும் இத்திட்டத்தின்கீழ் நலத்திட்ட உதவிகள் பயனாளிகளுக்கு வழங்கப்படுகின்றன.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தெரிவுச் செய்யப்பட்ட 1,598 இளைஞர்களுக்கு அரசுப் பணிக்கான பணி நியமன ஆணைகள் வழங்குதல்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில் 44 உதவி ஜெயிலர் பணியிடங்கள், கால்நடை பராமரிப்புத் துறையில் 697 கால்நடை உதவி அறுவைச் சிகிச்சை மருத்துவர் பணியிடங்கள், புவியியல் மற்றும் சுரங்கத்துறையில் 29 உதவி புவியியலாளர் பணியிடங்கள், பொதுப்பணித் துறையில் 11 உதவிப் புவியியலாளர் பணியிடங்கள், 302 உதவிப் பொறியாளர் (சிவில்) பணியிடங்கள், நெடுஞ்சாலைத் துறையில் 32 உதவிப் பொறியாளர் (சிவில்) பணியிடங்கள், நீர்வளத்துறையில் 201 உதவிப் பொறியாளர் (சிவில்) பணியிடங்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் 93 உதவிப் பொறியாளர் (சிவில்) பணியிடங்கள், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தில் 63 உதவிப் பொறியாளர் (சிவில்)

பணியிடங்கள், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில் 12 உதவிப் பொறியாளர் (சிவில்) பணியிடங்கள், வேளாண்மைப் பொறியியல் துறையில் 65 உதவிப் பொறியாளர் பணியிடங்கள், போக்குவரத்துத் துறையில் 5 ஆட்டோமொபைல் பொறியாளர் பணியிடங்கள், 7 ஜென்ரல் போர்மேன் பணியிடங்கள், 11 தொழில்நுட்ப உதவியாளர் பணியிடங்கள், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறையில் 18 உதவி இயக்குநர் (தொழில் பாதுகாப்பு) பணியிடங்கள், மின்சாரத் துறையில் 8 இளநிலை மின் ஆய்வாளர் பணியிடங்கள், என மொத்தம் 1,598 பணியிடங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட இளைஞர்களுக்கு அரசுப் பணிக்கான பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 10 நபர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இத்திட்டத்தின்கீழ், காணொலிக் காட்சி வாயிலாக விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டையைச் சேர்ந்த பெண் பயனாளி திருமதி வளர்மதி ரத்னகுமார் அவர்கள் பேசும்போது,

கடந்த டிசம்பர் மாதம் எங்கள் ஊரில் "மக்களுடன் முதல்வர்" சிறப்பு முகாம் நடைபெற்றது, அதுவும் என் வீட்டிற்கு அருகாமையிலே நடைபெற்றது. அங்கு நான் சென்று சானிடரி நாப்கின் தயார் செய்திட மானியத்துடன் கூடிய வங்கி கடனுதவி கேட்டு மனு கொடுத்திருந்தேன். கொடுத்த உடன் என்னுடைய மனுவை இணையதளத்தில் பதிவு செய்து விட்டார்கள். மூன்றே நாட்களில் மாவட்ட தொழில் மையத்திலிருந்து தொடர்பு கொண்டு என்னை நேர்முகத் தேர்வுக்கு அழைத்து, எடுத்து வரவேண்டிய ஆவணங்கள் குறித்துத் தெளிவாக எடுத்துச்சொன்னார்கள். நான் அதையெல்லாம் எடுத்துச் சென்று நேர்முகத் தேர்வில் கலந்து கொண்டேன். ஆவணங்களை எல்லாம் சரிபார்த்து, உடனடியாக என்னுடைய வங்கிக்கு கடிதம் அனுப்பினார்கள். மனு கொடுத்த ஒரு மாதத்திலேயே எனக்கு இரண்டரை இலட்சம் ரூபாய் மானியத்துடன் 10 இலட்சம் ரூபாய்க்கான வங்கிக் கடனுதவி பெற்றேன். மக்களுடன் முதல்வர் திட்டத்தின் பயனால் நான் ஒரு தொழில்முனைவோராக உருவாகியுள்ளேன். இதன்மூலம் எனது குடும்பத்தின் பொருளாதாரமும், வாழ்வாதாரமும் உயர்ந்திட வழிவகை செய்து கொடுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்குப் பயனாளிகள் சார்பாகவும், எனது குடும்பத்தின் சார்பாகவும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என்று தெரிவித்தார்.

உங்கள் நலன் காக்கும் "நீங்கள் நலமா" திட்டம்

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, நாள்தோறும் பார்த்துப் பார்த்து எத்தனையோ முத்திரைத் திட்டங்களைத் தொடங்கியுள்ளோம். அப்படியொரு திட்டம்தான் இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ள 'நீங்கள் நலமா?' என்ற புதிய திட்டம்!

புதிய திட்டத்தின் இந்தத் தலைப்பே, மக்களின் மீதான எங்களது கனிவான சிந்தனையை, அன்பான அக்கறையைக் காட்டும். தமிழ்நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் நலமாக இருக்க வேண்டும் எனபதுதான் இந்தத் திட்டத்தின் முதன்மையான நோக்கம். மக்கள் நல்வாழ்வுக்காக வகுக்கப்படும் திட்டங்களின் பயன்கள் உங்களுக்கு வந்து சேர்வதை உறுதி செய்வதற்காக இந்த "நீங்கள் நலமா" என்ற திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளேன்.

இதற்கு முன்பு தொடங்கி வைத்து மக்களின் வாழ்வினை மேம்படுத்திக் கொண்டிருக்கும் திட்டங்களைப் பட்டியலிட வேண்டுமென்றால்,

- மகளிர் விடியல் பயணம்,
- புதுமைப் பெண்,
- முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
தொடங்கி வைத்தார் - 06.03.2024

- கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்,
- இல்லம் தேடிக் கல்வி,
- மக்களைத் தேடி மருத்துவம்,
- ஒலிம்பிக் தேடல்,
- நான் முதல்வன்,
- உங்கள் தொகுதியில் முதலமைச்சர்,
- முதல்வரின் முகவரி,
- கள ஆய்வில் முதலமைச்சர்

- என இப்படி நான் அடுக்கிக்கொண்டே இருக்க முடியும். இந்தத் திட்டங்கள் அனைத்தும் கோடிக்கணக்கான மக்களை மகிழ்வித்து வரும் திட்டங்கள். இவை அனைத்தையும் தொகுத்துப் பார்த்தால் அது ஒவ்வொரு குடும்பத்தையும் - ஒவ்வொரு தனிமனிதரையும் மேம்படுத்தும் திட்டங்களாகும்.

நமது திராவிட மாடல் அரசால் அறிவிக்கப்பட்ட திட்டங்களால் பலன் அடையாதவரே இல்லை. நான் செல்லும் இடங்களில் எல்லாம் என்னைச் சந்திக்கும் மக்கள் முகங்களில் பார்க்கும் மகிழ்ச்சியில் இத்திட்டங்களின் வெற்றியைக் காண்கிறேன்.

பயன்பெற்ற மக்களின் புள்ளிவிவரம் எனப் பார்த்தால்,

- "கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின்" மூலம் ஒரு கோடியே 15 இலட்சத்து 16 ஆயிரத்து 292 மகளிர் ஒவ்வொரு மாதமும் ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகையாகப் பெறுகிறார்கள்.
- "விடியல் பயணத் திட்டம்" மூலம் மகளிர் 445 கோடி முறை பயணித்து மாதம் ரூ.888 வரை சேமித்துப் பயனடைகின்றனர்.
- "மக்களைத் தேடி மருத்துவம்" திட்டத்தால் ஒரு கோடிப் பேர் இதுவரை பயனடைந்து உள்ளனர்.
- முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தில் நாள்தோறும் 16 இலட்சம் மாணவர்கள் வயிறார காலைச் சிற்றுண்டி உண்கிறார்கள்.
- மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் பெயரிலான "புதுமைப்பெண்" திட்டத்தின் பயனாக 4 இலட்சத்து 81 ஆயிரத்து 75 மாணவிகள் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் பெற்றுப் பட்டதாரிகளாக உருவாகப் போகிறார்கள்.
- 'நான் முதல்வன்' திட்டத்தில் 2 ஆண்டுகளில், 28 இலட்சம் இளைஞர்கள் தங்களது திறனை மேம்படுத்திப் பயனடைந்துள்ளனர்.
- 'இல்லம் தேடிக் கல்வி' திட்டத்தில் 24 இலட்சத்து 86 ஆயிரம் பள்ளிக் குழந்தைகள் பயனடைந்திருக்கிறார்கள்.
- 62 இலட்சத்து 40 ஆயிரம் குடும்பங்கள் புதிய குடிநீர் இணைப்பைப் பெற்றுள்ளனர்.
- 2 இலட்சம் உழவர்கள் புதியதாக இலவச மின் இணைப்புப் பெற்றுள்ளார்கள்.
- உயர்த்தப்பட்ட ஓய்வூதியத்தில் 30 இலட்சம் முதியோரும், 5 இலட்சம் மாற்றுத்திறனாளிகளும் மாதந்தோறும் பயனடைகின்றனர்.
- 'நம்மைக் காக்கும் 48' திட்டத்தால் 2 இலட்சம் பேரின் உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன.
- 'முதல்வரின் முகவரி' திட்டத்தினால் 19 இலட்சத்து 69 ஆயிரம் பேர் பயனடையும் வகையில் மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது.
- 'மக்களுடன் முதல்வர்' திட்டத்தின் மூலமாக, 3 இலட்சத்து 40 ஆயிரம் மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது.

இப்படி, தமிழ்நாட்டில் வாழும் ஒவ்வொரு குடும்பமும் பயனடையும் வகையில் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வெற்றி கண்டுள்ளது நமது திராவிட மாடல் அரசு.

எங்களை சிலர் குடும்ப ஆட்சி என்று சொல்கிறார்கள். ஆம் இது குடும்ப ஆட்சிதான்! தமிழ்நாட்டின் ஒவ்வொரு குடும்பத்தையும் கை தூக்கிவிடும் ஆட்சி இது!

ஆட்சிக்கு வந்த ஓராண்டுக் காலத்தில் ஏராளமான மனுக்கள் என்னைத் தேடித் தேடி வழங்கப்பட்டது. அப்படி வழங்கப்பட்ட கோரிக்கைகளை நமது அரசு நிறைவேற்றிக் கொடுத்த காரணத்தால் – இப்போது நான் செல்லும் பயணங்களில் மக்களின் கைகளில் மனுக்களைக் காண முடியவில்லை; மாறாக, அவர்களது முகங்களில் மகிழ்ச்சியைக் காண்கிறேன்!

இன்னும் சொல்ல வேண்டுமென்றால், பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள், "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்!" என்றாரே, அதனைத்தான் இப்போது மக்களின் முகங்களில் காண்கிறேன்.

அந்த மகிழ்ச்சியை மேலும் உறுதிசெய்ய இப்போது துவங்கப்பட்டுள்ளதுதான், "நீங்கள் நலமா?" என்ற திட்டம். இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கென உருவாக்கப்பட்ட வலைத்தளத்தை நான் இன்று தொடங்கி வைத்து ஒரு சில பயனாளிகளிடம் உரையாடி

அவர்களின் கருத்துகளைக் கேட்டறிந்தபோது உளம் மகிழ்ந்தேன். ஒவ்வொரு குடும்பத்தினரது குரலையும் கேட்டு அவர்களது குறைகளைப் போக்கும் அரசாக திராவிட முன்னேற்றக் கழக அரசு செயல்பட்டு வருகிறது.

அதேபோல அமைச்சர்கள், உயர் அலுவலர்கள், மாவட்ட ஆட்சியர்கள் ஆகியோரும் உங்களிடம் கலந்துரையாடி நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் நலத்திட்டங்கள் குறித்துக் கருத்துகளைப் பெற்று, அதனடிப்படையில் அரசின் சேவைகளை மேம்படுத்துவதற்கான வழிவகைகள் உருவாக்கப்படும்.

தமிழ்நாடு அரசின் நலத்திட்டங்கள் குறித்து உங்களிடமிருந்து பெறப்படும் கருத்துகள் இந்த வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்படும். கோட்டையில் உட்கார்ந்து திட்டங்கள் தீட்டி அறிவிப்பதோடு எனது கடமை முடிந்து விட்டதாக நான் எப்போதும் நினைப்பது இல்லை. ஒவ்வொரு திட்டமும் எந்த நோக்கத்துக்காக அறிவிக்கப்பட்டதோ - அந்த நோக்கம் நிறைவேற்றப்பட்டு வருகிறதா? என்பதுதான் எனக்கு முக்கியம்!

ஏனென்றால் ஒவ்வொரு திட்டமும் பல்லாயிரம் கோடி ரூபாய் மதிப்பிலானவை. கடுமையான நிதி நெருக்கடிச் சூழலில் நிறைவேற்றப்படுபவை. ஆகவே, ஒதுக்கப்படும் நிதி ஒவ்வொரு குடிமகனையும் சென்று சேர வேண்டும்; நலத்திட்டம் ஒரு ரூபாய் என்றாலும் அது உங்களிடம் வந்து சேர வேண்டும் என்று நினைத்துத் திட்டங்களைத் தீட்டுபவன் நான்.

அதேசமயம், ஒன்றிய அரசின் ஓரவஞ்சனையால் தமிழ்நாட்டுக்கு வர வேண்டிய நிதி உதவிகள் படிப்படியாகக் குறைக்கப்பட்டு வருவதை நான் அதிகம் விளக்கத் தேவையில்லை.

சில நாட்களுக்கு முன்னால் சென்னைக்கு வந்து பேசிய மாண்புமிகு பிரதமர் மோடி அவர்கள், மாநில அரசுக்குத் தராமல் மக்களுக்கு நேரடியாக நிதி வழங்கி வருவதாக அப்பட்டமான ஒரு பொய்யைச் சொல்லி விட்டுச் சென்றுள்ளார்கள். எந்த மக்களுக்குக் கொடுத்தார் என்பதைச் சொல்லி இருந்தால் அந்த மக்களுக்குக் கிடைத்ததா? என்று கேட்கலாம்.

இரண்டு மாபெரும் இயற்கைப் பேரிடரை எட்டு மாவட்டத்து மக்கள் சந்தித்தார்கள். இதற்காக 37 ஆயிரம் கோடி ரூபாய் நிதி கேட்டோம். அதற்கு ஒரு ரூபாயையாவது ஒதுக்கி, தமிழ்நாட்டு மக்களுக்கு உதவி செய்தாரா பிரதமர்? இப்படியா பொய்களைச் சொல்வது?

ஒன்றிய அரசிடம் இருந்து நிதி வரவில்லை என்றாலும் இந்த எட்டு மாவட்டத்து மக்களுக்காக, மாநிலப் பேரிடர் நிதி மற்றும் அரசுத் துறைகளில் இருந்து ரூ.3,406.77 கோடி அளவுக்கு நிதி வழங்கியும், நிவாரணப் பணிகளைச் செய்தும் மக்கள் நலம் காத்துவரும் அரசுதான் இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அரசு.

உங்கள் ஒவ்வொருவர் நலமே எனது நலம்! திராவிட மாடல் அரசின் நலம்! தாய்த்திருத் தமிழ்நாட்டின் நலம்!

அந்த நலனைக் காக்கவே நான் உழைக்கிறேன் என்பதன் மற்றுமோர்

அடையாளமாகத்தான் இந்த 'நீங்கள் நலமா' திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளேன்.

உங்கள் அரசு என்றும் உங்கள் ஒவ்வொருவருக்காகவும் தொடர்ந்து உழைத்துக் கொண்டே இருக்கும் என்று உறுதி அளிக்கின்றேன்.

"நீங்கள் நலமா" என்ற புதிய திட்டம்

முதல்வரின் முகவரி துறையின்கீழ், பயனாளிகளைத் தொடர்பு கொண்டு அரசின் நலத்திட்டங்கள் குறித்த கருத்துக்களைக் கேட்டறியும் புதுமையான திட்டமான "நீங்கள் நலமா" என்ற திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 06.03.2024 அன்று முகாம் அலுவலகத்திலிருந்து தொடங்கி வைத்தார். பின்னர், பயனாளிகளிடம் நேரடியாகத் தொலைபேசியில் தொடர்புகொண்டு அவர்களின் கருத்துகள், அரசு நலத்திட்டங்கள் குறித்த பின்னூட்டங்களைக் கேட்டறிந்தார்.

தமிழ்நாட்டு மக்களின் நலன் கருதி, அனைத்துத் தரப்பு மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் பல்வேறு புதிய திட்டங்களை அறிவித்து, செயல்படுத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அரசின் திட்டங்கள், சேவைகள் உரிய காலத்தில் பொதுமக்களுக்குச் சென்று சேர்வதை உறுதிசெய்ய வேண்டியது ஒவ்வொரு அலுவலரின் பொறுப்பாகும் என்பதை எப்போதும் வலியுறுத்தி வருகிறார்.

அவ்வகையில், தமிழ்நாடு அரசு ஏழை, எளிய விளிம்பு நிலையில் உள்ள பொதுமக்கள் பயனடைந்திட, ஆணுக்கிங்கே பெண் நிகர் என்னும் சமத்துவப் பாதையில் குடும்பத் தலைவிகளின் உழைப்புக்கு அங்கீகாரம் அளித்து மாதந்தோறும் ரூ.1,000/- வழங்கிடும் "கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்", ஏழை, எளிய பெண்களின் உயர்கல்வியை ஊக்குவித்து உறுதி செய்திடும் "புதுமைப் பெண் திட்டம்", உலகை வெல்லும் இளைய தமிழகத்தை உருவாக்கிட கல்லூரிப் படிப்புடன் வேலைவாய்ப்புக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை வழங்கிடும் "நான் முதல்வன் திட்டம்", மாபெரும் சமூக மாற்றத்திற்கான புதிய தொடக்கமாகப் பள்ளி செல்லும் குழந்தைகள் களைப்பின்றிப் பயில "முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்", பேருந்துகளில் மகளிர் கட்டணமில்லாமல் பயணம் செய்திட "விடியல் பயணம் திட்டம்", மாநிலம் முழுவதும் வேறு மாவட்டங்களிலிருந்து வந்து நகரங்களில் தங்கிப் பணிபுரியும் பெண்களின் நலன், பாதுகாப்பிற்காகத் "தோழி" தங்கும் விடுதிகள், போன்ற பல்வேறு திட்டங்கள் சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இதுபோன்ற மக்கள் நலத்திட்டங்கள் அனைத்தும் உரியவர்களுக்கு சென்று சேர்வதை உறுதி செய்யும் நோக்குடன், மக்கள், அரசுக்கிடையேயான இடைவெளியைக் குறைத்திடும் வகையில் மக்களின் கருத்துகள், பின்னூட்டங்களைப் பெறும், "நீங்கள் நலமா" என்ற புதிய திட்டம் தொடங்கப்படும் என்று மயிலாடுதுறையில் 04.03.2024 அன்று நடைபெற்ற அரசு விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்.

இத்திட்டம் முதல்வரின் முகவரித்துறையால் செயல்படுத்தப்படும். முதற்கட்டமாக, அரசுத் துறைகளின் செயல்பாட்டில் உள்ள முக்கியமான நலத் திட்டங்களில் பயன்பெற்ற பயனாளிகளிடம் இருந்து கருத்துகள் மற்றும் பின்னூட்டம் பெறப்படும். அதனடிப்படையில், நலத் திட்டங்களின் பயன்கள் மக்களுக்குச் சென்று சேர்வதை உறுதி செய்வது மட்டுமல்லாமல், அரசு வழங்கிடும் சேவைகளின் தரத்தினை மேம்படுத்த வழிவகைகள் மேற்கொள்ளப்படும். அதன் அடுத்தகட்டமாகப் பொதுமக்களுக்கு அரசுத் துறைகளால் வழங்கப்படும் இதர சேவைகளின் மீதும் கருத்துகள், பின்னூட்டங்கள் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இத்திட்டத்தின்கீழ்ப் பெறப்படும் பின்னூட்டங்கள் இதற்கென உருவாக்கப்படும் "நீங்கள் நலமா" வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்படும். இவ்வலைத்தளம் மக்களின் கருத்துகளைப் பெறும் ஒரு திறந்தவெளி அமைப்பாகச் செயல்படும். மேலும், இவ்வலைத்தளத்தில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அனைத்து அரசுத் திட்டங்கள் குறித்த விவரத் தொகுப்பு பதிவேற்றம் செய்யப்பட்டு வெளியிடப்படும்.

“நீங்கள் நலமா” என்ற புதியதொரு திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் தொடங்கி வைத்து, “கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில்” பயன்பெற்ற சிவகங்கை மாவட்டம், நெற்குப்பையைச் சேர்ந்த திருமதி தனலட்சுமி அவர்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொண்டு பேசினார். அப்போது திருமதி தனலட்சுமி அவர்கள், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் தொகை தனக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது என்று தெரிவித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

தொடர்ந்து, “முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தில்” பயன்பெற்று வரும் திருவள்ளூர், சோரஞ்சேரி, ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் இரண்டாம் வகுப்புப் பயின்று வரும் சிறுவன் பவனேஷின் தந்தை திரு. பிரபு அவர்களிடம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொண்டு பேசினார். அப்போது அச்சிறுவனின் தந்தை, மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவு தரமானதாக உள்ளது என்றும், பள்ளிக்குச் செல்வதில் மிகுந்த ஆர்வம் காட்டுவதோடு தனது மகன் மிகவும் ஆரோக்கியமாக இருப்பதாகவும் தெரிவித்தார். மகனுக்குக் காலை உணவு தயார் செய்ய வேண்டிய நிலை இல்லாத காரணத்தால் எனது மனைவியும் தற்போது பணிக்குச் செல்கிறார் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்தார்.

“நான் முதல்வன்” திட்டத்தின்கீழ், UPSC போட்டித் தேர்விற்கான நேர்முகத் தேர்வுப் பயிற்சி பெற்றுவரும் செங்கல்பட்டு மாவட்டம், மேற்கு தாம்பரத்தைச் சேர்ந்த திரு. கதிரவன் அவர்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொண்டு பேசினார். அப்போது, திரு. கதிரவன் அவர்கள், 2019ஆம் ஆண்டு BE Civil Engineering முடித்து, குடிமைப்பணி தேர்வுக்காகப் படித்துக் கொண்டு வருவதாகவும், தற்போது UPSC (Main Exam) முதன்மைத் தேர்வில் தேர்ச்சிப் பெற்று, அடுத்ததாக நேர்முகத் தேர்விற்கு பயிற்சி பெற்று வருவதாகவும் தெரிவித்தார். மேலும், “நான் முதல்வன்” திட்டத்தின் மூலம் அரசால் வழங்கப்படும் உதவித்தொகை பெற்று வருவதால் கவலையின்றிப் படித்து வருவதாகவும், இத்திட்டத்தினை கிராமப்புற மாணவர்களும் அறிந்துகொண்டு, அதிகளவில் பயன்பெற வேண்டும் என்பது தனது விருப்பம் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்தார்.

“புதுமைப் பெண்” திட்டத்தின்கீழ்ப் பயன்பெற்ற செங்கல்பட்டு மாவட்டம், கடப்பாக்கத்தைச் சேர்ந்த மாணவி நஸ்ரின் அவர்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொண்டு பேசினார். அப்போது, மாணவி நஸ்ரின், தற்போதுதான் ராஜேஸ்வரி கலை மற்றும் அறிவியல் பெண்கள் கல்லூரியில் BA (ஆங்கிலம்) இரண்டாம் ஆண்டு பட்டப் படிப்பு படித்து வருவதாகவும், புதுமைப் பெண் திட்டத்தின் மூலம் கிடைக்கும் தொகையைக் கொண்டு தனது படிப்பிற்குத் தேவையான செலவுகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

பணிபுரியும் மகளிருக்கான விடுதித் திட்டமான “தோழி” திட்டத்தின்கீழ் அடையார் தோழி விடுதியில் தங்கிப் பயன்பெற்றுவரும் சீர்காழியைச் சேர்ந்த திருமதி ஸ்வாதி முரளி அவர்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொண்டு பேசினார். அப்போது, திருமதி ஸ்வாதி முரளி அவர்கள், தங்கும் விடுதி ஆரோக்கியமானதாகவும், சுகாதாரமாகவும் இருப்பதாகவும், விடுதிப் பாதுகாவலர் கனிவோடு அனைவரையும் நடத்துவதாகவும் தெரிவித்தார். மேலும், தனியார் மகளிர் விடுதியைவிட மிகக் குறைந்த கட்டணத்தில், அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளதாகவும், மிகவும் பாதுகாப்பாக உணர்வதாகவும் தெரிவித்தார்.

“தோழி” விடுதிகளைப் பெண்கள் பயன்பெறும் வகையில் ஒரு நல்வாழ்வு மகத்துவ மையமாக (Wellbeing Centre) மாற்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் திருமதி ஸ்வாதி முரளி கோரிக்கை விடுத்தார். அவரது கோரிக்கையை ஏற்று உடனடியாக ஆவன செய்வதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதியளித்தார்.

முதலமைச்சரின் தனிப்பிரிவில் காணாமல் போன தனது மகளைக் கண்டுபிடித்துத் தருமாறு மனு சமர்ப்பித்துக் காவல்துறையின் சிறப்பான செயல்பாடுகளால் பயன்பெற்ற திருத்தணியைச்

சேர்ந்த திரு.ஜெ.கே.குமார் அவர்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொண்டு பேசினார். அப்போது திரு.குமார் அவர்கள் காணாமல் போன தனது மகள் காவல்துறையினரால் கண்டுபிடிக்கப்பட்டுச் சிறுவர் இல்லத்தில் பாதுகாப்பாகச் சேர்க்கப்பட்டு, பின்னர் தன்னிடம் பாதுகாப்பாக ஒப்படைக்கப்பட்டார் என்று தெரிவித்தார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திரு.குமார் அவர்களிடம், மாணவிகளுக்காக அரசு அறிவித்துச் செயல்படுத்தி வரும் திட்டங்களை நல்ல முறையில் பயன்படுத்தி, மகளை நன்றாகப் படிக்க வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இத்திட்டத்தின்கீழ்ப் பயன்பெற்ற பயனாளிகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து பாராட்டு

முதல்வரின் முகவரித் துறையின்கீழ் பயனாளிகளைத் தொடர்பு கொண்டு அரசின் நலத்திட்டங்கள் குறித்த கருத்துக்களைக் கேட்டறியும் புதுமைத் திட்டமான "நீங்கள் நலமா" திட்டத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 06.03.2024 அன்று தொடங்கி வைத்துப் பயனாளிகளிடம் நேரடியாகத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, மக்கள் நலத்திட்டங்கள் குறித்து அவர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்தார். அதனைத் தொடர்ந்து, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அனைத்துத் துறைச் செயலாளர்கள், துறைத் தலைவர்கள், மாவட்ட ஆட்சியர்கள் ஆகியோர் பயனாளிகளை தொடர்பு கொண்டு துறைவாரியாக நலத்திட்டங்கள் குறித்த கருத்துக்களைக் கேட்டறிந்தார்கள்.

அதன் தொடர்ச்சியாக, 16.03.2024 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முகாம் அலுவலகத்திலிருந்து பல்வேறு பயனாளிகளை நேரடியாகக் காணொலி வாயிலாகத் தொடர்பு கொண்டு அவர்களின் கருத்துகள், அரசு நலத்திட்டங்கள் குறித்த அவர்களது பின்னூட்டங்களைக் கேட்டறிந்தார்கள்.

அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடித் திட்டத்தின்கீழ்ப் பயன்பெற்ற மதுரை, தெப்பக்குளத்தைச் சேர்ந்த திரு. சி.விஜய் ஆனந்த் அவர்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலி வாயிலாகத் தொடர்பு கொண்டு பேசி, அவர் இத்திட்டத்தின் மூலம் பெற்ற நன்மைகள் குறித்து வினவினார்.

அப்போது, திரு.விஜய் ஆனந்த் அவர்கள் அரசின் அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடித் திட்டத்தைப்பற்றி அறிந்து, அதன்மூலமாக மருத்துவமனைக்கான உபகரணங்கள் வாங்கிட தொழில் கடன் பெற்றதாகத் தெரிவித்தார். மேலும், தொழில் கடன் வேண்டி இத்திட்டத்தின்கீழ் விண்ணப்பித்தவுடன் உடனடியாக அது பரிசீலிக்கப்பட்டு, வங்கியில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் குறித்த தகவல்களைத் தெரிவித்து, அனைத்து உதவிகளையும் செய்து கொடுத்து, எவ்வித தடங்கலுமின்றி விரைவாக 5 கோடி ரூபாய் வங்கிக் கடன் பெற்று, அதன்மூலம் மருத்துவ உபகரணங்கள் அனைத்தும் கொள்முதல் செய்யப்பட்டு, தற்போது நல்ல பயன்பாட்டில் உள்ளது என்று தெரிவித்தார்.

மேலும், சுய தொழில் தொடங்கியது குறித்து நீங்கள் எவ்வாறு உணர்கிறீர்கள் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டபோது, இதுவரை தான் ஒருவருக்குக் கீழ்ப் பணியாற்றி வந்ததாகவும், தற்போது தொழில்முனைவோராகி 30 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து வருவது மகிழ்ச்சியும், பெருமையும் அளிப்பதாக உள்ளது எனத் திரு. விஜய் ஆனந்த் அவர்கள் தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தைப் பற்றி உங்கள் நண்பர்கள், உறவினர்களுக்குத் தெரிவித்திருக்கிறீர்களா? என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டபோது, தனக்குத் தெரிந்த மருத்துவ நண்பர்களுக்கு இதுகுறித்துத் தெரிவித்திருப்பதாகவும், அவர்கள் அடுத்த மாதம் விண்ணப்பிக்க இருக்கிறார்கள் என்றும் தெரிவித்தார்.

அவரது மருத்துவமனை நல்ல முறையில் செயல்பட்டு, வாழ்வு சிறப்புடன் அமைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வாழ்த்தினார்.

மகளிர் சுய உதவிக்குழுவின்கீழ் பயன்பெற்ற கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூரைச் சேர்ந்த திருமதி வி. பானுப்பிரியா அவர்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலி வாயிலாகத் தொடர்பு கொண்டு பேசினார்.

அப்போது திருமதி பானுப்பிரியா அவர்கள் தான் ஸ்ரீ முத்துமாரியம்மன் மகளிர் குழுவில் உறுப்பினராக உள்ளதாகவும், மொத்தம் 20 பேர் அதில் உறுப்பினர்களாக உள்ளதாகவும் தெரிவித்தார்.

வங்கியிலிருந்து தங்களுக்கு எவ்வளவு கடன் கிடைத்தது, அதை வைத்து என்ன தொழில் செய்து கொண்டு இருக்கிறீர்கள் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டபோது, திருமதி பானுப்பிரியா அவர்கள், வங்கியிலிருந்து கிடைத்த கடன் தொகையைக் கொண்டு தனது அரிசிக் கடையை விரிவாக்கம் செய்துள்ளதாகத் தெரிவித்தார். மேலும், மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் கடனுதவிகள் மிகவும் பயனுள்ளதாக இருப்பதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்தார்.

சென்னை, வேப்பேரியில் உள்ள ஆதிதிராவிடர் நல விடுதியில் தங்கிப் பயின்று வரும் திருவண்ணாமலை மாவட்டம், வற்றாபுத்தூர் கிராமத்தைச் சேர்ந்த மாணவி எஸ். பிரியதர்ஷினி அவர்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலி வாயிலாகத் தொடர்பு கொண்டு பேசினார்.

அப்போது எஸ்.பிரியதர்ஷினி அவர்கள், தான் வியாசர்பாடி-டாக்டர் அம்பேத்கர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் B.Sc. (Nutrution) பட்டப்படிப்புப் படித்து வருவதாகவும், கடந்த இரண்டு ஆண்டுகளாக வேப்பேரி ஆதிதிராவிடர் நல விடுதியில் தங்கிப் படித்து வருவதாகவும் தெரிவித்தார். இவ்விடுதியில் தங்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் வழங்கி உள்ளதாகவும் தெரிவித்தார்.

விடுதியில் ஏதாவது வசதிகள் தேவை இருந்தால் தெரிவிக்குமாறும், விடுதியை அதிகாரிகள் அடிக்கடி வந்து ஆய்வு செய்கிறார்களா என்றும் கேட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம், விடுதியில் தேவையான எல்லா வசதிகளும் உள்ளது என்றும், மூன்று வேளையும் சரியான நேரத்தில் தரமான உணவு வழங்கப்படுவதாகவும், விடுதி பாதுகாப்பாக இருப்பதாகவும், அதிகாரிகள் வந்து ஆய்வு செய்து வருவதாகவும் தெரிவித்தார். மேலும், புதுமைப் பெண் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு மாதமும் ரூ.1,000 உதவித்தொகை பெற்று வருவதாகவும், அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியும் தெரிவித்துக் கொண்டார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாணவி செல்வி எஸ்.பிரியதர்ஷினி நன்றாகக் கல்வி பயின்று வாழ்வில் உயர வேண்டும் என்று வாழ்த்தியதோடு, விடுதியில் தங்கியுள்ள அவரது தோழியர்களுக்கும் தனது வாழ்த்துக்களைத் தெரிவிக்குமாறு கூறினார்.

"கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில்" பயன்பெற்று வரும் அரியலூர் மாவட்டம், கோவிந்தபுதூரைச் சேர்ந்த திருமதி ராதிகா அவர்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காணொலி வாயிலாகத் தொடர்பு கொண்டு பேசினார்.

அப்போது திருமதி ராதிகா அவர்கள், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் மாதந்தோறும் ரூ.1,000 உரிமைத் தொகை பெற்று வருவதாகவும், அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, இரத்தப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள தனது மகனுக்கு உதவிடுமாறு கேட்டுக் கொண்டார். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவரது மகன் சிகிச்சைக்குத் தேவையான உதவிகளைச் செய்து தருவதாகவும், கவலைப்பட வேண்டாம் என்றும் தெரிவித்தார்.

மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ்ப் பயன்பெற்ற கடலூர் மாவட்டம், பண்ருட்டியைச் சேர்ந்த பத்தாம் வகுப்பு மாணவி ப்ரித்தா அவர்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலி வாயிலாகத் தொடர்பு கொண்டு பேசினார்.

அப்போது, மாணவி ப்ரித்தா, தனக்குச் சிறுநீரகம் பாதிக்கப்பட்டுள்ளதால் மக்களைத் தேடி மருத்துவத் திட்டத்தில் ஐந்து நாட்களுக்கு ஒருமுறை மருத்துவர்கள் வீட்டிற்கே வந்து, அனைத்துப் பரிசோதனைகளையும் மேற்கொண்டு, மருந்து, மாத்திரைகள் வழங்கி வருவதாகவும், தற்போது உடல்நிலை நன்றாக உள்ளது என்றும் தெரிவித்தார். நல்ல முறையில் படித்து வாழ்வில் முன்னேற வேண்டும் என்று வாழ்த்திய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அம்மாணவியின் தந்தையிடம் மகளை நன்றாகக் கவனித்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அரியலூர் மாவட்டம், கோவிந்தபுத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திருமதி ராதிகா க/பெ.மணிகண்டன் என்ற பயனாளியிடம் காணொலிக் காட்சி வாயிலாகத் தொடர்பு கொண்டு, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் மூலமாக மாதந்தோறும் ரூ.1,000 வழங்கப்படுகிறதா? என்பது குறித்தும், இம்மாதத்திற்கான உரிமைத் தொகை கிடைக்கப்பெற்றதா? என்பது குறித்தும், உரிமைத் தொகை வங்கிக் கணக்குகளின் வாயிலாகக் கிடைக்கப்பெறுகிறதா? என்பது குறித்தும் கேட்டறிந்தார். மேலும், இத்தொகை தங்களுக்குப் பயனுள்ளதாக இருக்கிறதா? எனவும் கேட்டறிந்தார். இதேபோன்று மகளிர் கட்டணமில்லாப் பேருந்துப் பயணம் உதவியாக இருக்கிறதா? எனவும் கேட்டறிந்தார்.

இந்த உரையாடலில் கோவிந்தபுத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திருமதி ராதிகா என்பவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை மாதந்தோறும் முறையாக வழங்கப்படுவதாகவும். இந்த மாதத்திற்கான தொகை தனது வங்கிக் கணக்கு வாயிலாகப் பெறப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். மகளிர் பயணத்தின் மூலம்தான் தாங்கள் அதிக பயணங்கள் மேற்கொள்வதாகவும், இத்திட்டம் பயனுள்ளதாக உள்ளதாகவும் தெரிவித்தார். மேலும் கலைஞர் உரிமைத் தொகையினைத் தனது மகனின் மருத்துவத் தேவைகளுக்குப் பயன்படுத்தி வருவதாகவும் தெரிவித்ததுடன், தனது 7 வயது மகன் மதன்ராஜ் என்பவருக்கு இரத்தப்புற்று நோயால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருவதாகவும், சிகிச்சைக்குப் போதிய பணமில்லாததால் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தங்களுக்கு உதவ வேண்டும் எனக் கண்ணீர் மல்க தெரிவித்தார்.

இதனையடுத்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக அவரிடம் உங்கள் கோரிக்கையினை ஏற்று உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார். அதன்படி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கேற்ப உடனடி நடவடிக்கையாக அரியலூர் மாவட்ட சுகாதாரத் துறையின் மூலம் மக்களைத் தேடி மருத்துவத் திட்டத்தின்கீழ் மருத்துவக்குழு அவரது இல்லத்திற்கு நேரடியாகச் சென்று சிறுவன் மதன்ராஜ்க்கு தேவையான மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், திருமதி ராதிகா என்பவரிடம், அவரது மகன் மதன்ராஜ் மருத்துவ சிகிச்சைக்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூபாய் ஒரு இலட்சத்திற்கான காசோலையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார். அவரது மருத்துவத் தொடர் சிகிச்சைக்கான அனைத்து உதவிகளையும், சுகாதாரத் துறை வாயிலாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து, மதன்ராஜ் என்பவரின் தாயார் திருமதி ராதிகா அன்றாடம் கூலி வேலைக்குச் சென்று வருவதால் மகனின் அன்றாட மருத்துவ செலவிற்கு மிகவும் சிரமமாக உள்ளதாகவும், தனக்குத் தையல் பயிற்சி நன்றாகத் தெரியும் என்றும், இலவச தையல் இயந்திரம் வழங்கினால் அது தனது மகனின் மருத்துவத் தேவைகளை நிறைவேற்ற உதவியாக இருக்கும் என்று தெரிவித்ததன் அடிப்படையில் அவரது விண்ணப்பம் உடனடியாகப் பரிசீலிக்கப்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் வாயிலாக இலவச தையல் இயந்திரம் வழங்கப்பட்டது.

சென்னை, மெரினா கடற்கரையில் “முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடம்”

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் திறந்து வைத்தார் - 26.02.2024

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 26.02.2024 அன்று சென்னை, மெரினா கடற்கரையில், தமிழ்ச் சமுதாயத்தின் தன்னிகரில்லாத் தலைவர்களாக திகழும் பேரறிஞர் அண்ணா அவர்களின் புதுப்பிக்கப்பட்ட நினைவிடத்தையும், புதியதாக அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தையும் திறந்து வைத்து, பார்வையிட்டார். அதனைத் தொடர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைகளைத் திறந்து வைத்து, பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடங்களில் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

உலகத் தமிழினத்தின் மிக உயர்ந்த தலைவராகத் திகழ்ந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் 1969 பிப்ரவரி 3ஆம் நாள் மறைந்தபின் அவருக்குச் சென்னைப் பல்கலைக்கழகத்தின் எதிரில் மிகச் சிறந்த கட்டடக்கலை வடிவமைப்புடன் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் நினைவிடம் அமைக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டது.

தமிழ்நாட்டின் முதலமைச்சராக 19 ஆண்டு காலம் நல்லாட்சி புரிந்து, தமிழ்நாட்டை வளப்படுத்தி, தமிழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, நவீன தமிழ்நாட்டின் சிற்பியாக விளங்கி, உலக வரலாற்றில் உன்னதப் புகழ்ச் சின்னமாகத் திகழும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 95ஆம் வயதில் 2018 ஆகஸ்டு திங்கள் 7ஆம் நாள் மறைந்து, பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடம் அருகிலேயே நல்லடக்கம் செய்யப்பட்டார்.

பேரறிஞர் அண்ணா நினைவிட வளாகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடம் அமைத்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 24.08.2021 அன்று சட்டமன்றப் பேரவை விதி 110இன்கீழ் வெளியிட்ட அறிவிப்பில், உலகெங்கிலும் தமிழர்களுக்கெல்லாம் தமிழினத் தலைவர், இலக்கியத் துறையைச் சார்ந்தவர்களுக்கெல்லாம் முத்தமிழறிஞர், கலையுலகத்தினருக்கு என்றும் கலைஞர், தமிழ்நாட்டின் தலைவர்களுக்கெல்லாம் தலைவர், இந்திய அரசியலை வழிநடத்திய அரசியல் ஞானி, "என் பாதை, சுயமரியாதைப் பாதை - தமிழின நலன் காக்கும் பாதை - தமிழ் நெறி காக்கும் பாதை - தந்தை பெரியாரின் பாதை - பேரறிஞர் அண்ணாவின் பாதை - அறவழிப் பாதை - அமைதிப் பாதை - ஜனநாயகப் பாதை - இதில் பயணித்தால் மரணமே வரும் எனப் பயமுறுத்தினாலும், அந்தப் பாதையிலிருந்து மாற மாட்டேன்" என்று இறுதிவரை உறுதியோடு வாழ்ந்தவர்தான் கலைஞர் அவர்கள்.

எண்பது ஆண்டு பொதுவாழ்க்கை, எழுபது ஆண்டுகள் திரைத்துறை, எழுபது ஆண்டுகள் பத்திரிகையாளர், 60 ஆண்டுகள் சட்டமன்ற உறுப்பினர், 50 ஆண்டுகள் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற மாபெரும் பேரியக்கத்தினுடைய தலைவர் என்று வாழ்ந்த காலம் முழுவதும் வரலாறாக வாழ்ந்தவர் கலைஞர் அவர்கள்.

நின்ற தேர்தலில் எல்லாம் வென்றவர், இந்தியாவில் இப்படி ஒருவர் இருந்தது கிடையாது; இனி ஒருவர் அவர் இடத்தை அரசியல் களத்தில் பிடிக்க முடியாது என்று போற்றத்தக்கப் பெருமைக்குரியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். தாய்த் தமிழ்நாட்டை உருவாக்கிய தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றிய அரும்பணிகளைப் போற்றும் விதமாக, அவரது வாழ்வின் சாதனைகளை, சிந்தனைகளை மக்களும், வருங்காலத் தலைமுறையும் அறியக்கூடிய வகையில், நவீன விளக்கப் படங்களுடன் அண்ணா நினைவிட வளாகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு நினைவிடம் அமைக்கப்படும் என்று அறிவித்தார்.

புதுப்பிக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா நினைவிடம் மற்றும் புதியதாக கட்டப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடத்தின் சிறப்பம்சங்கள்

பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகிய இருபெரும் தலைவர்களின் இரண்டு நினைவிடங்களும் 8.57 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ளன. சென்னைக் கடற்கரை காமராஜர் சாலையில் அமைந்துள்ள இந்த நினைவிடங்களின் முகப்பு வாயிலில் பேரறிஞர் அண்ணா நினைவிடம் – முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடம் எனும் பெயர்கள் அழகுறப் பொறிக்கப்பட்டுள்ளன. நுழைவு வாயிலை கடந்து உள்ளே செல்லும் வழியில் பேரறிஞர் அண்ணா அவர்களின் படிப்பது போன்ற சிலையும், வலதுபுறம் இளங்கோவடிகள் மற்றும் இடதுபுறம் கம்பர் சிலைகளும், நினைவிடங்களின் முன்பகுதி இருபுறங்களிலும் பழமையான புல் வெளிகளும், இடப்புறத்தில் அண்ணா அருங்காட்சியமும் அமைந்துள்ளன.

"எதையும் தாங்கும் இதயம் இங்கே உறங்குகிறது." எனப் பொறிக்கப்பட்டுள்ள பேரறிஞர் அண்ணா அவர்கள் துயில்கொள்ளும் சதுக்கத்தைக் கடந்து சென்றவுடன், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அமர்ந்து எழுதும் வடிவிலான சிலையும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சதுக்கமும் அமைந்துள்ளன. இச்சதுக்கத்தில், "ஓய்வெடுக்காமல் உழைத்தவர் இங்கே ஓய்வு கொண்டிருக்கிறார்" எனும் வாசகம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் எண்ணப்படியே பொறிக்கப்பட்டுள்ளது.

“கலைஞர் உலகம்” எனும் பெயரில் அருங்காட்சியகம் அமைக்கப்பட்டு, கலைஞர் நிருமாணித்த திருவள்ளுவர் சிலை, குடிசை மாற்றுவாரியம் முதலியவை படங்களாகவும், தமிழ்த்தாய் வாழ்த்தும், தமிழ்த்தாய் வாழ்த்து அரசு நிகழ்ச்சிகளில் பாடப்பட வேண்டும் என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 23.11.1970 அன்று பிறப்பித்த அரசாணையும், தமிழ்த் தாய் வாழ்த்து மாநிலப் பாடல் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 17.12.2021 அன்று பிறப்பித்த அரசாணையும் அவர்களின் படங்களுடன் இடம் பெற்றுள்ளன.

மேலும், கலைஞரின் எழிலோவியங்கள் எனும் அறையில் கலைஞரின் இளமைக் காலம் முதல், அவர் வரலாற்றில் இடம்பெற்ற நிகழ்வுகள், கலைஞரின் படைப்புகள் அவர் சந்தித்த போராட்டங்கள், நிறைவேற்றிய பல்வேறு திட்டங்கள் தொடர்பான புகைப்படங்கள் அமைந்துள்ளன.

கலைஞர் சதுக்கத்தின் முன்னே இருபுறமும், காங்கிரஸ் தலைவர் திருமதி சோனியா காந்தி அவர்கள், தமிழ்ச் செம்மொழி என ஒன்றிய அரசு ஏற்ற முடிவைத் தெரிவித்துப் பாராட்டி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு எழுதிய கடிதம் ஆங்கிலத்திலும், தமிழிலும் புத்தக வடிவில் அமைக்கப்பட்டுள்ளன. சதுக்கத்தின் பின்புறம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புன்னகை பூத்தமுகம் பொன்னிறத்தில் மிளிரும் வண்ணமும் சுற்றிலும் மின்விளக்குகள் விண்மீன்களாக ஒளிரும் வண்ணமும் அமைக்கப்பட்டுள்ளன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சதுக்கத்தின்கீழே நிலவறைப் பகுதியில், “உரிமைப் போராளி கலைஞர்” எனும் அறையில் – தேசியக் கொடியை மாநில முதலமைச்சர்கள் ஏற்றிட உரிமை பெற்றுத் தந்த கலைஞரின் வெற்றியைக் குறிக்கும் வகையில் சென்னைக் கோட்டையில் முதன்முதலாகத் தேசியக் கொடியை ஏற்றி வைத்துக் கலைஞர் உரையாற்றும் காட்சி, தலைமைச் செயலகத்தின் முகப்புத் தோற்றத்துடன் அமைக்கப்பட்டுள்ளது.

அடுத்ததாக, கோபாலபுரம் இல்லத்தில் கலைஞர் அமர்ந்திருக்கும் தோற்றம் அருகில் நின்று புகைப்படம் எடுத்துக்கொள்ளவும், உடனடியாகப் புகைப்படம் கிடைக்கும் வசதியுடனும்

அமைக்கப்பட்டுள்ளது. அதன் வலப்புறத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மெழுகுச் சிலையும் அமைக்கப்பட்டுள்ளது.

கலைஞரின் படைப்புகளான நெஞ்சுக்கு நீதி, குறளோவியம் தென்பாண்டிச் சிங்கம் உள்ளிட்ட 8 நூல்களின் பெயர்கள் மீது நாம் கை வைத்தால் அந்த நூல்கள் பற்றிய விளக்கம் வீடியோவாகத் தோன்றி நமக்கு எடுத்துரைக்கும்.

"அரசியல் கலை அறிஞர் கலைஞர்" எனும் அறையில் சுமார் 20 நிமிடங்கள் கலைஞர் அவர்களின் பிறப்பு முதல் இறுதி நாள் வரையான முக்கிய வரலாற்று நிகழ்வுகள் அருமையான படக் காட்சிகளாக, கலையும் அரசியலும் எனும் தலைப்பில் நம்முன் தோன்றி வியக்க வைக்கும் .

"சரித்திர நாயகனின் சாதனைப் பயணம்" எனும் அறையில், திருவாரூர் முதல் சென்னை வரை இரயிலில் பயணிப்பது போன்ற உணர்வை நமக்கு ஏற்படுத்தி, தஞ்சை, திருச்சி, மதுரை, நெல்லை, சேலம் ஆகிய இரயில் நிலையங்களைக் கடக்கும் போது, அந்தந்த ஊர்களில் கலைஞர் வாழ்வோடு தொடர்புடைய நிகழ்வுகள் காட்சிகளாகத் தோன்றும்.

அறைகளுக்கு வெளியே அமைந்துள்ள நடையில் இருபுறங்களிலும், பெண்ணியக் காவலர், ஏழைப் பங்காளர், நவீனத் தமிழ் நாட்டின் சிற்பி, உலகளாவிய ஆளுமைகளுடன் கலைஞர் முதலான தலைப்புகளில் அமைந்த அரிய புகைப்படங்கள் அழகுற அமைக்கப்பட்டுள்ளன. அப்பகுதியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் தொடங்கி வைக்கப்பட்ட பல்வேறு திட்டங்களின் தொடக்க விழா நிகழ்ச்சிகள் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்படுகின்றன.

அதற்கு நேர் எதிரே- முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களுடன் தோன்றும் அருமையான புகைப்படம் பெரிய அளவில் அமைந்து "மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி" எனும் குறள் தொடரைத் தலைப்பாகக் கொண்டுள்ளது. மேலும், இப்பகுதியின் இறுதியில் காந்தவிசையைப் பயன்படுத்தி அமர்ந்த நிலையில் முத்தமிழறிஞர் கலைஞர் அந்தரத்தில் மிதக்கும் காட்சி அமைக்கப்பட்டுள்ளது.

இச்சதுக்கத்தில் கலைஞர் எழுதிய நூல்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளதுடன், வரும் வழியில் தமிழர்களின் கலாச்சார மையம், வள்ளுவர் கோட்டம், பாம்பன் பாலம், இராஜீவ் காந்தி அரசுப் பொது மருத்துவமனை முகப்புக் கட்டடம், மெட்ரோ இரயில், அண்ணா நூற்றாண்டு நூலகம் ஆகிய முத்தமிழறிஞர் கலைஞர் படைத்த நவீனங்களின் தோற்றம் வண்ண விளக்கொளியில் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பொன்மொழிகள் கற்பாறைகளில் தமிழிலும் ஆங்கிலத்திலும் பொறிக்கப்பட்டு நம் இதயத்திலும் பதியும் வண்ணம் அருமையாக அமைக்கப்பட்டுள்ளன.

இச்சிறப்புமிக்க பேரறிஞர் அண்ணா அவர்களின் புதுப்பிக்கப்பட்ட நினைவிடத்தையும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புதிய நினைவிடத்தையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

கலைஞர் என்றாலே போராட்டம்தான்! அவரது இறுதிப் போராட்டத்தின் அடையாளம்தான் இந்த நினைவிடம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின் ஒளிபரப்பட்ட காணொலி உரை - 26.02.2024

"இரவலாக உன் இதயத்தை தந்திடண்ணா..
நான் வரும்போது கையோடு கொணர்ந்து அதை
உன் கால் மலரில் வைப்பேன் அண்ணா?"

பேரறிஞர் அண்ணா மறைந்தபோது தலைவர் கலைஞர் எழுதிய கவிதை உயில் இது!

அந்தக் கலைஞருக்கு வங்கக் கடலோரம் வாஞ்சை மிகு தென்றலின் தாலாட்டில் அவரது உயிரனைய அண்ணனுக்குப் பக்கத்தில் நினைவிடம் அமைக்கப்பட்டுள்ளது.

பேரறிஞர் அண்ணாவின் நினைவிடம் மறு உருவாக்கம் செய்யப்பட்டுள்ளது. முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடம் புது உருவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

இந்த அண்ணனும் தம்பியும்தானே தமிழ்நாட்டுக் குடும்பங்களின் தலைப்பிள்ளைகள்! இன்று நாம் பார்க்கும் தமிழ்நாட்டை உருவாக்கியவர்கள்!

நம்மையெல்லாம் இன்றும் என்றும் இயக்கும் தலைவர் கலைஞர் அவர்களுக்கு...

இதோ உங்களுக்குச் சென்னைக் கடலின் கரையில் கண்ணைக் கவரும் கம்பீர நினைவிடம் அமைக்கப்பட்டுள்ளது!

பதினான்கு வயதில் தமிழ்க் கொடி ஏந்தி அதை 95 வயது வரையில் விடாமல் பிடித்திருந்த கனத்த கரங்களுக்குச் சொந்தக்காரரான தலைவர் கலைஞரின் முழு வாழ்க்கையையும் இந்த நினைவிடத்தைச் சுற்றிப் பார்க்கும்போது மொத்தமாய்த் தெரிந்து கொள்ளலாம்!

தனது வாழ்க்கை வரலாற்றை நெஞ்சுக்கு நீதி என்று ஆறு பாகங்கள் மட்டும் எழுதினார் கலைஞர். இயற்கை இடமளித்தால் ஏழாவது பாகத்தையும் எழுதுவேன் என்று ஊக்கமாகவும் இருந்தார். காலம் அவரை நம்மிடம் இருந்து பிரித்துச் சென்றது.

வரலாற்றைப் படைக்கும் வல்லமையை அவர் நமக்கு வழங்கிச் சென்றதால் அடுத்தடுத்த பாகங்களில் கலைஞர் இருந்து எழுதி இருந்தால் என்னவெல்லாம் எழுதி இருப்பாரோ,

அவை அனைத்தையும் காட்சிக்கு கொண்டு வந்து நிறுத்தும் வகையில் கண்காட்சியாக வைத்துள்ளோம்!

திருவாரூரில் இருந்து கண்களில் கனவுகளோடும் –

நெஞ்சில் ஈரத்தோடும்-

சிந்தனையில் தெளிவோடும்-

கால்களில் உறுதியோடும் கிளம்பிய மு.கருணாநிதி என்ற இளைஞன்தான் –

தன் கையில் அதிகாரம் கிடைத்ததும்-

தனது கனவுகள் அனைத்தையும் தமிழ் நிலத்தில் விதைத்து நவீனத் தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பியாக மாறினார்.

தன் கையில் இருந்த செம்மொழி எழுதுகோலைச் செங்கோலாக மாற்றி - அவர் உருவாக்கிக் கொடுத்த திட்டங்கள்தான்,

இன்று தமிழ்நாட்டின் நான்கு திசைகளிலும் - எட்டுக் கோணத்திலும் - எதிரில் தென்படுவது அத்தனையுமாகும்!

மக்கள் போராடிப் பெற்ற விடுதலை நாளன்று கொடியேற்றும் உரிமை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலத்து முதலமைச்சர்களுக்குத்தான் உண்டு என்ற உரிமையை,

இந்தியாவின் அனைத்து மாநில முதலமைச்சர்களுக்கும் பெற்றுத் தந்த அகில இந்தியத் தலைவர் அவர்!

கோபாலபுரத்தில் இருந்து அவர் கோலோச்சிய தமிழ் அரசவைக்கு வந்து செல்லாத அகில இந்தியத் தலைவர்களே இல்லை!

கலைஞர் – கலையானவர்! அரசியலுமானவர்!

இரண்டாலும் இயங்கியவர்! இரண்டு உலகங்களையும் இயக்கியவர்!

அவரது பேனா தீட்டிய கதைகள் - கவிதைகள் - புதினங்கள் - நாடகங்கள் - திரைக்கதை உரையாடல்கள் என்பவை எல்லாம் தமிழ் இருக்கும் காலமெல்லாம் இருக்கும் அழியாத காவியங்கள்! எந்த ஆழிப்பேரலையாலும் அழிக்க முடியாது!

ஐந்து முறை முதலமைச்சராக இருந்து அவர் போட்ட கையெழுத்தின் காரணமாகத்தான் தமிழ்நாட்டின் முன்னெழுத்தாக 'மு.க.' என்ற இரண்டெழுத்து உருவானது.

திருவாரூரில் புறப்பட்ட கலைஞர், தமிழ்நாட்டையே திருவூராக ஆக்கினார். தமிழ்நாடே ஆரூரார் உருவாக்கிய நாடாகக் காட்சி அளிக்கிறது!

கலைஞர் போகாத ஊரில்லை; பேசாத நகரில்லை!

தமிழ்மண் பயனுற வாழ்ந்த கலைஞரை எல்லாத் திட்டங்களும் நினைவூட்டியபடியே, அவர் நினைவைப் போற்றும் சின்னங்களாக வானுயர அமைந்து வாழ்த்துகின்றன.

தமிழ்நாட்டுப் பெருந்தலைவர்களுக்கு எல்லாம் நினைவு மண்டபங்கள் எழுப்பிய கலைஞருக்கு, ஆறடி மண் கேட்டுப் போராட வேண்டியதாக இருந்தது.

கலைஞர் என்றால் போராட்டம்! இதுதானே அவரது வாழ்வும் வரலாறும் நானிலத்துக்குச் சொல்கிறது!

போராட்டம் மட்டுமல்ல, கலைஞர் என்றால் வெற்றி என்பதன் அடையாளம் இந்த நினைவிடம்!

பொதுப்பணித் துறை அமைச்சரும் - எதிலும் வல்லவர் என்று தலைவரால் போற்றப்பட்டவருமான எ.வ.வேலு அவர்களின் அர்ப்பணிப்பு உணர்வால் மிகச்சீரிய முறையில் கட்டி எழுப்பப்பட்டுள்ளது 'கலைஞரின் உலகம்!'

'கலைஞரின் உலகம்' என்ற இந்த நினைவிடம் இந்தியாவின் இரண்டாவது பெரிய கடற்கரையில் இருக்கும் முதல் அதிசயம்!

கலைஞர் எனும் உலகத்தால் நாம் சுற்றுகிறோம்... தமிழ்நாடு சுற்றுகிறது... கலைஞர் உலகு ஆள்வார்! உலகம் கலைஞர் பெயரை உச்சரித்துக் கொண்டே இருக்கும்.

கலைஞர் நினைவிடத்துக்குள் வாருங்கள். கலைஞர் வாழ்ந்த வாழ்க்கையைக் காணலாம். கலைஞரோடு வாழலாம்... வாழலாம்... வாழலாம்...

“தமிழர்களுக்குப் புது வாழ்வு தருபவர்”

கலைஞர் அவர்கள் நமக்குக் கிடைத்திருக்கிற அரிய பொக்கிஷமாகும். மற்ற மாநிலங்களைவிட நமது தமிழகத்தின் பெருமை போற்றப்படுவதற்குக் காரணம் நமது முதல்வர் கலைஞரின் தனித் திறமையாகும்.

கலைஞர் அவர்கள் நமக்குக் கிடைத்ததற்கரிய வாய்ப்பு என்று சொல்லவேண்டும். இதற்குமுன் ஆட்சியிலிருந்தவர்களைவிட இவர் பகுத்தறிவாளராவார். நமது முதல்வர் கலைஞர் அவர்கள் தலைசிறந்த பகுத்தறிவாதி ஆவார். நம் நாட்டில் மட்டும்தான் பகுத்தறிவாளர் ஆட்சி நடக்கிறது.

கலைஞர் ஆட்சியின் கொள்கை நமது மக்களுக்கு நன்மை செய்வதேயாகும். திராவிட இயக்கத்திற்குப் பெருவெற்றி என்றால் அது கலைஞர் அவர்கள் தனது சாதுரிய திறமையால் பெற்றதாகும்.

இத்தகைய பகுத்தறிவாளராகவும், ஆட்சிக் கலையில் அரிய ராஜதந்திரியாகவும், முன்யோசனையுடனும் அவர் நடந்து வருவதன் மூலம் தமிழர்களுக்குப் புது வாழ்வு தருபவர் ஆகிறார் நமது முதல்வர் கலைஞர். அவர் பல்லாண்டு வாழ்ந்து அவர் பணி வெற்றியடைய வேண்டுமென ஆசைப்படுகிறேன்.

– தந்தை பெரியார் அவர்கள்

“நம் எண்ணத்தை வண்ணமாகப் பெற்றவர்”

தண்டவாளத்திலே தலைவைத்துப் படு என்றாலும், பொதுப்பணித்துறை அமைச்சர் பதவியை ஏற்றுக்கொள் என்றாலும் இரண்டையும் ஒன்றுபோல் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்பவன்தான் என்னுடைய அன்புத் தம்பி கருணாநிதி.

என்னுடைய தம்பி கருணாநிதி இருந்த பாளையங்கோட்டை சிறைச்சாலையை நான் சென்று வணங்கத்தக்க புனித யாத்திரை ஸ்தலமாகவே கருதுகிறேன்.

என் வார்த்தையைக் கேட்டவர்கள், என்றும் பழுதுபட்டவர்களாக மாட்டார்கள் என்பதற்குத் தம்பி கருணாநிதியே ஒரு சான்று. நம் எண்ணத்தை வண்ணமாக மிகச் சிறுவயதிலேயே பெற்றவர் கருணாநிதி.

– பேரறிஞர் அண்ணா அவர்கள்

நன்றி - அறிஞர் அண்ணா பதிப்பகத்தின் கலைஞர் மலர் புத்தகத்தில் இடம்பெற்ற வாழ்த்து செய்தியிலிருந்து...

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் உலகம் போற்றும் மூன்றாண்டுச் சாதனைகள்

ஒரு பார்வை...

தமிழ்நாட்டு மக்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டு, 2021 சட்டமன்றத் தேர்தலில் பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியை ஒப்படைத்தார்கள்.

07.05.2021 அன்று காலை, மாண்புமிகு ஆளுநர் அவர்கள் மாளிகையில் "முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்" எனக்கூறி நிமிர்ந்த தலையுடன் உறுதி மொழிகள் ஏற்றுப் பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோருக்குப் பின் முதல் முறையாகத் தமிழ்நாடு முதலமைச்சராகப் பொறுப்பேற்றார்கள்.

மாண்புமிகு முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின், நேரே கோட்டைக்குச் சென்று முதலமைச்சர் நாற்காலியில் அமர்ந்தவுடன் தமிழ்நாட்டு மக்களுக்கு அளித்த தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றத் தொடங்கி, "விடியல் பயணத் திட்டம்" கொரோனா நிவாரண உதவித் தொகை ரூ.4,000 வழங்கும் திட்டம், முதல்வரின் முகவரித்துறை உருவாக்கும் திட்டம், பால்விலை லிட்டருக்கு 3 குறைப்புத் திட்டம், பெட்ரோல் விலை லிட்டருக்கு 3 குறைப்புத் திட்டம் ஆகிய 5 கோப்புகளில் முதன் முதல் ஆணைகள் பிறப்பித்து, நிறைவேற்றி, "சொன்னதைச் செய்வோம் செய்வதைச் சொல்வோம்" என்பதுடன், "சொல்லாததையும் செய்வோம்" எனக் கூறி மக்களுக்கு மகிழ்ச்சியையும், நம்பிக்கையையும் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து தமிழ்நாட்டு மக்களுக்காக அவர் ஆற்றிய சாதனைகள் எல்லாம் தமிழ்நாட்டை இந்தியாவின் முதல் மாநிலமாக உயர்த்தியுள்ளது. இதனை ஒன்றிய அரசின் ஆய்வு நிறுவனங்களே உறுதிப்படுத்தியுள்ளன.

நிதி ஆயோக் நிறுவனம் தெரிவித்த ஏற்றுமதி ஆயத்த நிலைக்கான 2022ஆம் ஆண்டின் குறியீடுகள்

(EXPORT PREPARDENESS INDEX – 2022)

உற்பத்திப் பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கான ஆயத்த நிலைகள் குறித்து ஒன்றிய அரசின் நிதி ஆயோக் நிறுவனம் ஆய்வு செய்து தமிழ்நாடு அரசைப் பாராட்டியுள்ளது.

நிதி ஆயோக் நிறுவனத்தின் நிலை ஆய்வு அறிக்கைகள் 80 முதல் 100 விழுக்காடு அளவுக்கு ஏற்றுமதி செய்து தமிழ்நாடே முதலிடம் பெற்றுள்ளது என்று கூறிப் பாராட்டியது.

பொறியியல் சார்ந்த பொருள்களின் இறக்குமதி - ஏற்றுமதிப் பதிவுகள் குறித்து 2022-2023ஆம் ஆண்டிற்கான விவரங்களை – National Import – Export Record for Yearly Analysis of Trade (NIRYAT) என்னும் ஒன்றிய அரசு நிறுவனம் வெளியிட்டு, இந்திய நாடு முழுவதும் செய்யப்பட்டுள்ள ஏற்றுமதியில் தமிழ்நாடு மட்டும் 16.30 சதவிகித பொருள்களை ஏற்றுமதி செய்து இந்தியாவில் இரண்டாம் இடம் பெற்றுள்ளது என்று தெரிவித்துப் பாராட்டியது.

கர்ப்பிணிப் பெண்கள் சுகாதாரம்

அதேபோல, கர்ப்பிணிப் பெண்கள் சுகாதாரம், தேசிய ஏழ்மைக் குறியீடுகள் குறித்த 2023ஆம் ஆண்டுக்கான அறிக்கையில்; கர்ப்பிணிப் பெண்கள் சுகாதாரக் குறியீடுகளில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது என்று கூறியது.

கர்ப்பிணிப் பெண்கள் பராமரிப்புடன் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவதில் தமிழ்நாடு 3.31 புள்ளிகளைப் பெற்று இந்தியாவில் தமிழ்நாடு முதல் இடத்தில் உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு 3.31 புள்ளிகளைப் பெற்றுள்ள நிலையில், குஜராத் 12.72 புள்ளிகளையும், பீகார் 29.75 புள்ளிகளையும், உத்தரப்பிரதேசம் 30.03 புள்ளிகளையும் பெற்றுத் தமிழ்நாடே முதலிடம் என்னும் உண்மையைப் பறைசாற்றியது.

மருத்துவமனைகளில் மகப்பேறுகள்

ஆண்டு வாரி சுகாதார ஆய்வு மக்கள் தொகை ஆணையர் மற்றும் தலைமைப் பதிவாளர் அலுவலகத்தின் முக்கியப் புள்ளியியல் பிரிவு ஆய்வுகளின் படி, நாட்டில் நடைபெறும் பிரசவங்களில் மருத்துவமனைகளில் பாதுகாப்புடன் நடைபெறக்கூடியது தமிழ்நாட்டில்தான் அதிகம்.

அதாவது, 99 சதவிகிதப் பிரசவங்கள் மருத்துவமனைகளில்தான் நடைபெறுகின்றன என்று தமிழ்நாடு அரசை வெகுவாகப் பாராட்டியுள்ளது.

மகப்பேறுக்கும் பிந்திய கவனிப்பு (ANTENATAL CARE)

குழந்தை பிறந்த பின் சிசு கவனிப்பில் அனைத்து வசதிகளுடனும் குழந்தைகளைப் பராமரித்துக் காப்பதிலும் தமிழ்நாடுதான் முன்னணியில் உள்ளது.

மாநிலங்கள் மற்றும் மாவட்டங்களுக்கான சமூக முன்னேற்றக் குறியீடுகள் பற்றிய ஆய்வில் பெரிய மாநிலங்களில் தமிழ்நாடு 89.9 சதவிகிதங்களைப் பெற்று முன்னணி மாநிலமாகத் திகழ்வதாகக் கூறப்பட்டுள்ளது.

இந்தியாவில் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள்

இந்தியாவில் தொழில் வளர்ச்சி முதலான பிரிவுகளில் மாநிலங்களை முன்னேற்றுவதில் பெரிதும் துணைபுரிவது சிறப்புப் பொருளாதார மண்டலங்கள்.

இதில் தமிழ்நாடு மாநிலம்தான் அதிக அளவில் 50 சிறப்புப் பொருளாதார மண்டலங்களை ஏற்படுத்தி இந்தியாவில் முதலிடத்தில் உள்ளது. வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் 2022-2023ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை இதைப் புலப்படுத்தியுள்ளது.

ஜவுளித் துணிகள் ஏற்றுமதியில் – தமிழ்நாடு முதலிடம்

ஜவுளித் துணிகள் ஏற்றுமதி குறித்து 2022-2023ஆம் ஆண்டுக்கான ஆய்வு அறிக்கையை வெளியிட்ட ஒன்றிய அரசின் நிர்யாத் (NIRYAT) நிறுவனம் தேசிய அளவில் ஏற்றுமதி செய்யப்பட்ட மொத்த ஜவுளித் துணிகளின் மதிப்பில், தமிழ்நாட்டின் பங்கு 22.58 சதவிகிதம் என அறிவித்து ஜவுளித் துணிகள் ஏற்றுமதியில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம் என்பதைத் தெளிவுப்படுத்தியுள்ளது.

அதாவது, இந்தியாவின் மொத்த ஏற்றுமதி மதிப்பு 35.38 பில்லியன் அமெரிக்க டாலர்: இதில் முதலிடம் பெற்றுள்ள தமிழ்நாட்டின் ஏற்றுமதி மதிப்பு 7.990 பில்லியன் அமெரிக்க டாலர். அடுத்து, இரண்டாம் இடத்தில் குஜராத் மாநிலம் 4.378 பில்லியன் அமெரிக்க டாலர். மூன்றாம் இடத்தில் மகாராஸ்ட்டிரம் 3.784 பில்லியன் அமெரிக்க டாலர் என்று குறிப்பிட்டு ஜவுளிப் பொருள்கள் ஏற்றுமதியில் தமிழ்நாடு இந்தியாவில் மிக முக்கியப் பங்கு வகிக்கிறது என்பதை வெளிப்படுத்தியுள்ளது.

ஆயத்த ஆடைகள் (Readymade Garments) ஏற்றுமதியிலும் தமிழ்நாடு முதலிடம்

2022-2023ஆம் ஆண்டுக்கான தேசிய இறக்குமதி – ஏற்றுமதி – வர்த்தக ஆண்டாய்வு பதிவுகள் குறித்த அறிக்கையில், ஆயத்த ஆடைகள் ஏற்றுமதி குறித்து அறிவித்துள்ள புள்ளி விவரங்களில் இந்தியாவிலிருந்து ஆயத்த ஆடைகளை ஏற்றுமதி செய்யும் முதல்

10 மாநிலங்களில் தமிழ்நாடு மிக அதிகமாக ஏற்றுமதி செய்துள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

அதாவது இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட ஆயத்த ஆடைகளின் மொத்த மதிப்பு 16.19 பில்லியன் அமெரிக்க டாலர் ஆகும். இதில் 5.30 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புடைய ஆயத்த ஆடைகளை ஏற்றுமதி செய்து தமிழ்நாடு இந்தியாவில் முதல் மாநிலம் என்று அறிவித்துப் பாராட்டப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிற்கு அடுத்து கருநாடகம் இரண்டாம்

இடத்தில் 4.52 பில்லியன் அமெரிக்க டாலர். உத்தரபிரதேசம் மூன்றாம் இடத்தில் 2.27 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான ஆயத்த ஆடைகளை ஏற்றுமதி செய்துள்ளன என்றும் தெரிவித்துள்ளது. மராட்டியம், குஜராத் மாநிலங்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தோல் பொருள்கள் ஏற்றுமதியில் – தமிழ்நாடு முதலிடம்

2022-2023-ஆம் நிதியாண்டுக்கான தோல் பொருட்கள் ஏற்றுமதி மதிப்பு குறித்து ஒன்றிய அரசின் நிர்யாத் நிறுவனம் வெளியிட்டுள்ள ஆய்வு அறிக்கையில், இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்கு 2022-2023ஆம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ள தோல் பொருள்களின் மொத்த மதிப்பு 4.27 பில்லியன் அமெரிக்க டாலரில் 43.20 சதவிகித தோல் பொருள்களை அதாவது, 2.048 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள



தோல் பொருள்களை ஏற்றுமதி செய்து தமிழ்நாடு இந்தியாவில் முதல் மாநிலம் எனும் பாராட்டு முத்திரையை வெளியிட்டுத் தமிழ்நாட்டின் பெருமையைத் தரணிக்குப் பறைசாற்றியுள்ளது.

எலக்ட்ரானிக் துறையில் தமிழ்நாடு முதலிடம்

மின்னணுப் பொருள்கள் ஏற்றுமதியில் கடந்த மூன்றாண்டுகளாகத் தொடர்ந்து இந்தியாவில் தமிழ்நாடு முதலிடம் பெற்றுத் தொழில்நுட்பத் துறையில் ஒரு புதிய சாதனை படைத்துள்ளது.

எலக்ட்ரானிக் பொருள்கள் ஏற்றுமதி 2020-2021இல் 1.66 பில்லியன் அமெரிக்க டாலர் என்பது 2023-2024ஆம் ஆண்டில் 9.56 பில்லியன் அமெரிக்க டாலர் என உயர்ந்துள்ளது.

அதாவது, ரூ.1.39 இலட்சம் கோடி என இருந்த தமிழ்நாட்டின் எலக்ட்ரானிக் பொருள்களின் ஏற்றுமதி மதிப்பு மூன்றாண்டுகளில், ஏறத்தாழ ரூ.8 இலட்சம் கோடி அளவுக்கு உயர்ந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களுடைய சீரிய நிருவாகத் திறனை உலகுக்கு உரைத்துக் கொண்டிருக்கிறது.

இப்படி ஒன்றிய அரசின் ஆய்வு அறிக்கைகளே, தமிழ்நாடு பெரும்பாலான முக்கியத் துறைகளில் இந்தியாவில் முதலிடத்தில் உள்ளதை உறுதிப்படுத்துகின்றன.

தொழில் துறையில் திராவிட நாயகரின் ஆட்சி செய்த புரட்சி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் சென்னை, கோவை, தூத்துக்குடி ஆகிய இடங்களிலும், மலேசியா, சிங்கப்பூர், ஜப்பான், ஸ்பெயின் ஆகிய நாடுகளிலும் நடத்தப்பட்ட முதலீட்டாளர்கள் மாநாடுகள் வாயிலாக மொத்தம் ரூ.9.61 இலட்சம் கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டு ஏறத்தாழ 30 இலட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்கான ஒப்பந்தங்கள் நடைபெற்று இதுவரை, தொழில் வளர்ச்சி வரலாற்றில் இல்லாத ஒரு மாபெரும் புரட்சி நிகழ்த்தப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்ற பின், 45 தொழிற்சாலைகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. 27 தொழிற்சாலைகள் திறந்து

வைக்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலமாக 74,757 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.

இவைகள் அல்லாமல், கடந்த மூன்றாண்டுகளில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களுடைய ஆட்சி நிறைவேற்றியுள்ள திட்டங்கள் படைத்துள்ள சாதனைகள் எண்ணிலடங்காதவை. அவற்றுள் முக்கியமானவை :

- ❖ கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின்கீழ் 1 கோடியே 15 இலட்சம் மகளிர் மாதந்தோறும் ரூ.1,000 பெறுகின்றனர்.
- ❖ முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின்கீழ், 31,000 அரசுப் பள்ளிகளில் 17 இலட்சம் மாணவர்கள் பயன் பெறுகின்றனர்.
- ❖ புதுமைப் பெண் திட்டத்தில் 2,72,216 கல்லூரி மாணவிகள் மாதந்தோறும் ரூ.1,000 பெற்று வருகின்றனர்.
- ❖ விடியல் பயணம் திட்டத்தில் மகளிர், திருநங்கைகள், மாற்றுத்திறனாளிகள் 445 கோடி முறை பயணம் செய்து மாதந்தோறும் ரூ.888 சேமிக்கின்றனர்.
- ❖ மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தில் 1 கோடியே 70 இலட்சம் பேர் பயனடைந்துள்ளனர்.
- ❖ ‘இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48 திட்டத்தில் 2 இலட்சம் உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன.

- ❖ மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.70 ஆயிரம் கோடி வங்கிக் கடன் வழங்கப்பட்டு 12 இலட்சம் குழுக்கள் பயன் !
- ❖ விவசாயிகளுக்கு 2 இலட்சம் இலவச மின் இணைப்புகள் வழங்கப்பட்டு, கூடுதலாக 2,99,384 ஏக்கரில் பயிர் சாகுபடிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- ❖ முதலமைச்சரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ரூ.1,501 கோடி மதிப்பீட்டில் 4,812 கி.மீ. சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.
- ❖ "நான் முதல்வன்" திட்டத்தில் பொறியியல், கலை (ம) அறிவியல் கல்லூரி, பல்வகை தொழில்நுட்பக் கல்லூரி தொழிற்பயிற்சி நிலையங்களில் பயின்ற 28 இலட்சம் மாணவர்களுக்குத் திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.
- ❖ கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் 26 ஆயிரம் ஏக்கர் தரிசு நிலங்கள் விளை நிலங்களாக மாற்றப்பட்டு 28 இலட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.
- ❖ ரூ.4,818 கோடி கூட்டுறவு நகைக்கடன் தள்ளுபடி செய்யப்பட்டு 13 இலட்சம் பேர் பயனடைந்துள்ளனர்.
- ❖ மாற்றுத்திறனாளிகளுக்கான மாதாந்திர பராமரிப்பு உதவித்தொகை ரூ.1,500லிருந்து ரூ.2,000ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
- ❖ இரண்டே ஆண்டுகளில் 1,477 திருக்கோயில்களுக்கு குடமுழுக்குச் செய்யப்பட்டுத் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- ❖ ரூ.5,996.53 கோடி மதிப்பிலான 6,800.68 ஏக்கர் கோயில் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளன.
- ❖ குறைவான நேரத்தில் நிறைவான சேவைகளுக்காக 3 ஆண்டுகளில் 30,000 இ-சேவை மையங்கள் தொடங்கப்பட்டு பொதுமக்களுக்குப் பயனளிக்கின்றன.
- ❖ 2600 ஆண்டு தமிழர் வரலாற்றை உயர்த்திப் பிடிக்கும் கீழடி அகழாய்வுப் பணியில் கிடைத்துள்ள பொருள்களைப் பாதுகாக்கும் அருங்காட்சியகம் நிறுவப்பட்டுள்ளது.
- ❖ அயோத்திதாச பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம் – ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தவும்,மேம்படுத்தவும் ரூ.200 கோடியில் 1,769 பணிகளை நிறைவேற்றியுள்ளது.
- ❖ ரூ.2,358.53 கோடி மதிப்பீட்டில் 44 அரசு பல்வகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளும் (Polytechnic) ரூ.2,877 கோடி மதிப்பீட்டில் 71 அரசு தொழிற்பயிற்சி நிறுவனங்களும் (ITI) தொழில் 4.0 அளவிற்குத் தரம் உயர்த்தப்படுகின்றன.
- ❖ அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் மூலம் 970 பயனாளிகளுக்கு ரூ.131.91 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.
- ❖ பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் நலன் காக்க 62,229 பயனாளிகளுக்கு ரூ.406.22 கோடி கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது.
- ❖ 7.5 சதவீத இட ஒதுக்கீட்டில் 28,601 அரசுப் பள்ளி மாணவ மாணவியர் தொழில் கல்வி நிறுவனங்களில் சேர்ந்து பயனடைந்துள்ளனர்.
- ❖ கைத்தறி நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் 150 யூனிட் என்பது 300 யூனிட் எனவும், விசைத்தறி நெசவாளர்களுக்கு 750 யூனிட் என்பது 1,000 யூனிட் எனவும் உயர்த்தி வழங்கப்பட்டு 2,38,163 நெசவாளர் குடும்பங்கள் பயன் பெற்றுள்ளன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தியுள்ள காலை உணவுத் திட்டத்தின் சிறப்புகளை, தெலுங்கானா மாநில அரசு அறிந்து அதன் அலுவலர்கள் தமிழ்நாட்டிற்கு வருகைபுரிந்து காலை உணவு தயாரிக்கப்படும் இடம், பள்ளிகளுக்கு வாகனங்கள் மூலம் அனுப்பப்படுதல், பள்ளிகளில் குழந்தைகள் சாப்பிடுதல் ஆகியவற்றை நேரில் பார்வையிட்டுத்

தமிழ்நாடு இத்திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்துகிறது. தெலுங்கானா மாநிலத்திலும் இந்தக் காலை உணவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவோம் என்று கூறிச் சென்றனர். அவ்வாறே, தெலுங்கானா மாநிலத்தில் தற்போது காலை உணவுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தக் காலை உணவுத் திட்டம் இந்தியாவைக் கடந்து வெளிநாடுகளிலும் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. குறிப்பாகக் கனடா நாட்டில் அதன் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தனது வலைதளப்பக்கத்தில் 02.04.2024 அன்று "கனடா நாட்டில் பள்ளிக் குழந்தைகளுக்குத் தேசிய உணவுத் திட்டத்தினை அறிமுகம் செய்து வைக்கப்போகிறோம்" எனப் பதிவிட்டுள்ளார்.

இதே போல இல்லத்தரசிகளுக்கு மாதம் ரூ.1,000 வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் மற்ற மாநில அரசுகளையும் கவர்ந்துள்ளது. குறிப்பாகக் கருநாடக மாநிலத்தில் தமிழ்நாட்டைப் பின்பற்றி இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு, வேறு பல மாநிலங்களில் இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்திட பரிசீலித்து வருகின்றன.

இப்படி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மூன்றாண்டுகளாகப் படைத்துவரும் சாதனைகள் தமிழ்நாட்டு மக்களால் போற்றிப் பாராட்டப்படுகின்றன. இந்தியாவின் மற்ற மாநிலங்களின் தலைவர்களும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திட்டங்களை அறிந்து வியந்து அவற்றைத் தத்தம் மாநிலங்களில் செயல்படுத்திடவும் முனைப்புடன் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இவ்வாறெல்லாம் சாதனைகள் பல படைத்த சமூகநீதிக்கான சரித்திர நாயகர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் புகழை இந்தப் புவி என்றும் பாராட்டிக் கொண்டே இருக்கும்.

- தொகுப்பு : **தமிழரசு அச்சகம்**



ஜூன் 26 - சிலம்புச் செல்வர்
ம.பொ.சிவஞானம் அவர்கள் பிறந்த நாள்

"தமிழ்ச் செம்மல்"

சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்களுக்குச் சிலை எடுக்க வேண்டும் என்ற எண்ணம் நீண்ட காலமாக எங்கள் அனைவருக்கும் இருந்து வந்தது என்றாலும்கூட இன்றைக்கு அந்தச் சிலையை அமைக்கின்ற அந்த வாய்ப்புக் கிடைத்து, அவருடைய குடும்பத்தாரும் நலமுடன் வாழ, மகிழ்வுடன் வாழ எங்களால் இயன்ற இந்த உதவியைச் செய்கின்ற வாய்ப்பையும் நாங்கள் பெற்றிருக்கிருக்கிறோம்.

அவர் ஒரு இயக்கத்தின் தலைவராக, தமிழ் மக்களின் தலைவர்களில் ஒருவராக, போர்க்களம் பல கண்டவராக, வாழ்ந்து மறைந்தவர். "மறைந்தவர்" என்று சொல்லமாட்டேன். "மறையாதவர்" நம் மனங்களில் எல்லாம் நிறைந்திருப்பவர், அப்படிப்பட்ட சிலம்புச் செல்வரை இன்றைக்கு நாம் கொண்டாடுவது, அவரைப் பெருமைப்படுத்துவதற்காக அல்ல. நம்மைப் போன்றவர்கள் தமிழைக் காக்க, தமிழர்களைக் காப்பாற்ற, தமிழ்நாட்டை வளம்பெற்ற நாடாக ஆக்க, நம்மை நாமே தயார்படுத்திக் கொள்ள நம்முடைய தன்னலத்தின் காரணமாக, அவரை நாம் இன்றைக்கு நினைத்துப் போற்றுகிறோம், பாராட்டுகிறோம் என்று சொன்னால், அதை யாரும் மறுப்பதற்கில்லை.

பள்ளிப்படிப்பு மூன்றாவது வகுப்புகூட எட்டாமல் இருந்து, மூன்றாவது வகுப்பு வரை எட்டாமல் இருந்தாலும், முத்தமிழைக் கற்று, அதனைப் பரப்புகின்ற அந்தப் பணியிலே ஈடுபட்டு, தமிழகத்திலே ஈடு இணையற்ற தமிழ்ச் செம்மல்களில் ஒருவராகத் திகழ்ந்து, இன்றளவும் நம்முடைய நெஞ்சில் நிலைபெற்று வாழ்கின்றார் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

- முத்தமிழறிஞர் **கலைஞர்** அவர்கள்
சென்னையில் 09.02.2011 அன்று சிலம்புச் செல்வர் மா.பொ.சி. அவர்களின் சிலையைத் திறந்துவைத்து ஆற்றிய உரையிலிருந்து...

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசின்

மகளிர் சமுதாயத்தைக் காக்கும் பயனுள்ள பல்வேறு திட்டங்கள்...

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் – பள்ளிக் குழந்தைகளுக்குக் காலை உணவுத் திட்டத்தை 15.09.2022 அன்று அறிமுகப்படுத்தினார். அத்திட்டத்தின் மூலம் 31,000 அரசுப் பள்ளிகளில் 17 இலட்சம் குழந்தைகள் காலை உணவைப் பசியாற உண்டு, பள்ளிகளில் படிப்பில் கவனம் செலுத்தி வருகின்றனர்.

இதனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைத் "தாயுமானவர்" என்று போற்றுகின்றனர் தமிழ்நாட்டு மக்கள்.

தாய் மனம் கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தாய்க்குலம் பெருமை கொள்ளும் வகையில் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்துகிறார்கள்.

பெண்கள், பிறந்தது முதல் தந்தையையும், திருமணம் ஆனபின் கணவனையும், பின்னர் மகன் அல்லது மகளையும் சார்ந்து வாழ வேண்டியவர்களாக உள்ளனர்.

பெண்கள் யாருடைய கையையும் எதிர்பாராமல் வேலை வாய்ப்புப் பெற்று வருமானம் ஈட்டக் கூடியவர்களாகத் திகழ்ந்து தற்சார்புநிலை அடைய வேண்டும் என்பதற்காக, 1989ஆம் ஆண்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அரசுப் பணிகளில் மகளிர்க்கு 30 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கினார்கள். அதனால், இலட்சக்கணக்கான மகளிர் அரசுத் துறைகளில் வேலை வாய்ப்புகளைப் பெற்றுப் பொருளாதாரத்தில் தற்சார்புநிலை அடைந்து வாழ்வில் உயர்ந்துள்ளனர்.

அதே 1989ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட மகளிர் திட்டத்தில் சுயஉதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டுக் கிராமப்புற மகளிர் பொருளாதாரத்தில் உயர்ந்திட வழிவகுக்கப்பட்டது.

இத்திட்டங்களுடன் சமசொத்துரிமைச் சட்டம், சுய வேலைவாய்ப்புத் திட்டம் போன்றவைகளால் பெண்கள் சமுதாயம் எழுச்சிப் பெற்று வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2021இல் பொறுப்பேற்றது முதல் மகளிர் சமுதாய முன்னேற்றத்தில் சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வருமானம் இன்றிச் சிரமப்படும் ஏழை மகளிரின் துயர் துடைத்திட அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டி - கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி, 1 கோடியே 16 இலட்சம் மகளிர்க்கு மாதம்தோறும் 1,000 ரூபாயை, இது உதவித் தொகை அல்ல; உரிமைத் தொகை என வழங்குகிறார்கள். மகளிர் சமுதாயத்தை மனம் குளிரச் செய்துள்ள இந்த மாபெரும் திட்டத்தை கருநாடக மாநில அரசு செயல்படுத்தி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைப் பாராட்டியது.

அத்துடன், அரசுப் பள்ளிகளில் படித்துக் கல்லூரியில் சேரும் மகளிர்க்குப் "புதுமைப் பெண்" திட்டத்தை நடைமுறைப்படுத்தி 4,81,705 கல்லூரி மாணவிகளுக்கு மாதம் ரூ.1,000 வழங்கி, மகளிர் இடையே தன்னம்பிக்கை உணர்வை ஊட்டியுள்ளார் நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

"விடியல் பயணம்" மூலம் மகளிர்க்குக் கட்டணம் இல்லாப் பேருந்துப் பயணத் திட்டம் தந்து ஒவ்வொரு பெண்ணும் மாதம் ரூ.888 வரை சேமிக்கும் வாய்ப்பை உருவாக்கியுள்ளார்கள். இதுவரை இத்திட்டத்தில் மகளிர் 445 கோடி முறை பயணம் செய்து பயனடைந்துள்ளனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு திருமண நிதி உதவித் திட்டங்களின்கீழ் 1,01,712 மகளிர்க்கு ரூ.827 கோடி நிதியுதவி வழங்கி உள்ளார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டின் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சராகத் திகழ்ந்தபோது தமிழ்நாடு முழுவதிலும் மகளிர் சுய உதவிக் குழு மகளிருக்கு மணிக்கணக்கில் நின்றபடியே கடனுதவி வழங்கி, அவர்களின் முகம் மலரச் செய்தவர்; அவர்கள் வாழ்வில் வளம்பெருகச் செய்தவர்.

அந்த மகளிர் சுய உதவிக் குழு மகளிர் நலன் மேம்பட 2021இல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சராகப் பொறுப்பேற்றது முதல் 12 இலட்சம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 70 ஆயிரம் கோடி ரூபாய் வங்கிக் கடனுதவி வழங்கி, மகளிர் இடையே தன்னம்பிக்கை உணர்வை வளர்த்துள்ளார்.

அத்துடன் பணிபுரியும் மகளிர் ஆங்காங்கே எதிர்கொள்ளும் இடர்ப்பாடுகளை அகற்றி, அவர்களுக்கிடையே பாதுகாப்பு உணர்வை வளர்த்திட மாநிலம் முழுவதும் ரூ.97 கோடியில் 16 பணி புரியும் மகளிர் விடுதிகளை அமைத்திடவும் உத்தரவிட்டுள்ளார்கள்.

முக்கிய விருந்தினர்கள் வரும் வழிகளில் காவல்துறையில் பணியாற்றும் மகளிரைப் பாதுகாப்பிற்காக நெடுநேரம் நிறுத்துவது கூடாது என ஆணையிட்டு, அவர்களை இலகுவான பணிகளில் ஈடுபடுத்தியவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்.

பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தில் கடந்த மூன்றாண்டுகளில் ரூ.218.88 கோடி பெண் குழந்தைகள் பயனடையச் செய்துள்ளார் நம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்.

இப்படி, தாய் மனம் கொண்ட நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் மகளிர் சமுதாயத்தினைக் காப்பதற்காகச் செயல்படுத்தியுள்ள பல்வேறு திட்டங்களால் பயனடையும் மகளிர் சமுதாயம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வாழ்க, வாழ்க, பல்லாண்டு வாழ்க என வாழ்த்திக் கொண்டுள்ளது.



ஜூன் 5 :
கண்ணியத் தென்றல் காயிதே மில்லத் அவர்கள் பிறந்த நாள்

“தமிழ்தான் என் தாய்மொழி”

இந்தச் சமுதாயத்தினுடைய தனிப்பெரும் சிற்பியாகத் திகழ்ந்த பெருமதிப்பிற்குரிய காயிதே மில்லத் அவர்கள் எந்த அளவிற்கு நாட்டுப்பற்றும், தமிழ்ப்பற்றும் கொண்டிருந்தார் என்பதை இந்த மணிமண்டபத்தின் கட்டுமானப் பணி தொடங்கப்படுகிற நேரத்தில் எடுத்துச் சொல்வது மிகமிகப் பொருத்தம் என்று கருதுகிறேன்.

1962இல் சீன ஆக்கிரமிப்பு நடைபெற்றபோது பல அவசர காலச் சட்டங்கள் நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டன. அப்போது நாடாளுமன்ற விவாதத்தில் காயிதே மில்லத் அவர்கள் கலந்து கொண்டு பேசினார். என்ன பேசினார் தெரியுமா?

“நமது நாட்டின் மீது ஆக்கிரமிப்புச் செய்த சீனாவிற்குப் பாரதப் பிரதமர் கொடுத்த சவாலை நான் வரவேற்கிறேன். யாதொரு நிபந்தனையுமின்றி அதை நான் ஆதரிக்கிறேன்” என்று காயிதே மில்லத் அவர்கள் ஆங்கிலத்தில் பேசினார். அப்பொழுது ஒரு உறுப்பினர் எழுந்து குறுக்கிட்டு உருது மொழியில் பேசுங்கள் என்றார். அதற்கு உடனடியாகக் காயிதே மில்லத் அவர்கள் என்ன மறுமொழி கூறினார் தெரியுமா?

“ஆங்கிலத்தில் பேசுபவர்களுக்கு எல்லாம் இந்தியிலும் பேசத் தெரியும் என்று நண்பர் நினைத்துக் கொள்கிறார்.” எனக்கு இந்தியும் அன்னியமொழி, உருதும் அன்னியமொழி. ”தமிழ்தான் என் தாய் மொழி” என்றவர் கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்கள்.

— முத்தமிழறிஞர் **கலைஞர்** அவர்கள்
25.02.2001 அன்று, சென்னையில்
கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்கள்
மணிமண்டபம் கட்டுமானப் பணியினைத்
தொடங்கி வைத்து ஆற்றிய உரையிலிருந்து...

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான
தமிழ்நாடு அரசு

மூன்றாண்டுகளில் ரூ.3,198 கோடியில் 28,824 அடுக்குமாடிக் குடியிருப்புகள்!

இந்தியாவிலேயே முதன்முறையாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1970ஆம் ஆண்டில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தைத் தொடங்கி வைத்தார்கள். குடிசைப் பகுதிகளை மேம்படுத்துதல் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் முதன்மையான நோக்கமாகும்.

நகர்ப்புர ஏழைக் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வீட்டுவசதி வாய்ப்புகள் மட்டுமே போதுமானவை அல்ல. அவர்களுக்குக் குடிநீர், சுகாதாரம், மின்சாரம், போக்குவரத்து, கல்வி, மருத்துவ வசதி, திடக்கழிவு மேலாண்மை, பொது வெளியிடம் போன்ற போதுமான நகர்ப்புர வசதிகளுடன் வீட்டுவசதிகளை ஏற்படுத்துவதும் அவசியம் என்று கருதி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 01.09.2021 அன்று தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பெயரைத் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் என்று பெயர் மாற்றம் செய்து ஆணையிட்டார்கள்.

தமிழ்நாட்டின் வரலாற்றில் சாதனைகள் படைத்து வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு மூன்று ஆண்டுகள் நிறைவடைந்து, நான்காம் ஆண்டில் அடியெடுத்துவைக்கும் இவ்வேளையில் திராவிட மாடல் அரசின் சாதனைகளைத் திரும்பிப் பார்க்கும் போது பிரமிப்பாகவே உள்ளது.

சமூகத்தின் விளிம்பு நிலையில் உள்ள மக்களை மேம்படுத்தும் வகையில் திட்டங்களைத் தீட்டித் தாமதமின்றிப் பயன்கள் மக்களைச் சென்றடையச் செய்திடும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆட்சியில் மக்கள் மகிழ்ச்சியில் திளைத்து வருகின்றனர்.

எல்லோருக்கும் எல்லாம் என்ற நிலையை ஏற்படுத்திட உட்கட்டமைப்புத் திட்டங்களைக் குறித்த காலத்திற்குள் திட்டமிட்டபடி நிறைவேற்றுவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு

வரும் அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டத்தில் சமூகத்தில் பொருளாதார ரீதியாகப் பின்தங்கியுள்ள மக்களுக்கு வீடுகளைத் தாமதமின்றி வழங்கி வருகிறார்கள்.

வீடற்ற மக்களுக்கு வீட்டினை அளிப்பதோடு இக்குடியிருப்புகளில் ஒரு பல்நோக்கு அறை, உறங்கும் அறை, சமையலறை, கழிவறை வசதிகளும், குடிநீர், கழிவுநீரகற்று வசதி, மின்தூக்கி, சாலைகள், தெருமின் விளக்குகள், கான்கிரீட் நடைபாதை, மழைநீர் வடிகால் போன்ற அடிப்படை வசதிகளுடன் ஏற்படுத்தி வருகிறார்.

மேலும், சமூக வசதிகளான பள்ளிகள், நூலகம், பூங்காக்கள், அங்கன்வாடி மையங்கள், ஆரம்ப சுகாதார நிலையம், சிறுகடைகள், பால் விற்பனை நிலையம், சமுதாயக்கூடம் போன்ற வசதிகள் குடியிருப்புகளின் அருகில் அமைந்திட ஆவன செய்திடுமாறும் அதிகாரிகளுக்கு அறிவுரைகள் வழங்கியுள்ளார்.

அடுக்குமாடிக் குடியிருப்புகள்

திராவிட மாடல் அரசு பொறுப்பேற்றது முதல் இதுநாள் வரை தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் 92 திட்டப் பகுதிகளில் ரூ.3,197.94 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட 28,824 அடுக்குமாடிக் குடியிருப்புகள் திறந்து வைக்கப்பட்டு வீடற்ற ஏழை, எளிய மக்கள் மற்றும் குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ளன.

அடுக்குமாடிக் குடியிருப்புகள் ஒதுக்கீடு

இந்த அரசு பொறுப்பேற்றதிலிருந்து இதுவரை, 37,720 அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான ஒதுக்கீடு ஆணைகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும் 3,023 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான விற்பனைப் பத்திரங்கள், 1,733 மேம்படுத்தப்பட்ட மனைகளுக்கும் விற்பனை பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மக்கள் தாமாக வீடு கட்டும் திட்டம்

மக்கள் தாமாக வீடு கட்டும் திட்டத்தின்கீழ் மூன்றாண்டுகளில், 1,68,495 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 89,429 பயனாளிகளுக்குப் பணி ஆணைகள் வழங்கப்பட்டுப் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

மேலும், மக்கள் தாமாக வீடு கட்டும் திட்டத்தின்கீழ், ரூ.2,078.37 கோடி திட்ட மதிப்பீட்டில் 69,701 புதிய தனி வீடுகள் கட்டுவதற்கு அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

சிதிலமடைந்த அடுக்குமாடிக் குடியிருப்புகள் மறுகட்டுமானம்

சிதிலமடைந்த அடுக்குமாடிக் குடியிருப்புகள் மறுகட்டுமானம் செய்யும் திட்டத்தின் ஒரு பகுதியாக 17 திட்டப் பகுதிகளில் உள்ள 7,582 சிதிலமடைந்த அடுக்குமாடிக் குடியிருப்புகளை இடித்துவிட்டு மீண்டும் அதே இடத்தில் ரூ.1,608.88 கோடி மதிப்பீட்டில் 9,522 புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டும் திட்டத்திற்கான பணிகள் நடைபெற்றுவருகின்றன.

பழுது நீக்குதல், புதுப்பித்தல் பணிகள்

ஏற்கெனவே கட்டப்பட்ட அடுக்குமாடி குடியிருப்புகளின் கட்டமைப்பு உறுதித்தன்மை, ஆயுட்காலத்தினை அதிகரிக்க ரூ.59.80 கோடிச் செலவில் பழுது நீக்குதல், புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ள 117 திட்டப் பகுதிகளில் 76,434 அடுக்குமாடிக் குடியிருப்பு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

புனரமைப்புப் பணிகள்

சென்னை, இதர நகரங்களில் உள்ள 79 திட்டப் பகுதிகளில் உள்ள 31,239 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்குக் கட்டமைப்பு வசதிகளை ரூ.82.57 கோடிச் செலவில் மேம்படுத்த இறுதி செய்யப்பட்டுப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

சமுதாய மேம்பாட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாகவும், நகர்ப்புர மக்களின் திறன்களை மேம்படுத்தும் வகையிலும் பல்வேறு இனங்களில் 4,771 பேருக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஏழை, எளிய மக்களின் வீட்டிற்கான கனவை நிறைவேற்றி அனுதினமும் தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக முன்னேற்றப் பாதையில் வழிநடத்திச் செல்லும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு ஏழை, எளிய மக்கள் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துள்ளனர்.

- தொகுப்பு : **தமிழரசு அச்சகம்**

மக்கள் போற்றிய மகத்தான திட்டங்கள்

அன்று...

"மனுநீதித் திட்டம்"

தமிழ்நாட்டு மக்களின் நலன் கருதி, அனைத்துத் தரப்பு மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பல்வேறு புதிய திட்டங்களை அறிவித்துச் செயல்படுத்திவந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், அரசின் திட்டங்கள், சேவைகள் உரிய காலத்தில் பொதுமக்களுக்குச் சென்று சேர்ந்து பயனளிக்கும் வகையில், அரசு அலுவலர்கள் குறிப்பிட்ட நாளில் கிராமங்களுக்கே சென்று கிராம மக்களின் குறைகளைக் கேட்டு, மனுக்களைப் பெற்று, மனுக்களில் கண்ட குறைகளை உடனே தீர்த்து வைக்கும், **"மனு நீதித் திட்டம்"** 15.09.1969 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு, ஐந்தாண்டுகளில் 92.2 சதவிகிதம் மக்கள் குறைகள் தீர்வு காணப்பட்டுப் பயனடைந்தனர்.

"நீங்கள் நலமா" திட்டம்

மக்கள் நலத்திட்டங்கள் அனைத்தும் உரியவர்களுக்குச் சென்றடைவதை உறுதிசெய்யும் நோக்குடன் மக்கள், அரசுக்கிடையேயான இடைவெளியைக் குறைத்திடும் வகையில், மக்களின் கருத்துக்கள், பின்னூட்டங்களைப் பெறும் **"நீங்கள் நலமா"** என்ற புதிய திட்டத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களால் 06.03.2024 அன்று சென்னை, முகாம் அலுவலகத்தில் தொடங்கி வைக்கப்பட்டுப் பயனாளிகளிடம் நேரடியாகத் தொலைபேசியில் தொடர்புகொண்டு கருத்துக்கள், அரசு நலத்திட்டங்கள் குறித்து பின்னூட்டங்களைக் கேட்டறிந்தார்.

இன்று...

கடந்த மூன்றாண்டுகளில் எண்ணற்ற தமிழ் வளர்ச்சித் திட்டங்கள்... தமிழ்ச் சான்றோர்களுக்குப் பாராட்டு...

**"தமிழுயர்ந்தால் தமிழ்நாடு தானுயரும்
அறிவுயரும் அறமும் ஓங்கும்"**

- என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் பாடிய வரிகளை இதயத்தில் ஏந்தி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ் மொழி வளர்ச்சிக்காகவும்; தமிழை ஆட்சி மொழியாக்கிட அரும்பாடுபட்டு வருவதோடு, தமிழ் வளர்ச்சித் துறையின் வாயிலாக உலகத்தின் முதுமொழியாம் அமுதமெனும் தமிழ்மொழியை உயர்த்துதல், தமிழறிஞர்களுக்கு விருது வழங்குதல், அரிய தமிழ் நூல்களை நாட்டுடைமையாக்குதல், அயலகப் பல்கலைக்கழகங்களில் தமிழ் இருக்கைகளைத் தோற்றுவித்தல்,மாணவர்களிடம் தமிழ் ஆர்வத்தினை ஊக்குவிக்கும் வகையில் திருக்குறள் முற்றோதல், தமிழ்க் கூடல், தமிழ்மொழி இலக்கியத்திறனறிவுத்தேர்வு, தீராக்காதல் திருக்குறள் திட்டம், தமிழ் பரப்புரைக் கழகத்தின் வாயிலாக அயல்நாடு, வெளி மாநில தமிழர்களுக்குத் தமிழ் கற்பித்தல், உலகெங்கிலும் வாழும் தமிழர்களை ஒருங்கிணைக்கும் வகையில், ஜனவரி திங்கள் 12 ஆம் நாள் அயலகத் தமிழர் தின விழா உள்ளிட்ட எண்ணற்ற நன்மைபயக்கும் திட்டங்களைத் திறம்படச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மாநில அரசின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலுக்கு உரிய அங்கீகாரம்

1970ஆம் ஆண்டு முதல் 'நீராரும் கடலுடுத்த' எனத் தொடங்கும் பாடல் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலாக நடைமுறையில் உள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 17.12.2021 அன்று தமிழ்த்தாய் வாழ்த்துப்

பாடலை மாநிலப் பாடலாக அறிவித்து, இப்பாடல் பாடப்படும்போது அனைவரும் தவறாமல் எழுந்து நின்று மரியாதை செலுத்திட வேண்டுமென்று ஆணையிட்டுத் தமிழ்மொழிக்குப் பெருமை சேர்க்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசின் சார்பில் 35 விருதுகள்

தமிழுக்கு அருந்தொண்டாற்றி வரும் தமிழறிஞர்களை அடையாளம் கண்டு அவர்களைப் பெருமைப்படுத்திடும் வகையில், தமிழ்நாடு அரசின் சார்பில் திருவள்ளுவர் விருது, பேரறிஞர் அண்ணா விருது, தந்தை பெரியார் விருது, அண்ணல் அம்பேத்கர் விருது, பெருந்தலைவர் காமராசர் விருது, மகாகவி பாரதியார் விருது, பாவேந்தர் பாரதிதாசன் விருது, முதலமைச்சர் கணினித் தமிழ் விருது, தமிழ்ச்செம்மல் விருதுகள், இலக்கண விருது, இலக்கிய விருது, தூயத் தமிழ்ப் பற்றாளர் விருதுகள் உள்ளிட்ட 35 இனங்களில் ஆண்டுதோறும் விருதுகள் வழங்கிச் சிறப்புச் செய்யப்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் விருதுத் தொகையை ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.2 இலட்சமாக உயர்த்தியதோடு, புதியதாக இலக்கிய மாமணி விருது தோற்றுவிக்கப்பட்டு ஆண்டுதோறும் மூன்று அறிஞர்களுக்குத் தலா விருதுத் தொகை ரூ.5 இலட்சம் வழங்கிட ஆணையிட்டுள்ளார். கடந்த மூன்றாண்டுகளில் 260 விருதாளர்களுக்கு விருது வழங்கி சிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களால் புதியதாக உருவாக்கப்பட்டுப் பொதுத் துறையால் இரண்டு ஆண்டுகள் வழங்கப்பட்ட தகைசால் தமிழர் விருதும் இவ்வாண்டு முதல் தமிழ் வளர்ச்சித் துறையின் வாயிலாக வழங்கப்படவுள்ளது.

நூல்கள் நாட்டுடைமை

தமிழறிஞர்களின் படைப்புகள் எளிய முறையில் மலிவு விலையில் மக்களுக்குக் கிடைத்திடும் வகையிலும், தமிழறிஞர்களின் கருத்துக் கருவூலங்கள் உலக மக்கள் அனைவரையும் சென்றடைந்திட வேண்டும் என்கின்ற உயரிய நோக்கத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில், தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில், கடந்த 3 ஆண்டுகளில் இனமானப் பேராசிரியர் க.அன்பழகன், நாவலர் நெடுஞ்செழியன், சிலம்பொலி சு.செல்லப்பன் உள்ளிட்ட புகழ் வாய்ந்த 22 தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கி, அவர்களின் மரபுரிமையர்க்கு 2 கோடியே 85 இலட்சம் ரூபாய் நூலுரிமைத்தொகையும் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உயரிய சிந்தனையில் உதித்த தமிழறிஞர்களுக்கான கனவு இல்லத் திட்டம்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அரும்புதல்வர் மாண்புமிகு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞரின் 97ஆவது பிறந்த நாளான 03.06.2021 அன்று கனவு இல்லத் திட்டத்தின்கீழ் சாகித்திய அகாதமி விருது, முத்தமிழறிஞர் கலைஞர் செம்மொழித் தமிழ் விருது பெற்ற தமிழறிஞர்களுக்குத் தமிழ் நாட்டிற்குள் வீடு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டு, முதற்கட்டமாக 6 அறிஞர்கட்குத் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் உயர் வருவாய்ப் பிரிவு வீடுகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டு, தமிழுக்கும் தமிழறிஞர்களுக்கும் பெருமை சேர்த்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க இத்திட்டத்தினால் பயனடைந்த தமிழ்ச் சான்றோர்களும் ஆன்றோர்களும், அகமகிழ்ந்து பாராட்டுக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

அயலகத்திலும் அண்டை மாநிலங்களிலும் தமிழ் இருக்கைகள் நிறுவிடவும் தமிழ்ப்பணி ஆற்றிடவும் நிதியுதவி அயல்நாடுவாழ் தமிழர்களின் தமிழ் ஆர்வத்தினை ஊக்கப்படுத்துகின்ற வகையில், அயலகப் பல்கலைக்கழகங்களில் தமிழ் இருக்கைகள் தோற்றுவித்தல் திட்டத்தின்கீழ், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஜெர்மனி நாட்டிலுள்ள கொலோன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை தொடர்ந்து செயல்படுவதற்காக 1 கோடியே 25 இலட்சம் ரூபாயும், ஹூஸ்டன் பல்கலைக் கழகத்தில் தமிழ் இருக்கை நிறுவிட 2 கோடியே 50 இலட்சம் ரூபாயும்

(3 இலட்சம் அமெரிக்க டாலர்). நவி மும்பைத் தமிழ்ச் சங்கக் கட்டட மேம்பாட்டிற்கு 75 இலட்சம் ரூபாயும் புதுதில்லி, ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் தமிழ் இலக்கியவியல் என்ற தனித்துறை உருவாக்கிட 5 கோடி ரூபாயும் ஒரிசா மாநிலம், புவனேஸ்வர் தமிழ்ச் சங்கத்தில் தமிழ் மொழியைக் கற்பித்திட ஏதுவாக வகுப்பறைகள் அமைத்திட ரூ.15 இலட்சம் ரூபாயும் வழங்கி, தாய்மொழியாம் தமிழ் மொழியை அயலகத்திலும், அண்டை மாநிலங்களிலும் வளர்த்திட நிதியுதவிகள் வழங்கப்பட்டுள்ளதை அயலகத் தமிழர்கள் நெஞ்சாரப் பாராட்டியும், வரவேற்றும் உள்ளனர்.

திருக்குறளின் அருமை, பெருமைகளை அறிந்திட மாணவர்களை ஊக்கப்படுத்திடும் "குறள் முற்றோதல்" திட்டம்

01.01.2000ஆம் ஆண்டு குமரிமுனையில் நடைபெற்ற அய்யன் திருவள்ளுவர் சிலை திறப்பு விழாவில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்டு ஆண்டுதோறும் செயல்படுத்தப்பட்டு வரும் "குறள் முற்றோதல்" திட்டத்தின்கீழ், கடந்த மூன்று ஆண்டுகளில் 1,330 குறட்பாக்களையும் முற்றோதல் செய்த 451 மாணவர்களுக்குத் தலா ரூ.15,000 வீதம் மொத்தம் 63 இலட்சத்து 46 ஆயிரத்து 500 ரூபாய் குறள் பரிசுத் தொகை வழங்கப்பட்டுச் சிறப்பிக்கப்பட்டுள்ளனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் தமிழ் மன்றம் வாயிலாக மாணவர்களிடம் தமிழ் உணர்வை ஊக்கப்படுத்திட தமிழ்க்கூடல் திட்டம்

"தமிழ்நாட்டில் கல்லூரி மாணவர்களிடையே தமிழ் ஆர்வத்தினை அதிகரிக்க, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பொறியியல் கல்லூரி மற்றும் மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் தமிழ் மன்றங்கள் அமைத்து மாணவர்களிடையே தமிழ் சார்ந்த போட்டிகளை நடத்திட கல்லூரிக் கல்வி இயக்ககம், தொழில் நுட்பக் கல்வி இயக்ககம், பொறியியல் கல்லூரி இயக்ககம் ஆகியவற்றால் தெரிவு செய்து அனுப்பப்பட்ட 100 கல்லூரிகளுக்கு ஒவ்வொரு கல்லூரிக்கும் வைப்புத் தொகையாக ரூ.5 இலட்சம் என மொத்தம் ரூபாய் 5 கோடி ரூபாயும் முதலாண்டில் போட்டிகள் நடத்திட கூடுதலாக ரூபாய் 36 இலட்சமும் வழங்கும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களால் ஆணையிடப்பட்டுள்ளது.

இதே போன்று, அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் தமிழ்மொழியின் தொன்மை – பெருமைகளை அறியவும், தமிழ் மொழி இலக்கிய இலக்கணங்களின்மீது பற்றும் ஆர்வமும் கொள்ளவும், தமிழுக்குத் தொண்டாற்றிய தமிழறிஞர்கள் – தமிழ்ச்சான்றோர்கள் பற்றி அறிந்து – கொள்ளவும் உதவும் வகையில்

தமிழ்நாடு முழுவதுமுள்ள 6,218 அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளிலுள்ள தமிழ் மன்றங்கள் மூலம் – ஒவ்வொரு பள்ளியிலும் ஆண்டுக்கு மூன்று 'தமிழ்க்கூடல்' நடத்திட ஆண்டுதோறும் பள்ளி ஒன்றுக்கு ரூ.9,000 என மொத்தம் ரூபாய் 5 கோடியே 59 இலட்சத்து 62 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், பள்ளி, கல்லூரிகளில் பயிலும் மாணவர்களிடையே தமிழ் உணர்வினை ஊட்டி ஊக்கப்படுத்திட, கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள், தமிழ்மொழி இலக்கியத் திறனறித் தேர்வு, இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப் பட்டறை, தமிழால் முடியும், இளையோர் இலக்கியப் பயிற்சிப் பாசறை, இலக்கிய வினாடி வினா உள்ளிட்ட பல நிகழ்வுகள் நடத்தப்பட்டுப் பரிசுகளும், பாராட்டுகளும் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டு வருகின்றன.

தீராக் காதல் திருக்குறள் திட்டம்

'தீராக் காதல் திருக்குறள்' என்ற பெயரில் தமிழ் இணையக் கல்விக் கழகம் வாயிலாகத் தீந்தமிழ் நிகழ்ச்சிகளை நடத்திட ரூ.25 இலட்சம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கியுள்ள நிதியுதவியில் குறளோவியம் எனும் தலைப்பில் ஓவியப் போட்டி நடத்தப்பட்டு, மாணவர்கள் வரைந்த ஓவியங்களைக் கொண்டு திருக்குறள் நாள்காட்டி உருவாக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 15.01.2022 அன்று வெளியிடப்பட்டு, ஓவியப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

தமிழ் பரப்புரைக் கழகம்

அயல்நாடு, வெளி மாநிலங்களில் வாழும் தமிழர்களுக்குத் தமிழ் கற்பித்திட தமிழ் பரப்புரைக் கழகம் உருவாக்கிட 1 கோடி ரூபாயும், சங்க இலக்கிய நூல்களிலுள்ள வாழ்வியல் தத்துவங்கள், கருத்துகள் எல்லாம் எழிலேடாக உருவாக்கப்பட வேண்டும் எனும் விழைவுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களால் வழங்கப்பட்ட ரூ.15 இலட்சம் நிதியுதவியில் தயாரிக்கப்பட்ட எழிலேடு புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் 131ஆவது பிறந்த நாளான 29.04.2022 அன்று வெளியிட்டுச் சிறப்பிக்கப்பட்டது.

தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் வாயிலாக ரூ.10.40 இலட்சம் செலவில், புகழ்பெற்ற 38 தலைவர்கள், தமிழறிஞர்கள் ஆகியோரின் அரிய ஒலி/ஒளிப் பொழிவுகளை இணைய தளத்தில் அனைவரும் அணுகும் வகையில் ஆவணமாக்கிட ஒலி/ஒளிப் பொழிவுகள் மின் வடிவிற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

ரூ.5 கோடியில் தமிழில் அண்ணல் அம்பேத்கர் படைப்புகள் !

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அண்ணல் அம்பேத்கர் அவர்களின் அனைத்துப் படைப்புகளையும் தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாகத் தமிழில் மொழிபெயர்த்திட ரூ.5 கோடி வழங்கிட ஆணையிட்டுள்ளார்கள்.

ரூ.5 கோடியில் மின்னூல் பதிப்புகளாகத் தந்தை பெரியார் நூல்கள் !

தமிழக வரலாற்றில் முதன்முறையாகச் சமுதாயச் சிற்பி தந்தை பெரியாரின் சிந்தனைகளை 21 இந்திய மற்றும் உலக மொழிகளில் அச்சு, மின்னூல் பதிப்புகளாகத் தயாரித்திட தமிழ்நாடு பாடநூல், கல்வியியல் பணிகள் கழகத்திற்கு ரூ.5 கோடி வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் சீரிய முயற்சியினால் தமிழ் மொழி வளர்ச்சிக்காக எண்ணற்ற திட்டங்களைக் கடந்த மூன்றாண்டுகளாக நிறைவேற்றி வருவதுடன், பண்டையத் தமிழர் பண்பாட்டையும், பழங்காலத் தமிழர்களின் எழுத்தறிவு, நாகரிக வாழ்வு முறைமைகளையும் நுண்மையோடு பறைசாற்றும் வகையில், கீழடியில் அருங்காட்சியகம் அமைத்துச் சிறப்பித்ததோடு, அதன் தொடர்ச்சியாகப் பொருநையிலும் அருங்காட்சியகம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

சனவரி 12 அயலகத் தமிழர் தின விழா !

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் உலகெங்கிலும் வாழும் தமிழர்களை ஒருங்கிணைக்கும் விதமாகவும், அவர்களின் பங்களிப்பை அங்கீகரிக்கும் விதமாகவும் சனவரி திங்கள் 12ஆம் நாளினை அயலகத் தமிழர் தினமாக அறிவிக்கப்பட்டு, தமிழ் வெல்லும் என்னும் கருப்பொருளை மையமாகக் கொண்டு, நடப்பாண்டில் அயலகத் தமிழர் மாநாடும் வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

கணியன் பூங்குன்றனார் நினைவுத்தூண்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சிவகங்கை மாவட்டம் மகிபாலன் பட்டியில் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" எனும் செம்மொழித் தொடர் தந்த கணியன் பூங்குன்றனார் நினைவுத் தூணைக் காணொலிக் காட்சி வாயிலாக 22.01.2024 அன்று திறந்து வைத்தார்கள்.

இராபர்ட் கால்டுவெல், திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உருவாக்கிய முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டத்தின் முதல் நூலாக அயல்நாட்டு அறிஞர் டாக்டர் இராபர்ட் கால்டுவெல் அவர்கள் எழுதிய "A Comparative Grammar of the Dravidian of South Indian Family of Languages" எனும் நூல் பேராசிரியர் பா.ரா.சுப்பிரமணியன் அவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் கூட்டு வெளியீடாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 16.02.2022 அன்று வெளியிடப்பட்டது.

தமிழில் புகழ்வாய்ந்த கிரேக்க பெருங் காப்பியங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குத் திட்டத்தின் கீழ், பிறநாட்டு இலக்கியங்களைத் தமிழில் மொழிபெயர்த்து அச்சிட்டு வெளியிடும் பணியில் புகழ்வாய்ந்த கிரேக்கக் காப்பியங்களான ஓமரின் 'இலியட்', 'ஒடிசி' ஆகிய இருபெரு நூல்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு 12.07.2023 அன்று வெளியிடப்பட்டுள்ளன.

2025இல் இரண்டாம் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு

இன்பத் தமிழுக்கு மேலும் சிறப்புகள் சேர்க்கும் வகையில் இரண்டாம் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு, சென்னையில் வரும் 2025ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஐந்து நாட்கள் சீரோடும் சிறப்போடும் சிந்தனைச் செயல்திறத்தோடும் மாபெரும் அளவில் நடத்தப்படும் என்றும் அறிவித்துள்ளார்கள்.

இந்த அறிவிப்பு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ் மீது கொண்டுள்ள தீராப் பற்றுதல் உலகுக்குப் பறைசாற்றுவதாக அமைந்து, அவருக்குப் புகழ் சேர்த்துள்ளது என்றால் அது மிகையாகாது.

தமிழ்நாட்டில் முதன்முறையாகப் பார்போற்றும் வகையில் பன்னாட்டுப் புத்தகக் கண்காட்சி நடத்தியதும், தமிழ் வழியில் படித்த மாணவர்களுக்கு அரசுப் பணியில் முன்னுரிமை வழங்கியும், திருக்கோயில்களில் தமிழ் வழிபாட்டினை முன்னிறுத்துவது உள்ளிட்ட எண்ணற்ற தமிழ்ப்பணித் திட்டங்களை நிறைவேற்றி உலகமெங்கும் பரவியுள்ள தமிழர்களின் நெஞ்சங்களிலெல்லாம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அருந்தவப் புதல்வர் முத்துவேலர் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் நிறைந்துள்ளார்கள்.

கிராமப்புறங்களில் சிறப்பான முன்னேற்றம் காணும் ஊரக வளர்ச்சித் துறை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சராகத் திகழ்ந்தபோது கிராமப்புறங்களில் முன்னேற்றத்தில் தனிக்கவனம் செலுத்தி சிறப்பான பல திட்டங்களைச் செயல்படுத்தினார்கள். இன்றையதினம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சராக வீற்றிருக்கும் நிலையில் கிராமங்களின் வளர்ச்சிக்காகச் சிறப்பான பல திட்டங்களை அறிமுகப்படுத்திச் செயல்படுத்தி வருகிறார்கள்.

ஊராட்சி நிருவாகம்

கிராம ஊராட்சிகளில் போதுமான தகவல் தொழில்நுட்பக் கட்டுமானத்தை உறுதி செய்திடும் விதமாக 12,525 கிராம ஊராட்சிகளிலும் கணினிகள் பிரிண்டர்கள், தடையில்லா மின்கலன்கள் (UPS) சாதனம் ஆகியவை கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளது.

சொத்துவரி, குடிநீர்க் கட்டணம், தொழில் வரி, திட்ட அனுமதி, மனைப்பிரிவு அனுமதி, கட்டட அனுமதி போன்ற குடிமக்கள் நலன் சார்ந்த அரசுச் சேவைகளை மக்கள் இணையதளம் வாயிலாக எளிதில் பெற உதவும் வகையில் ஊராட்சிகளில் மின் ஆளுமைக்கான Vptax Portal நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

கிராம ஊராட்சிகளுக்கு நிருவாக அனுமதி அளிக்கும் நிதிவரம்பு ரூ.2 இலட்சம் என்பது ரூ.5 இலட்சமாகவும், வட்டார ஊராட்சிகளுக்கு ரூ.10 இலட்சம் என்பது ரூ.25 இலட்சமாகவும் மாவட்ட ஊராட்சிகளுக்கு ரூ.20 இலட்சம் என்பது ரூ.50 இலட்சமாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

மீண்டும் உத்தமர் காந்தி விருது

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உள்ளாட்சித்துறை அமைச்சராகத் திகழ்ந்தபோது, மாநிலத்தில் சிறப்பாகச் செயல்புரியும் கிராம ஊராட்சிகளுக்கு உரிய அங்கீகாரத்தினை வழங்கும் பொருட்டு உத்தமர் காந்தி விருது வழங்கும் திட்டத்தை அறிமுகம் செய்தார்கள். இடையில் அந்த விருது திட்டம் நிறுத்தப்பட்டது. தற்போது மீண்டும் நிறுவப்பட்டுச் சிறப்பாகச் செயல்படும் கிராம ஊராட்சிகளுக்கு ரூ.10 இலட்சத்திற்கான ஊக்கத் தொகையுடன், மாவட்டத்திற்கு ஒரு கிராம ஊராட்சி வீதம்

37 கிராம ஊராட்சிகளுக்கு இவ்விருது ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது.

ஊரகப் பகுதிகளில் பணியமர்த்தப்பட்டுள்ள சுகாதாரப் பணியாளர்களின் நலனுக்கான பணிகளை மேற்கொள்ள ரூ.5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுச் சுகாதாரப் பணியாளர்கள் நலன் பேணப்படுகிறது.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், பொதுமக்களுக்கு வழிகாட்டும் வழிமுறையாக (155340) என்ற எண்ணுடன் ஓர் உதவி மையம் (Help Desk) இயக்குநரகத்தில் 24X7 என்ற வகையில் முழுநேரம் செயல்படும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்

கிராமப்புறப் பயனளிக்கும் இத்திட்டத்தின்கீழ், மூன்றாண்டுகளில் பெண்கள் 86.16 சதவிகிதமும், மாற்றுத்திறனாளிகள் 2,87,461 பேரும் தாழ்த்தப்பட்ட பழங்குடியினரில் 29.59 சதவிகிதமும் பயன் பெற்றுள்ளனர்.

இத்திட்டம் சிறப்பான முறையில் செயல்படுத்தப்படுவதன் மூலம் நீடித்த நிலைத்த வளர்ச்சியின் குறிக்கோள்களான பசியின்மை, வறுமையின்மை, பாலின வேறுபாடின்மை, ஆகியவை நம் நாட்டில் எய்தப்படும்.

நபார்ட் RIDF திட்டத்தின்கீழ், கடந்த மூன்று ஆண்டுகளில் 550 கி.மீ நீளமுள்ள 287 சாலைப் பணிகளையும், 342 பாலங்கள் கட்டுமானப் பணிகளையும் மேற்கொள்ள ரூ.1,221 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 193 கி.மீ. நீளமுள்ள 107 சாலைப் பணிகள், 151 பாலங்கள் ரூ.354 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்

தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 6,208.88 கி.மீ. நீளமுள்ள 4,606 சாலைப் பணிகள் ரூ.1,884.03 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு உள்ளன.

சாதிவேறுபாடுகளை நீக்க கிராமப்புறங்களிலும் எரிவாயு தகன மேடை

ஊரகப் பகுதிகளில் சமுதாய நல்லிணக்கத்தை மேம்படுத்தி சமத்துவத்தை ஏற்படுத்திட ஊரக வளர்ச்சித் துறையின் புதிய முயற்சியாக 9 மாவட்டங்களில் நகர்ப்புரத்தை ஒட்டியுள்ள கிராம ஊராட்சிகளில் ரூ.20 கோடி மதிப்பீட்டில் 10 எரிவாயு தகனமேடைகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஊரக வீடு வழங்கும் திட்டங்கள் (Rural Housing)

தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசால் பிரதம மந்திரி ஊரகக் குடியிருப்புத் திட்டத்தின்கீழ், 2016-2017 முதல் 2019-2020 வரையிலும் திராவிட மாடல் ஆட்சிக்காலமான 2021-2022ஆம் ஆண்டுகளிலும் மொத்தமாக 7,50,405 வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2016-2017 முதல் 06.05.2021 வரையிலான காலகட்டத்தில் 2,89,730 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும், 2,97,414 வீடுகள் 07.05.2021 முதல் 14.02.2024 வரை கட்டி முடிக்கப்பட்டுள்ளன. நிலுவையில் உள்ள வீடுகளும் முடிவடையும் நிலையில் உள்ளன.

மேலும், காங்கிரீட் மேற்கூரை அமைப்பதற்கு மொத்தமாக ரூ.4,502.23 கோடி மாநில அரசால் விடுவிக்கப்பட்டது. இதுவரை திட்டப் பயன்பாட்டிற்காக ரூ.4,035.65 கோடிச் செலவிடப்பட்டுள்ளது.

பெரியார் நினைவு சமத்துவபுரம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கடந்த 24.06.2021 அன்று பேரவையில் தமிழ்நாட்டில் கட்டப்பட்ட 238 சமத்துவபுரங்களும் சீரமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

அதன்படி, மக்களின் பயன்பாட்டிற்கு ஒதுக்கப்படாத 4 சமத்துவபுரங்கள் உட்பட 149 சமத்துவபுரங்களை முதற்கட்டமாக 2021-2022ஆம் ஆண்டில் சீரமைப்பதற்காக ரூ.194.44 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 98 சதவிகிதப் பணிகள் முடிவுற்று மீதமுள்ள சில பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன.

மேலும், இரண்டாம் கட்டமாக 2022-2023ஆம் ஆண்டில் மீதமுள்ள 88 சமத்துவபுரங்களைச் சீரமைக்க ரூ.67.01 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் 99 சதவிகிதப் பணிகள் முடிவுற்று மீதமுள்ள சில பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளது.

நமக்கு நாமே திட்டம் (ஊரகம்)

இத்திட்டத்தின் மூன்று ஆண்டுகளிலும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறைப் பயன்பாட்டிற்காக 631 கட்டடங்களும், 73 கட்டடங்களும், பொதுமக்கள் பயன்படுத்த பேருந்து நிழற்குடை / பேருந்து நிலையம், கதிரடிக்கும் களம் உட்பட 5,377 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு ஆண்டிற்கு ரூ.3 கோடி வீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

மூன்றாண்டுகளில் 234 சட்டமன்றத் தொகுதிகளுக்கும் ரூ.2,106 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு இத்திட்டத்தின்கீழ், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறைப் பயன்பாட்டிற்காக 5,209 கட்டடங்களும் 408 பிறதுறைக்கான கட்டடங்களும் பொதுமக்கள் பயன்பாட்டிற்காகப் பேருந்து நிழற்குடை / பேருந்து நிலையம் எரிமேடை, சுடுகாடுகளுக்குச் சுற்றுச்சுவர் போன்ற உட்கட்டமைப்புகள் உட்பட 26,920 பணிகள் எடுக்கப்பட்டு 16,247 பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

2021-2022 ஆண்டிற்கு ரூ.2 கோடியும் 2022-2023, 2023-2024ஆம் நிதியாண்டில் ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு ரூ.5 கோடி வீதம் என்ற நிதி ஒதுக்கீட்டுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறைப் பயன்பாட்டிற்காக 1,022 கட்டடங்களும் மற்றும் 74 பிறதுறைக்கான கட்டடங்களும் பொதுமக்கள் பயன்பாட்டிற்குப் பேருந்து நிழற்குடை / பேருந்து நிலையம், கதிரடிக்கும் களம் ஆகிய 427 பணிகளும் உட்பட 6,097 பணிகள் எடுக்கப்பட்டு 3,128 பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்)

தூய்மைபாரதஇயக்கம்(ஊரகம்)திட்டத்தின்கீழ், ஒவ்வொரு குடும்பத்திலும் பாதுகாப்பான கழிப்பறை வசதிகள் அமைக்கும் பொருட்டு 2021-2022இல் இருந்து இதுவரை 1,44,489 குடும்பங்களுக்குக் கழிப்பறைகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆதிதிராவிடர், பழங்குடியினர் குடியிருப்புகள், பிறகுடியிருப்புகளில் வசிக்கும் குடும்பங்களுக்கு கழிப்பறை கட்ட போதிய இட வசதி இல்லாத காரணத்தினால் அந்தக் குடியிருப்புகளுக்கு இக்கால கட்டத்தில் 2,940 சமுதாய சுகாதார வளாகங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

நம்ம ஊரு சூப்பரு பிரச்சாரம்

கிராமப்புறங்களில் தூய்மையை வலியுறுத்தும் "நம்ம ஊரு சூப்பரு இயக்கம்" திட்டத்தின் மூலமாக 37 மாவட்டங்களில் ஊரகப் பகுதிகளில் சுமார் 47,339 குப்பை கொட்டும் இடங்கள்

16,829 பொது இடங்கள், 21,775 பள்ளிகள், 22,695 அங்கன்வாடிகள். 45,824 அரசுக் கட்டடங்கள் / நிறுவனங்கள் 47,949 கிராமப்புற நீர் நிலைகள், 10,011 சமுதாய சுகாதார வளாகம், 15,69,348 மீட்டர் கழிவுநீர் வடிகால்கள் ஆகியவை சுமார் 14,31,591 பணியாளர்களைக் கொண்டு தீவிரத் துப்புரவு நடவடிக்கைகளில் பங்கேற்றுச் சுத்தம் செய்யப்பட்டன.

ஜல் ஜீவன் திட்டம்

2024ஆம் ஆண்டிற்குள் ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் குடிநீர்க் குழாய் இணைப்பு வழங்கிடவும், தேவையான அளவிலும் நிருணயிக்கப்பட்ட BIS 10500 தரத்திலும் வழக்கமான, நீண்ட காலத் தேவைக்கு ஏற்பக் குறைந்த குடிநீர்ச் சேவைக் கட்டணத்துடன் குடிநீர் விநியோகம் செய்வதே ஜல்ஜீவன் இயக்கத்தின் நோக்கமாகும்

ஜல்ஜீவன் திட்டத்தின்கீழ், 3 ஆண்டுகளில் கிராமப் புறங்களின் 63,63,379 வீடுகளுக்கு ரூ.2,010,29 கோடியில் குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

புதிய சுய உதவிக் குழுக்கள் அமைத்தல்

ஊரகப் பகுதிகளில் உள்ள 6,40,313 சுய உதவிக் குழு உறுப்பினர்களைக் கொண்டு 58,746 சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

07.05.2021 முதல் 13.02.2024 வரை சுழல்நிதி ரூ.629.55 கோடி, சமுதாய முதலீட்டு நிதி ரூ.629.55 கோடி நலிவு நிலை குறைப்புநிதி ரூ.14.59 கோடி சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 2,56,508 மகளிர் சுய உதவிக் குழக்களுக்கு வங்கிகள் மூலம் கடனாக ரூ.71,960.43 கோடி வழங்கப்பட்டுள்ளது.

சிறப்பு சுய உதவிக் குழுக்கள்

சமூகப் பொருளாதார விளிம்பு நிலையில் வாழ்வோரைக் கண்டறிந்து அவர்களின் வாழ்க்கை முறையை மேம்படுத்தவும் அவர்களைத் தேசிய நீரோட்டத்தில் சேர்ப்பதற்காகவும் இதுவரை 37,163 சிறப்பு சுய உதவிக் குழுக்கள் இத்திட்டத்தின் மூலமாக உருவாக்கப்பட்டுள்ளன, (முதியோர், ஊனமுற்றோர்) திருநங்கைகள், பழங்குடியினர் மற்றும் சிறுபான்மையினர்) இதன்மூலம் 3 இலட்சத்து 76 ஆயிரத்து 559 பேர்கள் பயனடைந்துள்ளனர்.

இதுவரை உருவாக்கப்பட்டுள்ள 37,163 சிறப்பு சுய உதவிக் குழுக்களில் 12,348 மாற்றுத்திறனாளிகள் குழுக்கள் அமைக்கப்பட்டு, இதுவரை ரூ.410.05 கோடி சுழல்நிதியாகவும் மற்றும் ரூ.24.09 கோடி கிராம வறுமை ஒழிப்பு நிதியாகவும் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த ஒரு ஆண்டில் 6,800 மாற்றுத்திறனாளி குழுக்களுக்குத் தொழில் துவங்கிடும் நோக்கில் சமுதாய முதலீட்டு நிதியிலிருந்து ரூ.40.80 கோடி வழங்கப்பட்டுள்ளது.

சுய வேலை வாய்ப்புத் திட்டம் தனிநபர் தொழில் முனைவு (SEP–I)

சுய வேலை வாய்ப்புத் தனிநபர் தொழில் முனைவுத் திட்டத்தின்கீழ், 21,190 தனி நபர்களுக்கு ரூ.117 கோடியும், 12,503 குழுக்களுக்கு ரூ.428.82 கோடியும் வட்டி மானியத்துடன் கூடிய வங்கிக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

நகர்ப்புரங்களில் செயல்படும் 1,29,630 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.5,266.21 கோடி வட்டி மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ்ச் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

நகர்ப்புரங்களில் செயல்படும் 3,34,763 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.23,675.15 கோடி வங்கிக் கடன் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

வேலைவாய்ப்புடன் கூடிய திறன் வளர்ப்புப் பயிற்சி மற்றும் பணியமர்வு (EST&P)

45,150 நகர்ப்புர ஏழை இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புடன் கூடிய திறன் வளர்ப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு, ரூ.89.30 கோடி நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

511 வேலைவாய்ப்பு முகாம்கள் இளைஞர் திறன் விழாக்கள் ரூ.4.01 கோடிச் செலவில் மாவட்ட அளவில் நடத்தப்பட்டு 92,003 இளைஞர்கள் பல்வேறு நிறுவனங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

- தொகுப்பு : **தமிழரசு அச்சகம்**

தமிழ்நாட்டில் கடந்த மூன்று ஆண்டுகளில் 60,567 நபர்களுக்கு அரசுப் பணி நியமனம்

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்
தலைமையில், தமிழ்நாட்டில்
இந்த அரசு பொறுப்பேற்றதிலிருந்து
கடந்த மாதம் வரை
60,567 நபர்களுக்கு வேலைவாய்ப்பு
வழங்கப்பட்டது - 18.02.2024

தமிழ்நாட்டில், அரசுப் பணிக்கான பணியாளர்களைத் தேர்வு செய்வதற்காக உள்ள தேர்வு முகமைகளான தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், ஆசிரியர் தேர்வு வாரியம், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம், சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் ஆகியவற்றின் மூலம், கடந்த இரண்டரை ஆண்டுகளில் வெவ்வேறு அரசுத் துறைகளில் உள்ள காலிப் பணியிடங்களுக்காக, ஜனவரி 2024 வரை, 27,858 அரசுப் பணியாளர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இது தவிர, பல்வேறு அரசுத் துறைகள், உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக, ஜனவரி 2024 வரை 32,709 நபர்கள் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

துறைவாரியான நியமனங்களைப் பொறுத்தவரை நீதித்துறையில் 5,981 பணியிடங்களும், பள்ளிக்கல்வித்துறையில் 1,847 பணியிடங்களும், வருவாய்த் துறையில் 2,996 பணியிடங்களும், சுகாதாரம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையில் 4,286 பணியிடங்களும், ஊரக வளர்ச்சித் துறையில் 857 பணியிடங்களும், உயர் கல்வித் துறையில் 1,300 பணியிடங்களும், காவல்துறை, நகராட்சி நிருவாகம், வேளாண்மை, சமூக நலம் மற்றும் சத்துணவு போன்ற அரசின் பிற துறைகளின் வாயிலாக 15,442 பணியிடங்களும் அந்தந்தத் துறைகளின் வழக்கமான நடைமுறைகளைப் பின்பற்றி நேரடியாக நிரப்பப்பட்டன. இவ்வகையில் 32,709 இளைஞர்களுக்குப் பணி நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஆக மொத்தம், இந்த அரசு பொறுப்பேற்ற இந்த மூன்று ஆண்டு காலத்திற்குள் (27,858 + 32,709) 60,567 நபர்களுக்கு அரசுப் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இதுமட்டுமன்றி, தமிழ்நாட்டில் படித்த இளைஞர்களுக்குப் பல்லாயிரக்கணக்கில் வேலைவாய்ப்பினை உருவாக்கிட உலக முதலீட்டாளர்கள் மாநாடும் நடத்தப்பட்டது. இம்மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் வாயிலாக நம் மாநிலத்தின் இளைஞர்களுக்கு இந்திய, பன்னாட்டு நிறுவனங்களில் வேலை வாய்ப்புகளை உருவாக்கிட தமிழ்நாடு அரசு வழிவகை செய்துள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசு கல்வித்துறை முன்னேற்றத்தில் இந்தியாவில் தலைசிறந்து விளங்குகிறது

மனிதனை மனிதனாக உயர்த்துவது கல்வி. மனிதச் சமுதாயத்தை மாற்றி அமைக்கும் வலிமையான கருவி கல்வி. Education is a tool for Social Change என்று ஆங்கிலத்திலும் கூறுவர்.

அந்தக் கல்வி, வெள்ளத்தால் அழியாது; வெந்தணலில் இட்டாலும் வேகாது; கள்வரால் கொள்ளையடிக்கவும் இயலாது; பிறர்க்குக் கொடுத்தாலும் குறையாது; எனக் கல்விச் செல்வத்தின் பெருமையை விவேக சிந்தாமணி பாடல் கூறும். எனவேதான், கல்வி வளர்ச்சிக்கு எல்லோரும் தொண்டு செய்கிறார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 2021இல் முதலமைச்சராகப் பொறுப்பேற்றது முதல் தமிழ்நாட்டுக் குழந்தைகள் ஒவ்வொருவரும் தரமான உயர்ந்த கல்வி பெறவேண்டும் எனப் பல்வேறு புதிய திட்டங்களை உருவாக்கி வருகிறார்கள்.

கல்வி வளர்ச்சியில் தொடக்கக் கல்வி மிகமிக முக்கியமானது. அது ஒரு மாளிகைக்கு அடித்தளம் போன்றது; அடித்தளம் வலுவாக இருந்தால்தான் அதன் மீது எழும்பும் கட்டடம் மிகவும் வலுவாக அமையும். அதுபோலத்தான் கல்வியின் ஆரம்பம்-தொடக்கம் சரியாக அமைந்து விட்டால் தொடர்ந்து படிக்கும் ஆர்வத்தை அதுவே குழந்தைகளிடம் ஏற்படுத்திவிடும்.

இந்தச் சிந்தனையின் அடிப்படையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் தொடக்கக் கல்வியின் வளர்ச்சியில் மிகுந்த கவனம் செலுத்தி வருகிறார்கள். புதிய புதிய திட்டங்களைத் தந்து குழந்தைகள் பள்ளிக்குத் தொடர்ந்து வந்து கற்கும் சூழ்நிலையை மேம்படுத்தி வருகிறார்கள்.

அந்த வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உருவாக்கியுள்ள திட்டங்கள் மக்களின் வரவேற்பைப் பெற்றுள்ளன. குழந்தைகளும் கல்வியில் ஆர்வத்துடன் ஈடுபடுகின்றனர். இதற்குத் துணை புரியும் பல்வேறு திட்டங்கள் பின்வருமாறு:

புரட்சிகரமான முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்

குழந்தைகள் காலையில் வீட்டில் உணவு உண்ணாமலேயே பள்ளிக்கு வருகிறார்கள் என்பதைப் பள்ளி நிகழ்ச்சி ஒன்றில் குழந்தைகள் கூறக் கேட்டு அறிந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக உருவாக்கிய திட்டம் காலை உணவுத் திட்டம்.

முதலமைச்சரின் இந்தக் காலை உணவுத் திட்டத்தின்கீழ், மாநகராட்சி, நகராட்சி, ஊரக மற்றும் மலைப் பகுதிகளில் உள்ள அனைத்து 31,008 அரசுத் தொடக்க நடுநிலைப் பள்ளிகளிலும் 1 முதல் 5 வகுப்பு வரை பயிலும் 18.54 இலட்சம் மாணவ, மாணவியர் இன்று பள்ளி வந்ததும் சூடான, சுவையான காலைச் சிற்றுண்டியை உண்டு படிப்பில் கவனம் செலுத்துகின்றனர். காலை உணவு உண்ணாமல் பள்ளி செல்லும் குழந்தைகளை எண்ணிக் கவலை கொண்டிருந்த

தாய்மார்கள் பெருமகிழ்ச்சியோடு இத்திட்டத்தை வரவேற்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வாழ்த்துகிறார்கள். இத்திட்டத்தால் பள்ளிக்கு வருகைதரும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகக் கல்வித்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

இத்திட்டத்தை, இந்தக் கல்வியாண்டில் அரசு உதவிபெறும் தொடக்கப் பள்ளிகளைச் சேர்ந்த 2.50 இலட்சம் மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் விரிவுபடுத்தப்படும் என்றும், இத்திட்டம் இந்த ஆண்டில் ரூ.600 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும் என்றும் நிதிநிலை அறிக்கை மூலம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்திட்டத்தை, தெலுங்கானா மாநில அரசு உட்பட பல்வேறு மாநிலங்கள் வரவேற்றுள்ளன. மேலும், கனடா நாட்டுப் பிரதமர் அவர்கள் இத்திட்டத்தை வரவேற்றுத் தம்முடைய நாட்டில் நடைமுறைப்படுத்தி உள்ளார்கள். உண்மையிலேயே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிமுகப்படுத்திய இந்த மகத்தான திட்டம் கல்வித்துறை வரலாற்றில் ஒரு மாபெரும் புரட்சித் திட்டமாகப் போற்றப்படுகிறது.

இல்லம் தேடிக் கல்வித் திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் கொரோனா காலக் கற்றல் இடைவெளியை நிறைவு செய்திடும் நோக்கில் இந்தியாவில் எந்த மாநிலமும் செயல்படுத்தாத வகையில் அறிமுகப்படுத்திய திட்டம் இல்லம் தேடிக் கல்வித் திட்டம். மூன்று ஆண்டுகளாக ரூ.590.27 கோடியில் செயல்படுத்தி வரும் இந்த இல்லம் தேடிக் கல்வித் திட்டத்தில் 1.65 இலட்சம் தன்னார்வலர்கள் மூலம் 24 இலட்சம் குழந்தைகள் பயன் பெற்று வருகின்றனர்.

வாசிப்புப் பழக்கத்தை வளர்க்கும் திட்டம்

கோடை விடுமுறைக் காலத்தில் குழந்தைகளிடையே வாசிப்புப் பழக்கத்தை வளர்த்திடும் வகையில் தமிழ் மற்றும் ஆங்கிலக் கதைகள் அடங்கிய சிறு நூல்கள் மூலம் தொடர் வாசிப்பு நிகழ்ச்சி நடத்தப்பட்டு அதில் தமிழ்நாடு முழுவதிலும் குழந்தைகள் ஆர்வமுடன் பங்கேற்றதைக் காண முடிந்தது.

குழந்தைகளின் கற்பனைத்திறன், படைப்பாற்றல் திறன், சிந்திக்கும் திறன் ஆகியவற்றை வெளிக்கொணரும் விதமாக இல்லம் தேடிக் கல்வி மையங்களில் "குறும்படக் கொண்டாட்டம்" 2023ஆம் ஆண்டு மார்ச் திங்களில் நடத்தப்பட்டது. இந்தக் கொண்டாட்டத்திலும் குழந்தைகள் ஆர்வமுடன் பங்கேற்று மகிழ்ந்தனர்.

எண்ணும் எழுத்தும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை படிக்கும் ஒவ்வொரு குழந்தையும் 2025ஆம் ஆண்டுக்குள் வாசித்தல், எழுதுதல், அடிப்படை எண் கணிதத் திறன்கள் அடைவதை உறுதி செய்யும் திட்டமாகத் தொடங்கப்பட்டுள்ளது, எண்ணும் எழுத்தும் திட்டம். இத்திட்டத்தின் மூலம் 37,866 அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் 22.27 இலட்சம் மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர்.

நுழை–நட–ஓடு–பற–திட்டம்

குழந்தைகள் அணுகக்கூடிய எளிய மொழியில் புத்தகங்களின்மேல் குழந்தைகளுக்கு ஆர்வத்தை ஈடுபடுத்தும் வகையில் வண்ணப்படங்களுடன் நுழை, நட, ஓடு, பற என நான்கு தனித்தனி வாசிப்பு நிலைகள் கொண்டதாக 53 புத்தகங்கள் உருவாக்கப்பட்டு அனைத்து அரசுப் பள்ளிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன. அடுத்து, 50 புத்தகங்கள் அச்சிடப்பட்டு அனைத்து அரசுப் பள்ளிகளுக்கும்

வழங்கப்படுகின்றன. இந்தப் புத்தகங்கள் பல வண்ணப் படங்களுடன் குழந்தைகள் கண்டதும் ஆர்வத்துடன் புத்தகங்களைக் கையில் எடுக்கத் தூண்டும்வண்ணம் அமைந்துள்ளன.

காடு / மலைப்பகுதி குழந்தைகளுக்காகச் சிறப்பு வசதி

காட்டுப் பகுதிகளிலும் மலைப் பகுதிகளிலும் பள்ளிகளுக்குச் சென்று வருகின்ற குழந்தைகளுக்கு ஆபத்தான பல சிரமங்கள் உள்ளன. அந்தச் சிரமங்கள் அனைத்தையும் நீக்கிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சில சிறப்பு ஏற்பாடுகளைச் செய்துள்ளார்கள்.

2023-2024ஆம் ஆண்டில் தொலைதூர / அடர்ந்த காடு / மலைப் பகுதிகளில் உள்ள 1,692 குடியிருப்புகளைச் சேர்ந்த தொடக்கநிலை முதல் உயர்நிலை வரையில் படிக்கும் 27,707 மாணவர்கள் பள்ளிக்குப் பாதுகாப்பாகச் சென்றுவர போக்குவரத்துப் பாதுகாவலர்களுடன் வசதிகளையும் ஏற்படுத்தினார்கள். இதனால், குழந்தைகள் அச்சமில்லாமல் பள்ளிகளுக்கு வந்து பயில்வது அப்பகுதி மக்களிடையே பெருத்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

தொடக்கப் பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நல்ல வகுப்பறைச் சூழ்நிலைகள் குழந்தைகளின் படிப்பார்வத்தை அதிகரிக்கச் செய்யும் என்பதைக் கருதி, அரசுத் தொடக்கப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் பயனடையும் வகையில் 22,931 திறன்மிகு வகுப்பறைகள் (Smart Classroom) ரூ.435.68 கோடிச் செலவில் அமைத்துள்ளார்கள்.

மேலும், அனைத்து அரசுத் தொடக்க, நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப்பள்ளிகளில் உள்ள பள்ளி மேலாண்மைக் குழுக்கள் மூலம் 100 Mbps அதிவேக இணைய இணைப்பைப் பெறவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்துள்ளார்கள்.

இடைநிலை ஆசிரியர்களுக்குக் கைக் கணினிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சிறப்புத் திட்டமாகத் தொடக்கப் பள்ளிகளில் பணிபுரிந்து வரும் 79,723 இடைநிலை ஆசிரியர்களுக்கு மாறிவரும் கற்றல் கற்பித்தல் முறைகளுக்கு ஏற்பத் தங்களைச் சிறப்பாக மெருகேற்றிக் கொள்வதற்கு உதவும் வகையில் ரூ.101.48 கோடிச் செலவில் கைக் கணினிகள் (Tablet) வழங்க ஆவன செய்துள்ளார்கள்.

மாற்றுத்திறன் மாணவர்களுக்குத் தனிக் கவனம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களின் கல்வி நலனில் ஆசிரியர்கள் மனிதாபிமானத்துடன் தனிக் கவனம் செலுத்த வேண்டும் எனக் கூறியுள்ளார்கள். அதன்படி 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் அறிவுசார் குறைபாடுள்ள மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களின் அடிப்படை எண்ணறிவு, எழுத்தறிவு திறன்களை உறுதிசெய்யும் வகையில் எளிமைப்படுத்தப்பட்ட மாணவர் பயிற்சி நூல் மற்றும் ஆசிரியர் கையேடு போன்ற கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் வடிவமைக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களில் மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களைச் சிறப்புப் பயிற்றுநர்கள் மூலம் அடையாளம் காணும்

வகையில் "நலம்நாடி" என்னும் செயலி ஒன்றும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

நற்பண்புகளை வளர்க்கும் கதை நூல்கள்

ஊராட்சி ஒன்றிய தொடக்க, நடுநிலைப் பள்ளிகளில் மாணவர்களிடம் நற்பண்புகளை வலுப்படுத்துதல் பொருட்டு கதை மையங்களை ஏற்படுத்தி 160 பள்ளிகளில் ரூ.121.75 இலட்சம் செலவில் கதை நூல்கள் உருவாக்கப்பட்டு மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

பேராசிரியர் அன்பழகனார் பள்ளி மேம்பாட்டுத் திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதிகளைச் சிறப்பாக ஏற்படுத்திட வேண்டும் என்பதற்காகப் பேராசிரியர் அன்பழகனார் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தை உருவாக்கியுள்ளார்கள். இந்தத் திட்டத்தின்கீழ் அரசு தொடக்க, நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளின் உள்கட்டமைப்புப் பணிகளுக்கென ரூ.1,887.76 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுப் பணிகள் நடைபெறுகின்றன. ஊராட்சி ஒன்றிய தொடக்க,நடுநிலைப் பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் 3,374 வகுப்பறைக் கட்டடங்களும் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் கட்டப்பட்டுள்ள 227 வகுப்பறைக் கட்டடங்களும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

மேலும், அரசுத் தொடக்க, நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளின் பராமரிப்புப் பணிகளுக்கென மொத்தம் ரூ.667.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஆசிரியர்கள் நியமனம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஏழை, எளிய மக்களும் நாடும் அரசுப் பள்ளிகளின் கல்விப் பணிகள் தடையின்றிச் செம்மையாக நடைபெற வேண்டும் என்பதில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டு வழங்கியுள்ள அறிவுரைகள்படி 4,989 இடைநிலை ஆசிரியர்கள் 5,154 பட்டதாரி ஆசிரியர்கள் 3,876 முதுகலை ஆசிரியர்களுக்கான மொத்தம் 14,019 ஆசிரியர் பணியிடங்களில் தற்காலிக அடிப்படையில் பள்ளி மேலாண்மைக் குழுக்களின் மூலம் நியமனம் செய்யப்பட்டு வகுப்பறைகளில் கற்பித்தல் பணி தடையின்றி மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. ஆசிரியர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் 76 நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு வட்டாரக் கல்வி அலுவலர்களாகப் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

ஆசிரியர்களுக்கு அண்ணா தலைமைத்துவ விருது

விருது வழங்கிப் பாராட்டுவது எல்லோரையும் மகிழச் செய்யும், எல்லோரையும் மேலும் சிறப்பாகப் பணி செய்யத் தூண்டும். எனவே ஆண்டுதோறும் அரசின் திட்டங்கள் அனைத்தையும் பள்ளிகளில் சிறப்பாகச் செயல்படுத்தும் 100 தலைமை ஆசிரியர்களுக்கு அறிஞர் அண்ணா தலைமைத்துவ விருதுடன், பாராட்டுச் சான்றிதழும், கேடயமும் வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இப்படிப் பல்வேறு புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருவதன் பயனாக அரசுத் தொடக்கப் பள்ளிகளுக்கு வரும் குழந்தைகள் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. எனவேதான், கல்வித்துறை முன்னேற்றத்தில் தமிழ்நாடு இந்தியாவில் சிறந்து விளங்குகிறது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் அனைவராலும் பாராட்டப்படுகிறார்கள். இது பள்ளிக் கல்வித்துறையில் ஒரு புதிய சாதனையாகும்.

- தொகுப்பு : **தமிழரசு அச்சகம்**

கடந்த மூன்றாண்டுகளில்

ரூ.8.65 இலட்சம் கோடி முதலீடுகள் ஈர்ப்பு...

30 இலட்சம் வேலை வாய்ப்புகள் உருவாக்கம்...



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சென்னையில் வள்ளுவர் கோட்டம், தருமபுரியில் அதியமான் கோட்டம் எனத் தமிழ் வளர்க்கும் கோட்டங்களை அமைத்தார்கள்.

அதுபோல், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 2021இல் பொறுப்பேற்றது முதல் இந்தியாவின் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் புதிய முதலீடுகளை ஈர்த்துத் தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளைப் புதிது புதியதாக அமைத்துத் தமிழ்நாட்டை ஒரு தொழில் கோட்டமாக உருவாக்கிடும் முயற்சியில் ஓய்வின்றி உழைத்து வருகிறார்கள்.

2030ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாடு 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார வளர்ச்சி பெற்ற மாநிலமாகவும், இந்தியப் பொருளாதாரத்துக்கு மிக முக்கிய பங்களிக்கிற மாநிலமாகவும் தமிழ்நாட்டை உயர்த்திடும் பெரும் இலட்சிய இலக்கை நிர்ணயித்து மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் அரசு முனைப்புடன் செயல்படுகிறது.

முதற்கட்டமாக, முதலீட்டாளர்களின் முதல் முகவரி தமிழ்நாடு என்ற பெயரில் சென்னை, கோயம்புத்தூர், தூத்துக்குடி ஆகிய நகரங்களில் நடத்தப்பட்ட முதலீட்டாளர்கள் மாநாடுகள் மூலம் ரூ.1,90,803 கோடிக்கான முதலீடுகள் ஈர்க்கப்பட்டு, 2,80,600 பேருக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டன.

இரண்டாம் கட்டமாக, ஐக்கிய அரபு நாடுகள், சிங்கப்பூர், மலேசியா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டு 17,371 பேருக்கு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துகிற வகையில், ரூ.7,441 கோடி மதிப்பிலான முதலீடுகள் பெறப்பட்டன.

மூன்றாம் கட்டமாக, 2024 ஜனவரி 7, 8 ஆகிய நாட்களில் சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் தமிழ்நாடு அரசு நடத்திய உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் முன்எப்போதும் இல்லாத அளவாக, ரூ.6,64,180 கோடி முதலீடுகளும், அவற்றின்மூலம் 14,54,712 பேருக்கு நேரடி வேலைவாய்ப்புகளும் 12,35,945 பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பும் என மொத்தம் 26,90,657 வேலைவாய்ப்புகளுக்கு உறுதி செய்யப்பட்டுள்ளது.

நான்காம் கட்டமாக 27.01.2024 அன்று புறப்பட்டு ஸ்பெயின் நாட்டிற்குச் சென்று அங்குள்ள பொருளாதாரம் மற்றும் வர்த்தகத் துறை அமைச்சக அதிகாரிகள், ஸ்பெயின் தொழில் கூட்டமைப்புப் பொறுப்பாளர்கள், இன்வெஸ்ட் ஸ்பெயின் என்ற அமைப்பைச் சேர்ந்தவர்கள் ஆகியோரைச் சந்தித்துத் தமிழ்நாட்டிலுள்ள தொழில் வாய்ப்புகளையும், அரசு வழங்கும் சலுகைகளையும், கிடைக்கும் திறன்வாய்ந்த மனித வளத்தையும் எடுத்துக் கூறி, தமிழ்நாட்டில் தொழில் தொடங்கிட வருமாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அழைப்பு விடுத்தார்கள். அவற்றின் பயனாக ரூ.3,440 கோடி அளவிற்குத் தொழில் முதலீடுகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழ்நாடு குறித்தும், தமிழ்நாடு அரசு குறித்தும் உலகளாவிய தொழில் நிறுவனங்களுக்கு உள்ள நம்பிக்கையை இது காட்டுகிறது.

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியையும், தமிழ்நாட்டின் பொருளாதார மேம்பாட்டையும் புகழ்ந்து உலக அளவில் முக்கியப் பத்திரிகையான 'நியூயார்க் டைம்ஸ்' செய்தி வெளியிட்டு பாராட்டியது.

'ஆண்டுவாரி முதலீட்டாளர்கள் சந்திப்பு 2022' நடைபெற்றபோது ஆசிய-ஓசியான மண்டலத்திற்கான சிறந்த முதலீட்டு நிறுவனத்திற்குரிய விருது தமிழ்நாடு அரசின் வழிகாட்டி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது.

புதிய தொழில் முதலீட்டாளர்கள் ஒப்பந்தங்கள் செய்துள்ள நிலையில் தமிழ்நாட்டைப் பெரிய அளவில் தொழில்மயமாக்க அடுத்த 5 ஆண்டுகளில் 45,000 ஏக்கர் பரப்பளவில் நில வங்கி உருவாக்கப்படுகிறது. இதற்காக, சிப்காட் நிறுவனம் ஏறத்தாழ 33,489 ஏக்கர் நிலம் தெரிவு செய்துள்ளது. இதில், 22,941 ஏக்கர் நிலம் அரசின் நிருவாக அனுமதி பெற்றுக் கையகப்படுத்தப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின், இதுவரை 44 தொழிற்சாலைகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டு, 27 தொழிற்சாலைகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலமாக 74,757 இளைஞர்கள், மகளிருக்கு வேலைவாய்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.

இப்படித் தொழில் முதலீடுகளுக்கான ஒப்பந்தங்கள் செய்யப்படுவதுடன், ஒப்பந்தங்கள் தொழில் நிறுவனங்களாக உருப்பெறத் தேவையான நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்வதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொழில் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் குழு ஒன்றை அமைத்துள்ளார்கள். இந்தக் குழுவின் தொடர் நடவடிக்கைகளின் மூலம் பல தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில் அடுத்தடுத்து உருவாகும் வாய்ப்பு உள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களுடைய 33 மாத ஆட்சிக் காலத்தில் பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் வாயிலாக ரூ.8.65 இலட்சம் கோடி முதலீடுகள் வருவதற்கான வாய்ப்பு ஏற்பட்டு, அதன்மூலம் ஏறத்தாழ 30 இலட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும் சூழ்நிலை உருவாகியுள்ளது. இது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய ஆட்சிக்காலம் ஒரு மாபெரும் தொழிற்புரட்சிக்கான அடித்தளம் என்பதை வெளிப்படுத்துகிறது.

மின் தடை இல்லை என்று வரலாறு படைத்த மூன்றாண்டுகள்...

சூரிய, சந்திர, விண்மீன்களுக்கு அடுத்து உலகை ஒளிமயமாக்கும் அற்புத அறிவியியல் சக்தி "மின்சாரம்".

தமிழ்நாட்டில் 1933ஆம் ஆண்டில் முதன்முதல் முகிழ்த்த மின்சாரம் இன்று தமிழ்நாட்டை வளப்படுத்திடும் வலிமைமிக்க சக்தியாகத் திகழ்கிறது.

இன்று நூற்றாண்டு நிறைவு விழா காணும் சரித்திர நாயகர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1974ஆம் ஆண்டில் அனைத்துக் கிராமங்களுக்கும் மின்சார இணைப்புகளை வழங்கி இந்தியாவிலேயே முதன்முதலாகத் தமிழ்நாட்டில் மின்சாரம் இல்லாத கிராமங்களே இல்லை எனும் சாதனையைப் படைத்தவர்!

1990ஆம் ஆண்டில் இந்தியாவிலேயே முதன்முதலாக விவசாய பம்ப் செட்களுக்கு இலவச மின்சாரம் வழங்கி-வேளாண் உற்பத்தி பெருகச் செய்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். இன்று, அவர் வழியில் – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள், 2021இல் ஆட்சிப் பொறுப்பேற்று – திராவிட மாடல் ஆட்சியை வழங்கி வருகிறார். மின் உற்பத்திக்காகப் புதிய பல திட்டங்களை உருவாக்கி வருகிறார். 2021 முதல் மூன்றாண்டுகளில் 2 இலட்சம் விவசாய மின் இணைப்புகள் வழங்க ஆணையிட்டு வழங்கி வருகிறார்.

மின் பிரச்சினையைத் தீர்க்கும் மின்னகம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், "94987 94987" என்னும் கைபேசி எண் வழியாக, நுகர்வோர் மின்சாரம் தொடர்பாக, தமக்கு ஏற்படும் சிக்கல்கள் குறித்துப் புகார்களைப் பதிவு செய்திட "மின்னகம்" எனும் மாநில அளவிலான மின் நுகர்வோர் சேவை மையத்தினை 20.06.2021 அன்று தொடங்கி வைத்தார்கள். இந்த மின்னகம் வழியாக மக்கள் இருந்த இடத்திலிருந்தே இதுவரை தெரிவித்த 23 இலட்சத்து 97 ஆயிரத்து 957 புகார்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 99.82 சதவிகிதப் புகார்கள் மீது தீர்வுகள் காணப்பட்டதால் மக்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் அரசைப் பாராட்டுகின்றனர்.



2021-2022ஆம் ஆண்டில் கட்டடங்களின் கூரைகள் மேல் நிறுவப்பட்ட சூரிய மின் சக்தி திறனுக்காக, புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் (MNRE) ரூ.7.9 கோடி ஊக்கத் தொகை வழங்கித் தமிழ்நாட்டைப் பாராட்டியுள்ளது.

தருமபுரியில் 12 மெகாவாட், எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 15 மெகாவாட் இணை மின் திட்டங்கள் இயக்கி வைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் தனியாருக்குச் சொந்தமான பழைய திறனற்ற 16.8 மெகாவாட் காற்றாலைகளை மீண்டும் வலுப்படுத்திடும் முயற்சியில் திராவிட மாடல் அரசு ஊக்கம் தந்துள்ளது.

மின் நிறுவுத்திறன்

ஆட்சிப் பொறுப்பேற்ற 2021ஆம் ஆண்டில் 32,595 மெகாவாட்டாக இருந்த தமிழ்நாட்டின் மொத்த மின் நிறுவுத்திறன் திராவிட மாடல் ஆட்சியின் திட்டங்களால் 36,671 மெகாவாட் என அதிகரித்துள்ளது.

அதிகபட்ச மின் தேவையை நிறைவு செய்த திராவிட மாடல் அரசு

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின், மின்கட்டமைப்பு, 30.04.2024 அன்று ஒரு நாளைக்கு அதிகபட்சமாக 454.32 மில்லியன் யூனிட் மின்சாரத்தையும், 02.05.2024 அன்று 20,830 மெகாவாட் உச்ச மின் தேவையையும் எவ்விதத் தடங்கலுமின்றி வழங்கி சாதனை படைத்துள்ளது திராவிட மாடல் அரசு.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி

10.09.2023 அன்று காற்றாலை மூலம் பெறப்பட்ட அதிகபட்ச மின் உற்பத்தி 120.25 மில்லியன் யூனிட்டுகளும் 23.04.2024 அன்று சூரிய சக்தி மின் உற்பத்தி நிலையங்கள் மூலம் கிடைக்கப்பெற்ற அதிகபட்ச மின் உற்பத்தி 40.50 மில்லியன் யூனிட்டுகளும் தமிழ்நாடு மின்சாரத் தேவைகளை ஈடுசெய்வதில் பெரிதும் துணைபுரிந்துள்ளன.

இந்த அரசு பதவியேற்ற நாளில் இருந்து 3,984 மெகாவாட் சூரிய ஒளி மின் உற்பத்தி நிலையங்கள், தமிழ்நாடு மின் கட்டமைப்பில் இணைக்கப்பட்டுச் சூரிய ஒளி மின் உற்பத்தி நிலையங்களின் மொத்த நிறுவுத்திறன் 8,496 மெகாவாட்டாக உயர்ந்து, தமிழ்நாட்டு மக்களுக்கு மிகுந்த பயனளிக்கிறது.

மின் உற்பத்தி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டு மக்களுக்குத் தடையற்ற மின்சாரத்தை வழங்குவதில் ஆர்வம் கொண்டு செயல்படுத்தும் முனைப்பான திட்டங்களால் மின் வாரியத்திற்குச் சொந்தமான அனல் மின் நிலையங்களின் மூலம் 2020–2021இல், உற்பத்தி செய்யப்பட்ட 15,554 மில்லியன் யூனிட்டுகள் மின்சாரம், 2021-2022ஆம் ஆண்டில் 20,391 மில்லியன் யூனிட்டுகளாக இது 31.1 சதவிகிதம் ஆகும். இது 2022–2023ஆம் ஆண்டில் 22,689 மில்லியன் யூனிட்டுகளாக – 11.27 சதவிகிதம் அதிகரித்தது. மேலும், 2023–2024ஆம் ஆண்டில் 25,479 மில்லியன் யூனிட்டுகள் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது. இது 12.3 சதவிகிதமும் அதிகரித்துத் தொடர்ந்து சாதனைகள் படைக்கப்பட்டுள்ளன.

அதேபோல தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் புனல் மின் நிலையங்களில் மின் உற்பத்தி 2021-2022 & 2022-2023ஆம் ஆண்டுகளில் ஒன்றிய மின் ஆணையம் நிருணயித்த இலக்கை விட 1,660.36 மற்றும் 2,261.08 மில்லியன் யூனிட்டுகள் முறையே கூடுதலாக உற்பத்தி செய்யப்பட்டும் சாதனைகள் படைக்கப்பட்டுள்ளன.

மின் உற்பத்தித் திட்டங்கள்

தமிழகத்தின் சொந்த நிறுவுத்திறனை அதிகரிக்கும் பொருட்டு, நான்கு புதிய திட்டங்களுக்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. அனல் மின்நிலையங்களுக்குத் தேவைப்படும் அதிக அளவு நிலக்கரியைக் குறுகிய காலத்தில் கையாள்வதற்காக, தூத்துக்குடி துறைமுகம் தளம்-1-இல் அதிகக் கொள்ளளவு

கொண்ட புதிய இரண்டு நிலக்கரி கையாளும் இயந்திரங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 31.01.2023 அன்று தொடங்கி வைத்துச் செயல்பாட்டிற்குக் கொண்டுவந்தார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வட சென்னை அனல் மின் நிலையம் –III திட்டத்தை 07.03.2024 அன்று தொடங்கிவைத்ததைத் தொடர்ந்து அந்நிலையம் 425 மெகாவாட் அளவிற்கு உற்பத்தித் திறன் அடைந்து, 70.5 மில்லியன் யூனிட் மின்சாரத்தை உற்பத்தி செய்துள்ளது.

வட சென்னை அனல் மின் நிலையம்–Iஇல் இருந்து கரி துகள்கள் வட சென்னை அனல் மின் திட்டம்–III –ஐ பாதிக்காமல் இருப்பதற்காக, ரூ.38 கோடிச் செலவில் தூசித் திரை (Dust Screen) 2023 ஜனவரியில் அமைக்கப்பட்டுள்ளது.

மின் தொடரமைப்பு

2021ஆம் ஆண்டு முதல் 54 புதிய துணை மின் நிலையங்கள் 10,779 எம்.வி.ஏ. நிறுவு திறனுடன் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. தற்போதுள்ள துணை மின் நிலையங்களில் 378 கூடுதல் மின் மாற்றிகள் / தரம் உயர்த்தப்பட்டு, கூடுதல் 6,373 எம்.வி.ஏ. திறனுடன் நிறுவப்பட்டுள்ளன.

3,086.53 சுற்று கி.மீ., மிக உயர் அழுத்த மின் பாதைகள் நிறுவப்பட்டுப் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

தரமான மின்சார விநியோகத்திற்காக, 9 முக்கிய துணைமின் நிலையங்களில் 1,840 மெகாவோல்ட் ஆம்பியர் திறன் கொண்ட ரியாக்டர்கள் நிறுவப்பட்டுள்ளன.

புதிய மின் கோட்டங்களும், மண்டலங்களும்

தஞ்சாவூர், திருவண்ணாமலை, கரூர் ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு மூன்று புதிய மின்மண்டலங்களும், சேப்பாக்கம், சோழிங்கநல்லூர், பல்லாவரம், தேன்கனிக்கோட்டை, பென்னாகரம், திருவெண்ணெய்நல்லூர், ஊத்துக்குளி, வேடசந்தூர், ஜெயங்கொண்டம், சாத்தூர், கெங்கவல்லி என 11 புதிய கோட்டங்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 29.08.2021 முதல் அதிக மின்பளுவுள்ள பகுதிகள், குறைந்த மின்னழுத்தம் நிலவிய பகுதிகளில் தடையின்றிச் சீரான மின்சாரம் வழங்குவதற்காக இதுவரை மொத்தம் 11,038 புதிய மின்மாற்றிகள் நிறுவப்பட்டன.



டெல்டா மாவட்டங்களின் கடலோரம் அமைந்துள்ள துணை மின் நிலையங்களுக்கு இடையே செல்லும் 33 கே.வி. மேனிலை உயரழுத்த மின் கம்பிகள் புதைவடங்களாக மாற்றப்பட்டு தடையில்லா மின்சாரம் வழங்கப்படுகிறது.

சுசீந்திரம், திருவரங்கம் திருக்கோயில்களின் தேரோடும் வீதிகளில் மேலே செல்லும் உயரழுத்த மின்கம்பிகள் புதைவட மின்பாதைகளாக மாற்றப்பட்டுள்ளன.

33/11 கி.வோ துணைமின் நிலையங்கள் 46 நிறுவப்பட்டுள்ளன. 17,785 கி.மீ. உயர் அழுத்த மின் பாதைகளும் 31,705 கி.மீ. தாழ்வழுத்த மின் பாதைகளும் நிறுவப்பட்டுப் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டன.

மிக்ஜாம் புயலுக்குப் பின்

மிக்ஜாம் புயல் காரணமாக ஏற்பட்ட சேதங்கள் 11,164 அதிகாரிகள், பணியாளர்களின் உதவியுடன் 24 மணி நேரமும் இடைவேளையின்றி போர்க்கால அடிப்படையில் மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, குறுகிய காலத்தில் மின் விநியோகம் சீரமைக்கப்பட்டது.

தென் மாவட்டங்களில் அதீத கன மழைக்குப் பின்

தென் மாவட்டங்களில் 17.12.2023, 18.12.2023 ஆகிய நாட்களில் பெய்த வரலாறு காணாத அதீத கன மழையால் ஏற்பட்ட சேதங்களை, 5,920 அதிகாரிகள், பணியாளர்களின் உதவியுடன் 24 மணி நேரமும் இடைவேளையின்றி போர்க்கால அடிப்படையில் மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, குறுகிய காலத்தில் மின் விநியோகம் சீரமைக்கப்பட்டது.

சென்னையில், மழைக்காலங்களின் போது மழைநீர் தேங்கும் இடங்களில் உள்ள மின் தூண் பெட்டிகள் (Pillar Box) கண்டறியப்பட்டு, 5,086 மின்தூண் பெட்டிகள் தரை மட்டத்திலிருந்து 1 மீட்டர் உயரத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளன.

மழைக் காலங்களின் போதும் சீரான மின்சாரம் வழங்குவதற்காக, துணைமின் நிலையங்களில் உள்ள 41 திறன் மின் மாற்றிகளின் அடித்தளம் 1 மீட்டர் உயரத்திற்கு உயர்த்தப்பட்டன.

தகவல் தொழில்நுட்பத் துறையின் மேம்பாட்டுப் பணிகள்

மின் இணைப்பு எண்ணுடன் ஆதார் எண் இணைக்கும் பணி மிகக் குறுகிய காலத்தில் வெற்றிகரமாக முடிக்கப்பட்டது.

புதிய விவசாய மின் இணைப்பு, கட்டண மாற்றம், பெயர் மாற்றம், சோலாரை சோலார் அல்லாததாக மாற்றுதல், மின் ரசீது பதிவிறக்கம் போன்ற அனைத்துத் தாழ்வழுத்தச் சேவைகளுக்கான வசதி ஆன்லைன் விண்ணப்ப போர்டல் உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மின் உற்பத்தி, பகிர்மானக் கழகத்தின் அனைத்துக் கள சொத்துக்களின் விவரங்கள் டிஜிட்டல் மயமாக்கபட்டுள்ளது. (ஜியோடேக்கிங்) இப்பணியை வெற்றிகரமாக நிறைவு செய்த இந்தியாவின் முதல் டிஸ்காம் என்ற பெருமை தமிழ்நாடு மின்வாரியத்திற்குக் கிடைத்துள்ளது.

புவியியல் தகவல் முறைமையை வாரிய பொறியாளர்களைப் பயன்படுத்திச் செயல்படுத்தியதன் விளைவாக ரூ.200 கோடி செலவு சேமிப்பு ஏற்பட்டுள்ளது.

திராவிட மாடல் ஆட்சியில் மின்துறை பெற்றுள்ள விருதுகள்

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் நிறுவன வள திட்டமிடல் (ERP) செயல்படுத்தியதற்கு 2022இல் - SKOTCH தங்க விருது.

தொழில்நுட்பத்துடன் கூடிய தானியங்கி மின் அளவிகளைக் காற்றாலை மின் உற்பத்தி நிலையங்களில் பொருத்தியதற்கான வெள்ளி SKOTCH விருது.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், இந்திய ஸ்மார்ட் கிரிட் ஃபோரம் இன்னோவேஷன் விருது 2023 (Indian Smart Grid Forum Innovation Award 2023) இல் பங்கேற்றுப் புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தி நிலையங்களில் தானியங்கி மின் அளவிகள் பொருத்தி செயல்படுத்தியமைக்கான வைர விருது

"இந்தியன் எக்ஸ்பிரஸ்" குழுமத்தின் எக்ஸ்பிரஸ் கம்ப்யூட்டர் ஐடி எக்ஸலன்ஸ் விருது

ஜிஐஎஸ் அமலாக்கத்திற்காக ஸ்கோச் "ஆர்டர் ஆஃப் மெரிட்" விருது ஆகிய விருதுகளைப் பெற்றுத் தமிழ்நாடு மின்துறை புகழ் ஈட்டியுள்ளது.

பாரதீப் துறைமுகத்தில் 2021-2022, 2022-2023 ஆண்டுகளில் அதிக அளவில் நிலக்கரியைக் கையாண்டதற்காக பாரதீப் துறைமுகம் வழங்கிய "சிறந்த ஏற்றுமதியாளர் விருது

"இந்திய விண்ட் எனர்ஜி ஃபோரம் லீடர்ஷிப் விருதுகள் 2023" (India Wind Energy Forum Leadership Awards 2023) என்ற அமைப்பில் இருந்து புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியாளர்களுக்கான (RE Generators) தானியங்கி மின் அளவிகளை (AMR) பொருத்தியதற்கான "இந்த ஆண்டின் மிகவும் முற்போக்கான நிலை" என்ற வணிகச் சிறப்பு விருது

2022-2023ஆம் ஆண்டில் 8.02 மில்லியன் மெட்ரிக்டன் நிலக்கரியினை எண்ணூர் / காமராஜர் துறைமுகத்தில் கையாண்டதன் பொருட்டுச் "சிறந்த வணிகக் கூட்டாளர் விருதும்"

27.12.2023 அன்று கப்பலிலிருந்து ஒரே நாளில் 61,940 மெட்ரிக்டன் நிலக்கரியினை இறக்கிச் சாதனை படைத்ததற்காகத் தமிழ்நாடு மின்உற்பத்தி, பகிர்மானக் கழகத்திற்கான "சாதனை விருதும்" காமராஜர் துறைமுகத்தால் வழங்கப்பட்டன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படிச் சிறப்பான பல விருதுகளை பெற்றுச் சாதனைகள் பல படைத்துள்ளது தமிழ்நாடு அரசின் மின்துறை.

சேமிப்பு

2021-2022ஆம் நிதியாண்டில் தமிழ்நாட்டில் உள்ள மின் உற்பத்தி நிலையங்களின் திறமையான செயல்பாடு, வட்டி விகிதம் குறைப்பு, உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் மூலம் ரூ.2,745 கோடியும் 2022-2023ஆம் நிதியாண்டில் ரூ.1,090 கோடி சேமிப்பும் ஏற்பட்டுள்ளது.

சலுகைகளால் 2.36 கோடி வீட்டு உபயோக மின்நுகர்வோர் பயன்

10.09.2022 முதல் திருத்தப்பட்ட மின் கட்டணத்தில், வீட்டு மின் நுகர்வோர்களுக்கு நிலைக் கட்டணம் இரு மாதங்களுக்கு ரூ.20 முதல் ரூ.50 வரை செலுத்துவதில் இருந்து முழுவிலக்கு அளிக்கப்பட்டு, நுகர்வோர்களிடம் இருந்து மின் பயன்பாட்டுக் கட்டணம் மட்டுமே வசூலிக்கப்படுகிறது. இதனால், தமிழ்நாட்டில் உள்ள 2.36 கோடி வீட்டு மின் நுகர்வோர்கள் பயன் பெற்று வருகின்றனர்.

கைத்தறி நெசவாளர்கள் பயன்

கைத்தறி நெசவாளர்களுக்கு இரு மாதங்களுக்கு 200 யூனிட்டுகள் மட்டுமே இலவசம் என்ற நிலை மாற்றியமைக்கப்பட்டு இரு மாதங்களுக்கு 300 யூனிட்டுகள் இலவசம்

என உயர்த்தி வழங்கியது இந்த அரசு. இதனால் தமிழ்நாட்டில் உள்ள 73,642 கைத்தறி நெசவாளர்கள் பயன் பெற்று வருகின்றனர்.

விசைத்தறி நெசவாளர்கள் பயன்

விசைத்தறி நெசவாளர்களுக்கு இரு மாதங்களுக்கு 750 யூனிட்டுகள் இலவசம் என்ற நிலை மாற்றப்பட்டு இரு மாதங்களுக்கு 1,000 யூனிட்டுகள் இலவசம் என உயர்த்தப்பட்டது. மேலும், மின் கட்டண உயர்வில் 35 காசுகள்/யூனிட் இரு மாதங்களுக்கு 1,001 யூனிட் முதல் 1,500 யூனிட் வரை, 70 காசுகள் / யூனிட் இரு மாதங்களுக்கு 1,500 யூனிட்டுகளுக்கு மேல் உள்ள மின் நுகர்வுக்கு குறைக்கப்பட்டுள்ளது. இதனால், தமிழ்நாட்டில் உள்ள 1,68,000 விசைத்தறி நுகர்வோர்கள் இந்த அரசை மனதாரப் பாராட்டி வருகின்றனர்.

ஆரம்பத்தில் தாழ்வழுத்த சிறு, குறு, நடுத்தர தொழிற்சாலைகளுக்கு உச்ச நேர மின் நுகர்விற்கான கட்டணமானது (ToD Charges) 25 சதவிகிதத்திலிருந்து 15 சதவிகிதமாக 08.11.2022 முதல் குறைக்கப்பட்டு, பின்னர் குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனத்தின் கோரிக்கைகளைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு அரசு கூடுதல் சலுகையாக ஸ்மார்ட் மீட்டர் (Smart meter) பொருத்தப்படும் வரை உச்ச நேர நுகர்வுக்கான மின் கட்டணம் வசூலிக்கப்படாது என 10.11.2023 முதல் அறிவித்தது. இந்தக் குறைக்கப்பட்ட கட்டணங்களைத் தமிழ்நாடு அரசு மானியமாக வழங்குகிறது. இதனால் சுமார் 3.11 இலட்சம் தாழ்வழுத்தத் தொழிற்சாலை நுகர்வோர்கள் பயன் பெற்று வருகின்றனர்.

3.30 கோடி நுகர்வோர் பயன்

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2023-2024ஆம் நிதி ஆண்டிற்கான உயர்த்தப்பட்ட மின் கட்டண ஆணைக்கு ஏப்ரல் 2022 முதல் ஏப்ரல் 2023 வரையிலான நுகர்வோர் விலைக் குறியீட்டுக்குப் பதிலாக ஆகஸ்ட் 2022 முதல் ஏப்ரல் 2023 வரையிலான நுகர்வோர் விலைக் குறியீட்டைக் கருத்தில் கொள்ளுமாறு, கொள்கை உத்தரவு பிறப்பித்தது. இதன்மூலம் மின் கட்டண உயர்வு 4.7 சதவிகிதத்திலிருந்து 2.18 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டது. எனவே, இந்தக் குறைக்கப்பட்ட மின் கட்டணத்தினால் அனைத்து 3.30 கோடி நுகர்வோர்களும் 01.07.2023 முதல் பயனடைந்து வருகின்றனர்.

2.36 கோடி வீட்டு நுகர்வோர்களுக்கு

2.36 கோடி வீட்டு நுகர்வோர்களுக்கு, 01.07.2023 முதல் 2.18 சதவிகிதம் மின் கட்டணம் உயர்த்தப்படவில்லை. இதனால் ஏற்படும் நிதிச்சுமையை மக்களிடம் சுமத்தாமல் திராவிட மாடல் அரசே ஏற்று மக்களைக் காத்துள்ளது.

சிறிய அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கும் சலுகை

அரசு சிலவகை, அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு, கட்டணச் சலுகையாக தாழ்வழுத்த வீதப்பட்டி ID-யின்கீழ் உள்ள பொதுவான வசதிகளுக்கான கட்டணத்தை யூனிட் ஒன்றிற்கு ரூ.8.15லிருந்து ரூ.5.50ஆக குறைத்து ரூ.2.65-ஐ மானியமாக வழங்குகிறது. இதற்காகப் புதியதாக தாழ்வழுத்த விகிதப்பட்டி IE அறிமுகப்படுத்தி 01.11.2023 முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது. இந்த வீதப்படி மின்தூக்கி வசதி இல்லாத அடுக்குமாடி குடியிருப்புகளில் பொது விநியோகம் அதாவது 10 குடியிருப்பாளர்களுக்குக் குறைவாகவோ அல்லது சமமாகவோ, பொதுவான விளக்குகள், நீர் விநியோகத்திற்காக மூன்று தளங்களுக்குக் குறைவாகவோ அல்லது சமமாகவோ உள்ள சிறிய அடுக்குமாடி குடியிருப்புகளுக்குப் பொருந்தும்.

இலட்சம் தொழில் நிறுவனங்கள் பயன்

LT III Bஇன்கீழ் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களை ஊக்குவிக்கும் வகையில் 10.11.2023 முதல், சூரிய ஒளி மேற்கூரை மின் உற்பத்திக்கான வலையமைப்பு கட்டணத்தினை 50 சதவிகிதம் (Solar Roof top Network Charges) குறைத்துள்ளது. இந்த 50 சதவிகிதம் குறைக்கப்பட்ட வலையமைப்பு கட்டணத்தினால் தமிழ்நாட்டில் உள்ள 3.11 இலட்சம் தொழில் நிறுவனங்கள் பயன் பெறுகின்றன.

நூலகங்களுக்குச் சலுகைகள்

பொதுமக்களிடம் படிக்கும் திறனை மேம்படுத்தும் விதமாக வணிக ரீதியில் இயங்காத நூலகங்களுக்கான மின் கட்டணத்தினை மானியம் இல்லா வீட்டு விகிதப்பட்டியலில் கணக்கீடு செய்வதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு; 30 சதவிகித கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது. இதனால், தமிழ்நாட்டில் இயங்கிவரும் பல நூலகங்கள் பயனடைந்துள்ளன.

இப்படி, மூன்றாண்டுகளாக மின் தடையே இல்லை எனும் வரலாறு படைத்துள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் செய்துள்ள சீர்திருத்தங்களால் புதியதாகத் துணை மின் நிலையங்களை நிறுவி, மின் மாற்றிகளை அமைத்து, மின்விநியோக அமைப்புகள் சீராகச் செயல்படுவதால் பொதுமக்கள் மகிழ்ச்சியுடன் இந்த அரசைப் பாராட்டுகின்றனர்.

“டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டம்”

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்
திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் தொடங்கி வைத்தார் - 01.03.2024

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் நூற்றாண்டுப் பொன் விழாவைச் சிறப்பித்திடும் வகையில் அனைத்து ஊராட்சிகளுக்கும் டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தினை அறிவித்தார்.

அதன் தொடர்ச்சியாக, மதுரை மாவட்டத்தில் 18.02.2024 அன்று இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டு, 29.02.2024 அன்று கோயம்புத்தூர் மாவட்டத்திலும், திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள 526 கிராம ஊராட்சிகளுக்கு மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 672 கலைஞர் விளையாட்டு உபகரணங்களின் தொகுப்பை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது,

“கலைஞருடைய நூற்றாண்டில், இன்னும் பெருமையாகக் கூறினால் நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளில் திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த 526 கிராம ஊராட்சிகளுக்குக் கலைஞர் விளையாட்டு உபகரணங்களை வழங்குவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். அனைவரையும் சந்திப்பதில் பெருமை அடைகின்றேன். தமிழ்நாட்டில் உள்ள 12,620 கிராம பஞ்சாயத்துக்களுக்கும் ரூ.86 கோடி மதிப்பீட்டில் விளையாட்டு உபகரணங்களைக் கொண்டு போய் சேர்க்க வேண்டும் என்ற அடிப்படையில் தான் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தைச் சென்ற வாரம் மதுரையில் தொடங்கி வைத்தோம். நேற்றுக் கோவை மாவட்டத்தில் உள்ள 228 ஊராட்சிகளுக்கும் இந்தக் கலைஞர் விளையாட்டு உபகரணங்களை விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கும் கொடுத்தோம்.,

இன்றைக்குத் திருவள்ளூர் மாவட்டத்தில் 526 ஊராட்சிகளுக்கு கிரிக்கெட், வாலிபால், கால்பந்து, கபாடி, சிலம்பம் உள்ளிட்ட 33 வகையான விளையாட்டு உபகரணங்கள் கொண்ட 672 கலைஞர் விளையாட்டு உபகரணங்களை உங்கள் கைகளில் ஒப்படைக்க

இருக்கின்றோம். இதுவரை வழங்கிய மாவட்டங்களிலேயே நம்முடைய திருவள்ளூர் மாவட்டத்தில்தான் அதிக அளவிலான பஞ்சாயத்துக்களுக்கு அதிக அளவிலான விளையாட்டு உபகரணங்களை வழங்கியுள்ளோம். அந்தப் பெருமை திருவள்ளூர் மாவட்டத்திற்கு இந்த திருவள்ளூர் மாவட்டம் ஏராளமான விளையாட்டு வீரர்களைத் தமிழ்நாட்டிற்கும் இந்தியாவிற்கும் வழங்கி உள்ளது.

துப்பாக்கி சுடுதல் போட்டி

இங்கே நிறைய சாதனையாளர்கள் வந்து உள்ளார்கள். மேடையில் கூட அமர வைத்து அழகு பார்த்திருக்கிறோம். திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த தம்பி ஸ்ரீ கார்த்திக் சபரிராஜ், எகிப்து நாட்டில் நடந்த ISSF World Championship போட்டியில் துப்பாக்கி சுடுதல் ஜூனியர் பிரிவில் ஒரு தங்கப் பதக்கம், ஒரு வெள்ளிப் பதக்கம் வென்று உள்ளார். இங்குள்ள அனைவரும் நம்முடைய வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

அதேப்போல் திருவள்ளூர் மாவட்டத்தை சேர்ந்த பளுதூக்கும் வீரர் தம்பி தனுஷ் இங்கு வருகை தந்திருக்கிறார். IWF World Championship போட்டியில் ஒரு வெள்ளிப் பதக்கம், ஒரு வெண்கலப் பதக்கம் வென்று உள்ளார். அது மட்டுமல்ல கடந்த ஆண்டு நடந்த காமன் வெல்த் போட்டியிலும், தமிழ்நாடு அளவில் நடந்த போட்டியிலும் தங்கப் பதக்கம் வென்று திருவள்ளூர் மாவட்டம் மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த தமிழ்நாட்டிற்குமே பெருமை தேடி தந்துள்ளார்.

இவருடைய தொடர் முயற்சிகளால் தேசிய அளவில் நடந்த IWLF சீனியர், ஜூனியர் யூத்நேஷனல் வெயிட்லிஃப்டிங் சாம்பியன்ஷிப் போட்டியிலும் தங்கப் பதக்கம் அடிச்சிருக்கிறார். இன்றைக்கு கார்த்திக் சபரிராஜ், தனுஷ் அவர்களை மேடையில் அறிமுகப்படுத்தி இருக்கிறோம் என்றால், இங்க இருக்கக்கூடிய ஒவ்வொரு விளையாட்டு வீரர்களுக்கும் அவர்கள்தான் முன்னுதாரணமாக உள்ளார்கள்.

சமீபத்தில்கூட கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகளை நடத்திக் காட்டினோம். கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகளில் 38 தங்கப் பதக்கங்கள், 21 வெள்ளிப் பதக்கங்கள், 39 வெண்கலப் பதக்கங்கள் என 98 பதக்கங்களுடன் தமிழ்நாடு முதல்முறையாக பதக்கப் பட்டியலில் 2ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. அதில் ஒரு தங்கப் பதக்கம் தம்பி தனுஷ் அவர்கள் பெற்றதைப் பெருமையோடு சொல்ல விரும்புகிறேன். அடுத்தமுறை இன்னும் முயற்சி எடுத்தால், இரண்டாவது இடத்திலிருந்து முதல் இடத்தைப் பிடிப்பதற்கு முயற்சிசெய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய விளையாட்டு மேம்பாட்டுத் துறை எடுத்து வருகின்ற முயற்சிகளைப் பாராட்டி CII (Confederation of Indian Industries) என்ற மிக பிரபலமான அமைப்பு The Best State for Promoting Sports என்ற விருதைத் தமிழ்நாடு அரசுக்கும், துறைக்கும் வழங்கிக் கௌரவித்தார்கள். அதேபோல் மிக புகழ் பெற்ற ஆங்கிலப் பத்திரிகை 'தி இந்து' வெளியிடும் "Sports Star" மீண்டும் The Best State for Promoting Sports என்ற விருதைத் தமிழ்நாட்டிற்கும் நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் நம்முடைய துறைக்கும் வழங்கினார்கள்.

உயரிய ஊக்கத்தொகை

தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை தொடங்கி, அதன்மூலம் ஏராளமான ஏழை எளிய மாற்றுத்திறன் கொண்ட விளையாட்டு வீரர்களுக்கும் தொடர்ந்து நாங்கள் உதவிகளைச் செய்து வருகிறோம். இதுவரைக்கும் 300க்கும் மேற்பட்ட வீரர்களுக்கு ரூ.6 கோடி அளவுக்கு தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை மூலமாக நிதி உதவி வழங்கி இருக்கிறோம். சர்வதேச, தேசிய அளவிலான போட்டிகளில் தொடர்ந்து பதக்கங்களை வெல்லுகின்ற நம்முடைய வீரர் வீராங்கனைகளுக்குத் தொடர்ந்து உயரிய ஊக்கத் தொகையினை வழங்கி வருகின்றோம். கடந்த வாரம் சாதனை படைத்த 650 வீரர்களுக்கு 16 கோடியே 24 இலட்சம் ரூபாய் உயரிய ஊக்கத் தொகையாக என்னால் வழங்கப்பட்டது.

மக்கள் பணியில் கலைஞர்

அது மட்டுமல்லாமல் தொடர்ச்சியாகத் தொடர்ந்து தமிழ்நாட்டில் கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள், ஆசிய

கோப்பை ஹாக்கி விளையாட்டுப் போட்டிகள், ஸ்குவாஷ் உலகக் கோப்பை, வேர்ல்ட் சர்ஃபிங் லீக், சைக்கிளோத்தான், சென்னை செஸ் மாஸ்டர் 2023, தேசிய ஹாக்கி விளையாட்டுப் போட்டி எனத் தொடர்ந்து தமிழ்நாட்டில் நடத்தி வருகிறோம். இந்தியாவில் விளையாட்டுத் துறை அது தமிழ்நாடுதான் என்ற வகையில் தொடர்ந்து புதுப்புது முயற்சிகளை நாங்கள் மேற்கொண்டு வருகின்றோம். அதில் மிக மிக முக்கியமானது தான் இந்தக் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் திட்டம்.

விளையாட்டுத் துறை வளர்ச்சி என்பது நகரங்களில் மட்டும் இருப்பது அல்ல. கிராமங்களுக்கும் சென்றடைய வேண்டும். விளையாட்டு வீரர்கள் வர வேண்டும் என்பதற்காக தான் இந்தக் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் திட்டத்தை நாங்கள் தொடங்கி இருக்கின்றோம். இந்த விளையாட்டு உபகரணங்களைப் பயன்படுத்தி கிராமங்களில் இருக்கக்கூடிய இளைஞர்கள் நல்ல உடல் ஆரோக்கியத்தோடும் புத்துணர்ச்சியோடும் இருக்க வேண்டும் என்று நாங்கள் கேட்டுக் கொள்கின்றோம்.

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞருடைய பெயரால் எத்தனையோ திட்டங்கள் இருந்தாலும், ஆனாலும் நம்முடைய விளையாட்டுத் துறை சார்பாக முதல்முறையாகக் கலைஞர் பெயரால் விளையாட்டுத் துறைத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. கலைஞர் அவர்களுக்கு அரசியல்வாதி, இலக்கியவாதி, பேச்சாளர், எழுத்தாளர் எனப் பல முகங்கள் உண்டு. ஆனால் விளையாட்டுக்கும் கலைஞருக்கும் என்ன தொடர்பு. ஏன் இத்திட்டத்திற்குக் கலைஞர் அவருடைய பெயரை வைத்து உள்ளீர்கள் எனச் சில பேர் கருதலாம். கலைஞர் அவர்கள் தன்னுடைய சிறு வயதிலேயே களத்தில் இறங்கி விளையாடியவர். அதன் பிறகு தான் அரசியலுக்கு வந்து ஆடுகளத்தில் விளையாடாமல் இருந்திருக்கலாம்.

ஆனால் அதையெல்லாம்விட அவருடைய பெயரை இத்திட்டத்திற்குச் சூட்டியதற்கு முக்கியமான ஒரு காரணம் உண்டு. ஒரு விளையாட்டு வீரருக்கு இருக்க வேண்டிய அத்தனை குணங்களும் திறமைகளும் கலைஞர் அவர்களுக்கு இருந்தது. அதுதான் அவருடைய சிறப்பு. ஒரு விளையாட்டு வீரருக்கு என்னென்ன திறமைகள் வேண்டும். நல்ல எனர்ஜி வேணும். நல்ல கூர்மையான அறிவுத்திறன் வேண்டும். தோல்வியிலும் துவண்டு விடாத மனத் திடம் வேண்டும். இதைவிட முக்கியம் நல்ல டீம் ஒர்க் வேணும். இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம்.

இந்தத் திறமைகள் அனைத்தும் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரிடம் பிறப்பிலேயே இருந்தது. கலைஞருடைய எனர்ஜிக்கு நிகரான எனர்ஜியை வேறொருவரோடும் ஒப்பிட்டும் பார்க்க முடியாது. இன்று இவ்வளவு நவீனப் போக்குவரத்து வசதிகள், சாலை வசதிகள், தொலைதொடர்பு வசதிகள் எல்லாம் இப்போது இருக்கிறது. இந்தக் காலத்திலேயே ஒவ்வொரு ஊருக்கும் சுற்றுப் பயணம் மேற்கொள்வதற்குச் சோர்வு ஏற்பட்டு விடுகிறது. ஆனால், அந்தக் காலத்தில் எந்த விதமான வசதிகளும் இல்லாமல், கலைஞர் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் இருக்கக் கூடிய ஒவ்வொரு கிராமம் கிராமமாக சுற்றுப்பயணம் சென்று கட்சியை வளர்த்தார். மக்களைச் சந்தித்தார். மக்கள் பணி ஆற்றினார் என்றால், அவருக்கு எந்த அளவிற்கு எனர்ஜி இருக்க வேண்டும் என்று நினைத்துப் பாருங்கள்.

கலைஞருக்கு நிகர் கலைஞர்

கலைஞர் அவர்களுக்கு இருக்கக் கூடிய கூர்மையான அறிவுத்திறன் மிக ஆச்சரியமானது. தான் என்ன சொல்ல போகிறோம். என்ன செய்ய போகிறோம். அதற்குப் பதிலாக எதிரில் இருப்பவர் என்ன சொல்ல போகிறார்கள். என்ன செய்ய போகிறார்கள் அதற்கு என்ன பதில் சொல்லலாம் என்பதற்குக் கலைஞருக்கு நிகர் கலைஞர் தான். அதேபோல் தான் ஒரு விளையாட்டு வீரருக்கும் அந்தத் திறமை தேவை. நாம் இப்படி விளையாடினால் நம்முடைய எதிர் அணியினர் எப்படி விளையாடுவார் என்று கணிக்க வேண்டும். அதற்கு ஏற்றப்படி நமது திட்டத்தை மாற்றிக்கொள்ள வேண்டும். அந்தக் கூர்மையான அறிவுத்திறன் இருந்தால் தான் விளையாட்டில் ஒவ்வொரு வீரனும் வெற்றி பெற முடியும்.

அடுத்துக் கலைஞருடைய மனத் திடம். வெற்றியாக இருந்தாலும் சரி. தோல்வியாக இருந்தாலும் சரி. கலைஞர் எப்போதும் ஒரே போல் தான் இருப்பார். அந்தத் திறனையும், மன திடத்தையும், தோல்வி அடைந்து விட்டோம் துவண்டு விடுவதோ, வெற்றி பெற்று விட்டோம் என்று அகங்காரத்தோடு இருக்கக் கூடாது. அந்த திறமையும் ஒவ்வொரு விளையாட்டு வீரனுக்கும் மிக மிக முக்கியம்.

கலைஞருடைய டீம் வொர்க். ஒரு திறமையான அணி இருந்தால் தான், ஒரு திறமையான போட்டி நடக்கும். அதை நீங்கள் உருவாக்கிக் கொள்ள வேண்டும். ஒரு திறமையான வீரர்களைக் கொண்ட அணி அமைத்துக் கொண்டாலே பாதி வெற்றி அடைந்ததற்கு சமம். இப்படி ஒரு திறமையான விளையாட்டு வீரருக்கு இருக்கக்கூடிய அனைத்துக் குணங்களும், திறமைகளும் கலைஞர் அவர்களுக்கு இருந்தது. அதனால்தான் யாராலும் எப்போதும் வீழ்த்த முடியாத அரசியல் வீரராக கலைஞர் அவர்கள் இந்தியாவில் உயர்ந்து நின்றார்.

வெற்றி என்பது சுலபம் அல்ல

அத்தகைய கலைஞருடைய பெயரால் வழங்கப்படுகின்ற இந்த விளையாட்டு உபகரணங்களை பெறக்கூடிய இளைஞர்களை எல்லாம் நான் கேட்டுக் கொள்வது எல்லாம் கலைஞர் அவர்களுக்கு இருந்த குணங்களையும், திறமைகளையும் நீங்களும் வளர்த்துக்கொள்ள வேண்டும். அந்தக் குணங்களை நீங்களும் வளர்த்துக் கொண்டு பல்வேறு திறமைகளைச் சாதனைகளை வளர்க்க வேண்டும். வெற்றி என்பது சுலபமாக கிடைக்காது. கலைஞர் சொன்ன வார்த்தை தான். நீண்ட தூரம் ஓடினால்தான் அதிக உயரம் தாண்ட முடியும் என்று கலைஞர் சொல்வார்கள். எனவே, விளையாட்டுத் துறை மட்டுமல்ல நீங்கள் தேர்ந்தெடுத்துள்ள எந்தத் துறையாக இருந்தாலும், துறைகளில் வெல்ல வேண்டுமென்றால் இன்று இளம் தலைமுறையினர் அதற்காக உழைக்க வேண்டும்.

கலைஞருடைய விளையாட்டு உபகரணங்களைப் பெற்ற திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள அத்தனை ஊராட்சிகளையும், அத்தனை ஊராட்சிகளின் முகங்களாக உள்ள மாணவ, மாணவியர்கள் விளையாட்டு வீரர் வீராங்கனைகளையும் நான் இந்த நேரத்தில் வாழ்த்துகிறேன்" என்று பேசினார்.

இதன் தொடர்ச்சியாக மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளுக்கும் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் கொண்டு செல்லும் வாகனத்தைக் கொடியசைத்து மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்.

"என் நெஞ்சே உன் அன்னை"

என் இனிய நண்பா!
இளவேனிற் கவிதைகளால்
இதய சுகம் தந்தவனே! உன்
இதயத் துடிப்பை ஏன் நிறுத்திக் கொண்டாய்?
தென்றலாக வீசியவன் நீ! என் நெஞ்சில்
தீயாகச் சுட்டவனும் நீ! அப்போதும்
அன்றிலாக நம் நட்பு திகழ்ந்ததே யன்றி
அணைந்த தீபமாக ஆனதேயில்லை நண்பா!

கண்ணதாசா! என்
எண்ணமெலாம் இனிக்கும் நேசா!
கவிதை மலர்த்தோட்டம் நீ! - உன்னைக்
காலமெனும் பூகம்பம் தகர்த்துத்
தரைமட்டம் ஆக்கிவிட்டதே!

கைநீட்டிக் கொஞ்சுவோர் பக்கமெலாம்
கரம் நீட்டித் தாவுகின்ற குழந்தை நீ!
கல்லறைப் பெண்ணின் மடியினிலும்
அப்படித்தான் தாவி விட்டாயோ,
அமைதிப்பால் அருந்தித் தூங்கிவிட!

இயக்க இசைபாடிக் களித்த குயில் உன்னை
மயக்க மருந்திட்டுப் பிரித்தார் முன்னை!
தாக்குதல் கணை எத்தனை தான் நீ
தொடுத்தாலும்
தாங்கிக் கொண்ட என் நெஞ்சே உன் அன்னை!

திட்டுவதும் தமிழில் நீ திட்டியதால் - சுவைப்
பிட்டு என ஏற்றுக் கொண்ட என்னை,
தித்திக்கும் கவித் தமிழா! பிரிவின்
மத்தியிலே ஏன்விட்டுச் சென்று விட்டாய்?

அடடா! அந்த இளமைக் கழனியில்
அன்பெனும் நாற்று நட்டோம்!
ஆயிரங் காலத்துப் பயிர் நம் தோழமையென
ஆயிரங் கோடிக் கனவுகள் கண்டோம்!
அறுவடைக்கு யாரோ வந்தார்!
உன்னை மட்டும் அறுத்துச் சென்றார்!

நிலையில்லா மனம் உனக்கு! ஆனால்
நிலை பெற்ற புகழ் உனக்கு!
இந்த அதிசயத்தை விளைவிக்க- உன்பால்
இனிய தமிழ் அன்னை துணை நின்றாள்!

என் நண்பா!
இனிய தோழா!
எத்தனையோ தாலாட்டுப் பாடிய உன்னை
இயற்கைத் தாய் தாலாட்டித்
தூங்க வைத்தாள்!

எத்தனையோ பாராட்டுப் பெற்ற உனக்கு
இயற்கைத் தாயின் சீராட்டுத்தான்
இனிக்கிறதா?
எனை மறந்தாய்! எமை மறந்தாய்!
உனை மறக்க முடியாமல்
உள்ளமெலாம் நிறைந்தாய்!

- முத்தமிழறிஞர் **கலைஞர்** அவர்கள்,
கவிஞர் கண்ணதாசன் அவர்கள்
17.10.1981இல் மறைந்தபோது எழுதிய கவிதை...

திராவிடப் பேரொளி பண்டிதர் அயோத்திதாசர் அவர்கள் பிறந்த நாள்

சென்னை, கிண்டி, காந்தி மண்டபத்தில் 20.05.2024 அன்று, தமிழ்நாடு அரசின் சார்பில் திராவிடப் பேரொளி பண்டிதர் அயோத்திதாசர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு அன்னாரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறைச் செயலாளர் முனைவர் இல. சுப்பிரமணியன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., அவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

சுதந்திரப் போராட்ட வீரர் வீரபாண்டிய கட்டபொம்மன் விழா

சென்னை, கிண்டி, காந்தி மண்டபத்தில் 10.05.2024 அன்று சுதந்திரப் போராட்ட வீரர் வீரபாண்டிய கட்டபொம்மன் விழாவை முன்னிட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில் அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்குச் செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., அவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

தமிழ்நாடு அரசின் "**நான் முதல்வன்**" திட்டத்தின் மூலம் படித்து குடிமைப் பணி தேர்வில் வெற்றி பெற்ற செல்வி **இன்பா** அவர்கள், தமிழ்நாடு அரசுக்கு பாராட்டு

தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளில் காலியாக உள்ள 95 பணியிடங்களுக்கான குரூப் 1 தேர்வுகள் அறிவிப்பு கடந்த 2022ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து, விண்ணப்பித்தவர்களுக்கான முதல் நிலைத் தேர்வு கடந்த 2022ஆம் ஆண்டு நவம்பர் 19ஆம் தேதி நடைபெற்றது. அதன் முடிவுகள் கடந்த 2023 ஏப்ரல் மாதம் வெளியானது.

இதைத் தொடர்ந்து, குரூப் 1 முதன்மை தேர்வுகள் கடந்த ஆகஸ்ட் மாதம் நடத்தப்பட்டன. அதில், 1,333 ஆண்கள், 780 பெண்கள் என மொத்தம் 2,113 பேர் கலந்துகொண்டு தேர்வை எழுதினர். இதில் 90 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

இந்த குரூப் 1 தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களில் ஒருவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் கனவுத் திட்டமான, 'நான் முதல்வன்' திட்டத்தில் பயிற்சிப் பெற்றுத் தேர்ச்சி பெற்றவர் என்ற செய்தி வெளியாகி நான் முதல்வன் திட்டத்தின் வெற்றியைப் பறைசாற்றியது.

இம்முறை குரூப் 1 தேர்வில் வெற்றி பெற்றவர்களில் பலர் மிகவும் ஏழ்மையான நிலையில் தனது சொந்த முயற்சியில் வீட்டிலிருந்தே படித்து வெற்றி பெற்றுள்ளனர் எனும் செய்திகள் வந்த வண்ணம் உள்ளன.

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பணிபுரிகின்ற மூன்று பெண் ஊழியர்கள் ஒரேநேரத்தில் குரூப் 1 தேர்வில் தேர்ச்சிப் பெற்று அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளனர்.

அதேபோல, தென்காசி மாவட்டத்தைச் சேர்ந்த பீடி சுற்றும் தொழிலாளி ஒருவரின் மகள் எஸ். இன்பா என்பவர் ஒன்றிய அரசின் குடிமைப் பணிகள் தேர்வில் வெற்றி பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் ஏழ்மையான ஒரு பீடிதொழிலாளியின் மகள். இவர் பொருளாதார வசதி இல்லாததால், வீட்டிலிருந்தே படித்துள்ளார். இவர் ஏற்கனவே இரண்டுமுறை ஒன்றிய அரசின் குடிமைப்

எஸ். இன்பா

பணிகள் தேர்வு எழுதியும் தேர்ச்சி பெறவில்லை. எனினும், இன்பா விடாமுயற்சியுடன் மூன்றாவது முறையாகத் தேர்வு எழுதி தேர்ச்சிப் பெற்றுள்ளார். இவர் அகில இந்திய அளவில் 851ஆவது இடத்தைப் பெற்றுள்ளார்.

இன்பா அவர்கள் தமிழ்நாடு அரசின் "நான் முதல்வன்" திட்டத்தின் மூலம் மாதம் ரூ.7,500 உதவித்தொகை பெற்று இத்தேர்விற்குப் படித்து வந்தார். 2023ஆம் ஆண்டு ஒன்றிய அரசின் குடிமைப் பணிகள் தேர்வின் முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சிப் பெற்றதையடுத்து மாதம் ரூ.25,000 உதவித்தொகை பெற்றார். தமிழ்நாடு அரசின் நான் முதல்வன் திட்டத்தின் மூலம் கிடைத்த உதவித்தொகையால் பொருளாதார தேவைப் பற்றிய கவலையின்றி இன்பா அவர்களால் முழுக் கவனத்துடன் இத்தேர்விற்காகப் படித்து வெற்றி பெற முடிந்தது.

படிப்புக்கு ஏழ்மை ஒரு தடையில்லை, முயன்றால் படித்து முன்னேறலாம். வெற்றி முகட்டைத் தொடலாம் என்பதை இன்றைய இளைஞர்களுக்கு உணர்த்துவதாக இன்பா அவர்களின் வாழ்க்கையும், அவரது விடாமுயற்சியும் வழிகாட்டுகின்றன.

பீடி சுற்றும் ஒரு தொழிலாளியின் மகள் இன்பா விடாமுயற்சியுடன் படித்து, வென்று உயர் அதிகாரியாகப் பொறுப்பேற்கவிருக்கும் செய்தி அனைவருக்கும் முன்னுதாரணமாக அமைந்துள்ளது.

மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சராக முனைவர் க.பொன்முடி அவர்கள் பதவியேற்பு

படமும்/செய்தியும்

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. **ஆர்.என்.ரவி** அவர்கள், 22.03.2024 அன்று, ஆளுநர் மாளிகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற பதவியேற்பு விழாவில், முனைவர் க. பொன்முடி அவர்களுக்கு உயர்கல்வித்துறை அமைச்சராகப் பதவிப் பிரமாணமும், ரகசிய காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார்.

குடிசைவாழ் மாணவிகளுக்கும் தன்னம்பிக்கை தரும் "புதுமைப் பெண்" திட்டம்

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
அவர்களுக்கு
எனது கரம் குவித்த
நன்றி என
பயனாளி மாணவி பூர்ணா
அவர்கள் பாராட்டு

ஓலைக் குடிசைகளில் உள்ள சிறிய துவாரங்கள் வழியே கதிரவனின் ஒளிக்கதிர்கள் ஒரு குழல்போல் உள்ளே பாய்வதைப் பார்த்திருப்போம்.

அதுபோல, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட நாயகர் அவர்களுடைய கருணை பொங்கும் ஆட்சியில் கதிரவனின் ஒளிக் கதிர்கள் இங்கே இடம்பெற்றுள்ள குடிசைக்குள் ஊடுருவிப் பாய்ந்து பயனளித்துள்ளது.

இந்தக் குடிசை இருக்குமிடம் ரெங்கநாதபுரம், நடுப்படுகை: குடிசையின் முன்புறத்தில் 100 மீட்டர் தொலைவில் திருமலை ராஜன் ஆறு: மறுபுறம் 400 மீட்டர் தொலைவில் நடாறு. இரண்டு ஆறுகளுக்கும் இடையில் உள்ள படுகையில்தான் இந்தக் குடிசை உள்ளது.

இந்தப் படுகையில் ஏறத்தாழ 35 குடும்பங்கள் உள்ளன. இந்தப் படுகை தஞ்சை மாவட்டம் கும்பகோணத்திற்கு அருகில் உள்ள பட்டீஸ்வரம் பேரூராட்சிக்கு உட்பட்டது. இந்தக் குடிசையில் இருந்து பட்டீஸ்வரம் ஏறத்தாழ நான்கு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது.

இந்தப் பகுதியில் உள்ள குழந்தைகள் பட்டீஸ்வரம் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு நடந்து சென்றுதான் படிக்க வேண்டும். அப்படிச் சென்று படித்துப் பன்னிரண்டாம் வகுப்பில் (பிளஸ் டூ) தேர்ச்சி பெற்றவர்தான் பூர்ணா.

பூர்ணா, தன் தந்தை பன்னீர்செல்வம், தாய் காமாட்சி, கல்லூரியில் படிக்கும் தம்பி பாலசுப்பிரமணியம் ஆகியோருடன் இந்தக் குடிசையில்தான் வாழ்கின்றார். பெற்றோர் இருவரும் விவசாயக் கூலித் தொழிலாளர்கள்.

பள்ளிப் படிப்பை முடித்து ஏறத்தாழ 10 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கும்பகோணம் அரசு மகளிர் கல்லூரியில் சேர்ந்து பி.எஸ்.சி. கணிதப் பாடத்தைத் தேர்வு செய்து படித்து வருகிறார். பட்டீஸ்வரத்திலிருந்து பேருந்தில் கல்லூரிக்குச் செல்கிறார்.

இந்தப் பூர்ணாவுக்கு மாதம் ரூ.1,000/- (ரூபாய் ஆயிரம்) வங்கி வழியாக நம் திராவிட நாயகரின் கருணை பொங்கும் புதுமைப் பெண் திட்டத்தால் சென்று சேர்கிறது.

இந்தப் பணம் கிடைத்துள்ளதை எண்ணி மிகுந்த மகிழ்ச்சி அடையும் பூரணா, இந்தப் பணம் எனக்குப் பல வழிகளில் பயன்படுகிறது. பேருந்து போக்குவரத்துக்கு, நோட்டுப் புத்தகங்கள் வாங்க பயன்படுகிறது. என் பெற்றோரின் குடும்பச் செலவுக்கும் பயன்படுகிறது.

மாணவி பூர்ணா

படிக்கும்போதே சம்பாதிப்பது போன்ற உணர்வு எனக்கு வருகிறது. அதைவிட மனதில் ஒரு தன்னம்பிக்கை பிறக்கிறது. இந்தத் திட்டத்தை உருவாக்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இருப்பிடம் நோக்கி என் கரங்கள் குவிந்து நன்றியைச் செலுத்துகின்றன.

என்னைப் போன்ற இலட்சக்கணக்கான ஏழை மாணவ, மாணவிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒரு கருணைத் தெய்வமாகவே காட்சி அளிக்கிறார்கள். அவரை நீடூழி வாழ்க வாழ்க என வாழ்த்திக் கொண்டிருக்கிறோம் மாணவிகள் நாங்கள்.

- என்று மனம் நெகிழ்ந்து கூறுகிறார்.

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் முடிவுகள் 2024

1. திருவள்ளூர் (தனி)

மொத்த வாக்காளர்கள் : 20,85,991
பதிவான வாக்குகள் : 14,17,812

சசிகாந்த் செந்தில் (இ.தே.கா.) வெற்றி

சசிகாந்த் செந்தில்	(இ.தே.கா.)	7,96,956
பொன். வி. பாலகணபதி	(பா.ஜ.க.)	2,24,801
கே. நல்லதம்பி	(தே.மு.தி.க.)	2,23,904
எம். ஜெகதீஷ் சந்தர்	(நா.த.க.)	1,20,838
மற்றவை		32,335
நோட்டா		18,978

2. வடசென்னை

மொத்த வாக்காளர்கள் : 14,96,224
பதிவான வாக்குகள் : 9,02,489

டாக்டர் கலாநிதி வீராசாமி (தி.மு.க.) வெற்றி

டாக்டர் கலாநிதி வீராசாமி	(தி.மு.க.)	4,97,333
ஆர். மனோகர்	(அ.இ.அ.தி.மு.க.)	1,58,111
ஆர். சி. பால் கனகராஜ்	(பா.ஜ.க.)	1,13,318
அமுதினி	(நா.த.க.)	95, 954
மற்றவை		24,565
நோட்டா		13,208

3. தென்சென்னை

மொத்த வாக்காளர்கள் : 20,23,133
பதிவான வாக்குகள் : 10,99,321

டி.சுமதி (எ) தமிழச்சி தங்கபாண்டியன் (தி.மு.க.) வெற்றி

டி. சுமதி (எ) தமிழச்சி தங்கபாண்டியன்	(தி.மு.க.)	5,16,628
டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன்	(பா.ஜ.க.)	2,90,683
டாக்டர் ஜெ. ஜெயவர்தன்	(அ.இ.அ.தி.மு.க.)	1,72,491
எஸ். தமிழ்ச்செல்வி	(நா.த.க.)	83,972
மற்றவை		19,894
நோட்டா		15,653

4. மத்திய சென்னை

மொத்த வாக்காளர்கள் : 13,50,161
பதிவான வாக்குகள் : 7,30,549

தயாநிதி மாறன் (தி.மு.க.) வெற்றி

தயாநிதி மாறன்	(தி.மு.க.)	4,13,848
வினோஜ் பி. செல்வம்	(பா.ஜ.க.)	1,69,159
பி. பார்த்தசாரதி	(தே.மு.தி.க.)	72,016
டாக்டர் ஆர். கார்த்திகேயன்	(நா.த.க.)	46,031
மற்றவை		18,332
நோட்டா		11,163

5. ஸ்ரீபெரும்புதூர்

மொத்த வாக்காளர்கள் : 23,82,119

பதிவான வாக்குகள் : 14,40,935

டி.ஆர்.பாலு (தி.மு.க.) வெற்றி

டி.ஆர்.பாலு	(தி.மு.க.)	7,58,611
ஜி.பிரேம்குமார்	(அ.இ.அ.தி.மு.க.)	2,71,582
வி. என்.வேணுகோபால்	(த.மா.கா)	2,10,110
வி.இரவிச்சந்திரன்	(நா.த.க.)	1,40,233
மற்றவை		33,949
நோட்டா		26,450

6. காஞ்சிபுரம் (தனி)

மொத்த வாக்காளர்கள் : 17,48,866

பதிவான வாக்குகள் : 12,59,578

ஜி.செல்வம் (தி.மு.க.) வெற்றி

ஜி. செல்வம்	(தி.மு.க.)	5,86,044
இ. ராஜசேகர்	(அ.இ.அ.தி.மு.க.)	3,64,571
வி. ஜோதி	(பா.ம.க.)	1,64,931
வி. சந்தோஷ் குமார்	(நா.த.க.)	1,10,272
மற்றவை		16,795
நோட்டா		16,965

7. அரக்கோணம்

மொத்த வாக்காளர்கள் : 15,62,871

பதிவான வாக்குகள் : 11,63,822

எஸ்.ஜெகத்ரட்சகன் (தி.மு.க.) வெற்றி

எஸ். ஜெகத்ரட்சகன்	(தி.மு.க.)	5,63,216
எ. எல். விஜயன்	(அ.இ.அ.தி.மு.க.)	2,56,657
கே.பாலு	(பா.ம.க.)	2,02,325
எஸ். அப்ஷியா நஸ்ரின்	(நா.த.க.)	98,944
மற்றவை		30,067
நோட்டா		12,613

8. வேலூர்

மொத்த வாக்காளர்கள் : 15,28,273

பதிவான வாக்குகள் : 11,29,458

டி.எம். கதிர் ஆனந்த் (தி.மு.க.) வெற்றி

டி. எம். கதிர் ஆனந்த்	(தி.மு.க.)	5,68,692
ஏ.சி. சண்முகம்	(பா.ஜ.க.)	3,52,990
டாக்டர் எஸ். பசுபதி	(அ.இ.அ.தி.மு.க.)	1,17,682
டி. மகேஷ் ஆனந்த்	(நா.த.க.)	53,284
மற்றவை		28,074
நோட்டா		8,736

9. கிருஷ்ணகிரி

மொத்த வாக்காளர்கள் : 16,23,179

பதிவான வாக்குகள் : 11,66,156

கே.கோபிநாத் (இ.தே.கா.) வெற்றி

கே. கோபிநாத்	(இ.தே.கா.)	4,92,883
வி. ஜெயப்பிரகாஷ்	(அ.இ.அ.தி.மு.க.)	3,00,397
சி. நரசிம்மன்	(பா.ஜ.க.)	2,14,125
வித்தியாராணி வீரப்பன்	(நா.த.க.)	1,07,083
மற்றவை		40,686
நோட்டா		10,982

10. தருமபுரி

மொத்த வாக்காளர்கள் : 15,24,896

பதிவான வாக்குகள் : 12,47,832

ஆ.மணி (தி.மு.க.) வெற்றி

ஆ. மணி	(தி.மு.க.)	4,32,667
சௌமியா அன்புமணி	(பா.ம.க.)	4,11,367
ஆர். அசோகன்	(அ.இ.அ.தி.மு.க.)	2,93,629
பொ. அபிநயா	(நா.த.க.)	65,381
மற்றவை		35,590
நோட்டா		9,198

11. திருவண்ணாமலை

மொத்த வாக்காளர்கள் : 15,33,099

பதிவான வாக்குகள் : 11,46,273

சி.என்.அண்ணாதுரை (தி.மு.க.) வெற்றி

சி. என். அண்ணாதுரை	(தி.மு.க.)	5,47,379
எம். கலியபெருமாள்	(அ.இ.அ.தி.மு.க.)	3,13,448
ஏ. அசுவத்தாமன்	(பா.ஜ.க.)	1,56,650
ஆர். ரமேஷ்பாபு	(நா.த.க.)	83,869
மற்றவை		32,970
நோட்டா		11,957

12. ஆரணி

மொத்த வாக்காளர்கள் : 14,96,118

பதிவான வாக்குகள் : 11,40,261

எம்.எஸ்.தரணிவேந்தன் (தி.மு.க.) வெற்றி

எம். எஸ். தரணிவேந்தன்	(தி.மு.க.)	5,00,099
ஜி.வி.கஜேந்திரன்	(அ.இ.அ.தி.மு.க.)	2,91,333
டாக்டர் அ. கணேஷ்குமார்,	(பா.ம.க.)	2,36,571
கே. பாக்கியலட்சுமி	(நா.த.க.)	66,740
மற்றவை		36,330
நோட்டா		9,188

13. விழுப்புரம் (தனி)

மொத்த வாக்காளர்கள் : 15,03,115

பதிவான வாக்குகள் : 11,52,667

துரை ரவிக்குமார் (வி.சி.க.) வெற்றி

துரை ரவிக்குமார்	(வி.சி.க.)	4,77,033
ஜெ. பாக்யராஜ்	(அ.இ.அ.தி.மு.க.)	4,06,330
எஸ். முரளி சங்கர்	(பா.ம.க.)	1,81,882
எம். களஞ்சியம்	(நா.த.க.)	57,242
மற்றவை		21,214
நோட்டா		8,966

14. கள்ளக்குறிச்சி

மொத்த வாக்காளர்கள் : 15,68,681

பதிவான வாக்குகள் : 12,49,568

டி.மலையரசன் (தி.மு.க.) வெற்றி

டி. மலையரசன்	(தி.மு.க.)	5,61,589
ஆர். குமரகுரு	(அ.இ.அ.தி.மு.க.)	5,07,805
எ. ஜெகதீசன்	(நா.த.க.)	73,652
இரா. தேவதாஸ்	(பா.ம.க.)	71,290
மற்றவை		26,700
நோட்டா		8,532

15. சேலம்

மொத்த வாக்காளர்கள் : 16,58,681

பதிவான வாக்குகள் : 13,04,844

டி.எம்.செல்வகணபதி (தி.மு.க.) வெற்றி

டி. எம். செல்வகணபதி	(தி.மு.க.)	5,66,085
பி. விக்னேஷ்	(அ.இ.அ.தி.மு.க.)	4,95,728
என். அண்ணாதுரை	(பா.ம.க.)	1,27,139
டாக்டர் ஜி. மனோஜ்குமார்	(நா.த.க.)	76,207
மற்றவை		24,791
நோட்டா		14,894

16. நாமக்கல்

மொத்த வாக்காளர்கள் : 14,52,562

பதிவான வாக்குகள் : 11,46,303

வி.எஸ்.மாதேஸ்வரன் (கொ.ம.தே.க.) வெற்றி

வி. எஸ். மாதேஸ்வரன்	(கொ.ம.தே.க)	4,62,036
எஸ். தமிழ்மணி	(அ.இ.அ.தி.மு.க.)	4,32,924
டாக்டர் கே. பி. ராமலிங்கம்	(பா.ஜ.க.)	1,04,690
ஜி. கனிமொழி	(நா.த.க.)	95,577
மற்றவை		38,092
நோட்டா		12,984

17. ஈரோடு

மொத்த வாக்காளர்கள் : 15,38,778

பதிவான வாக்குகள் : 10,93,423

கே.இ.பிரகாஷ் (தி.மு.க.) வெற்றி

கே. இ.பிரகாஷ்	(தி.மு.க.)	5,62,339
ஆற்றல் அசோக் குமார்	(அ.இ.அ.தி.மு.க.)	3,25,773
எம். கார்மேகன்	(நா.த.க.)	82,796
ப. விஜயகுமார்	(த.மா.கா.)	77,911
மற்றவை		30,621
நோட்டா		13,983

18. திருப்பூர்

மொத்த வாக்காளர்கள் : 16,08,521

பதிவான வாக்குகள் : 11,42,549

கே.சுப்பராயன் (இ.கம்யூ.) வெற்றி

கே. சுப்பராயன்	(இ.கம்யூனிஸ்ட்)	4,72,739
பி. அருணாச்சலம்	(அ.இ.அ.தி.மு.க.)	3,46,811
எ. பி. முருகானந்தம்,	(பா.ஜ.க.)	1,85,322
எம். கே. சீதாலட்சுமி	(நா.த.க.)	95,726
மற்றவை		24,214
நோட்டா		17,737

19. நீலகிரி (தனி)

மொத்த வாக்காளர்கள் : 14,28,387

பதிவான வாக்குகள் : 10,18,906

ஆ.ராசா (தி.மு.க.) வெற்றி

ஆ. ராசா	(தி.மு.க.)	4,73,212
டாக்டர் எல். முருகன்	(பா.ஜ.க.)	2,32,627
டி. லோகேஷ் தமிழ்ச்செல்வன்	(அ.இ.அ.தி.மு.க.)	2,20,230
அ. ஜெயக்குமார்	(நா.த.க.)	58,821
மற்றவை		21,016
நோட்டா		13,000

20. கோயம்புத்தூர்

மொத்த வாக்காளர்கள் : 21,06,124

பதிவான வாக்குகள் : 13,72,833

ப.கணபதி ராஜ்குமார் (தி.மு.க.) வெற்றி

ப. கணபதி ராஜ்குமார்	(தி.மு.க.)	5,68,200
கே. அண்ணாமலை	(பா.ஜ.க.)	4,50,132
சிங்கை ஜி. இராமச்சந்திரன்	(அ.இ.அ.தி.மு.க.)	2,36,490
கலாமணி ஜெகநாதன்	(நா.த.க.)	82,657
மற்றவை		23,566
நோட்டா		11,788

21. பொள்ளாச்சி

மொத்த வாக்காளர்கள் : 15,97,467

பதிவான வாக்குகள் : 11,26,045

கே.ஈஸ்வரசாமி (தி.மு.க.) வெற்றி

கே. ஈஸ்வரசாமி	(தி.மு.க.)	5,33,377
அ. கார்த்திகேயன்	(அ.இ.அ.தி.மு.க.)	2,81,335
கே. வசந்தராஜன்	(பா.ஜ.க.)	2,23,354
என். சுரேஷ்குமார்	(நா.த.க.)	58,196
மற்றவை		15,280
நோட்டா		14,503

22. திண்டுக்கல்

மொத்த வாக்காளர்கள் : 16,07,051

பதிவான வாக்குகள் : 11,49,621

ஆர்.சச்சிதானந்தம், இ.கம்யூ. (மா.) வெற்றி

ஆர். சச்சிதானந்தம்	இ.கம்யூ. (மா.)	6,70,149
வி. எம். எஸ். முகமது முபாரக்	(எஸ்.டி.பி.ஐ.)	2,26,328
எம். திலக பாமா	(பா.ம.க.)	1,12,503
டி. கயிலைராஜன்	(நா.த.க.)	97,845
மற்றவை		20,676
நோட்டா		22,120

23. கரூர்

மொத்த வாக்காளர்கள் : 14,29,790

பதிவான வாக்குகள் : 11,32,045

எஸ்.ஜோதிமணி (இ.தே.கா.) வெற்றி

எஸ். ஜோதிமணி	(இ.தே.கா.)	5,34,906
எல். தங்கவேல்	(அ.இ.அ.தி.மு.க.)	3,68,090
வி. வி. செந்தில்நாதன்	(பா.ஜ.க.)	1,02,482
ஆர். கருப்பையா	(நா.த.க.)	87,503
மற்றவை		30,789
நோட்டா		8,275

24. திருச்சிராப்பள்ளி

மொத்த வாக்காளர்கள் : 15,53,985

பதிவான வாக்குகள் : 10,55,964

துரை வைகோ (ம.தி.மு.க.) வெற்றி

துரை வைகோ	(ம.தி.மு.க.)	5,42,213
பி. கருப்பையா	(அ.இ.அ.தி.மு.க.)	2,29,119
டி. ராஜேஷ்	(நா.த.க.)	1,07,458
பெ. செந்தில்நாதன்	(அ.ம.மு.க.)	1,00,747
மற்றவை		62,578
நோட்டா		13,849

25. பெரம்பலூர்

மொத்த வாக்காளர்கள் : 14,46,352

பதிவான வாக்குகள் : 11,29,226

கே.என்.அருண் நேரு (தி.மு.க.) வெற்றி

கே. என். அருண் நேரு	(தி.மு.க.)	6,03,209
என். டி. சந்திரமோகன்	(அ.இ.அ.தி.மு.க.)	2,14,102
டி. ஆர். பாரிவேந்தர்	(ஐ.ஜே.கே.)	1,61,866
ஆர். தேன்மொழி	(நா.த.க.)	1,13,092
மற்றவை		26,635
நோட்டா		10,322

26. கடலூர்

மொத்த வாக்காளர்கள் : 14,12,746

பதிவான வாக்குகள் : 10,31,563

எம்.கே.விஷ்ணுபிரசாத் (இ.தே.கா.) வெற்றி

எம். கே. விஷ்ணுபிரசாத்	(இ.தே.கா.)	4,55,053
பி. சிவக்கொழுந்து	(தே.மு.தி.க.)	2,69,157
பி. தங்கர் பச்சான்	(பா.ம.க.)	2,05,244
வி. மணிவாசகன்	(நா.த.க.)	57,424
மற்றவை		37,393
நோட்டா		7,292

27. சிதம்பரம் (தனி)

மொத்த வாக்காளர்கள் : 15,19,847

பதிவான வாக்குகள் : 11,67,071

தொல்.திருமாவளவன் (வி.சி.க.) வெற்றி

தொல். திருமாவளவன்	(வி.சி.க.)	5,05,084
எம். சந்திரஹாசன்	(அ.இ.அ.தி.மு.க.)	4,01,530
பி. கார்த்தியாயினி	(பா.ஜ.க.)	1,68,493
ஆர். ஜான்சிராணி	(நா.த.க.)	65,589
மற்றவை		17,614
நோட்டா		8,761

28. மயிலாடுதுறை

மொத்த வாக்காளர்கள் : 15,45,568

பதிவான வாக்குகள் : 10,87,708

ஆர்.சுதா (இ.தே.கா.) வெற்றி

ஆர். சுதா	(இ.தே.கா.)	5,18,459
பி. பாபு	(அ.இ.அ.தி.மு.க.)	2,47,276
ம.க.ஸ்டாலின்	(பா.ம.க.)	1,66,437
பி. காளியம்மாள்	(நா.த.க.)	1,27,642
மற்றவை		19,199
நோட்டா		8,695

29. நாகப்பட்டினம் (தனி)

மொத்த வாக்காளர்கள் : 13,45,120

பதிவான வாக்குகள் : 9,73,011

வை.செல்வராஜ் (இ.கம்யூ.) வெற்றி

வை. செல்வராஜ்	(இ.கம்யூ.)	4,65,044
டாக்டர் சுர்ஜித் சங்கர்	(அ.இ.அ.தி.மு.க.)	2,56,087
எஸ். ஜி. எம். ரமேஷ்கோவிந்த்	(பா.ஜ.க.)	1,31,294
ம. கார்த்திகா	(நா.த.க.)	1,02,173
மற்றவை		9,495
நோட்டா		8,918

30. தஞ்சாவூர்

மொத்த வாக்காளர்கள் : 15,01,226

பதிவான வாக்குகள் : 10,28,706

எஸ்.முரசொலி (தி.மு.க.) வெற்றி

எஸ். முரசொலி	(தி.மு.க.)	5,02,245
ப. சிவநேசன்	(தே.மு.தி.க.)	1,82,662
எம். முருகானந்தம்	(பா.ஜ.க.)	1,70,613
எம். ஐ. ஹுமாயூன் கபீர்	(நா.த.க.)	1,20,293
மற்றவை		40,060
நோட்டா		12,833

31. சிவகங்கை

மொத்த வாக்காளர்கள் : 16,33,857

பதிவான வாக்குகள் : 10,53,419

கார்த்தி ப.சிதம்பரம் (இ.தே.கா.) வெற்றி

கார்த்தி சிதம்பரம்	(இ.தே.கா.)	4,27,677
அ. சேவியர்தாஸ்	(அ.இ.அ.தி.மு.க.)	2,22,013
டி. தேவநாதன் யாதவ்	(பா.ஜ.க.)	1,95,788
எழிலரசி	(நா.த.க.)	1,63,412
மற்றவை		36,340
நோட்டா		8,189

32. மதுரை

மொத்த வாக்காளர்கள் : 15,82,271

பதிவான வாக்குகள் : 9,86,972

சு.வெங்கடேசன், இ.கம்யூ. (மா) வெற்றி

சு. வெங்கடேசன்	இ.கம்யூ. (மா)	4,30,323
ராம ஸ்ரீனிவாசன்	(பா.ஜ.க.)	2,20,917
பி. சரவணன்	(அ.இ.அ.தி.மு.க.)	2,04,804
டி. சத்யாதேவி	(நா.த.க.)	92,879
மற்றவை		26,875
நோட்டா		11,174

33. தேனி

மொத்த வாக்காளர்கள் : 16,22,949

பதிவான வாக்குகள் : 11,41,219

தங்க தமிழ்ச்செல்வன் (தி.மு.க.) வெற்றி

தங்க தமிழ்ச்செல்வன்	(தி.மு.க.)	5,71,493
டிடிவி தினகரன்	(அ. ம. மு. க.)	2,92,668
வி. டி. நாராயணசாமி	(அ.இ.அ.தி.மு.க.)	1,55,587
மதன்	(நா.த.க.)	76,834
மற்றவை		33,301
நோட்டா		11,336

34. விருதுநகர்

மொத்த வாக்காளர்கள் : 15,01,942

பதிவான வாக்குகள் : 10,61,901

பி.மாணிக்கம் தாகூர் (இ.தே.கா.) வெற்றி

பி. மாணிக்கம் தாகூர்	(இ.தே.கா.)	3,85,256
வி. விஜயபிரபாகரன்	(தே.மு.தி.க.)	3,80,877
ஆர். ராதிகா	(பா.ஜ.க.)	1,66,271
எஸ். கௌசிக்	(நா.த.க.)	77,031
மற்றவை		43,058
நோட்டா		9,408

35. இராமநாதபுரம்

மொத்த வாக்காளர்கள் : 16,17,688

பதிவான வாக்குகள் : 11,09,853

கே.நவாஸ்கனி (இ.யூ.மு.லீக்) வெற்றி

கே. நவாஸ்கனி	(இ.யூ.மு.லீக்)	5,09,664
ஓ. பன்னீர்செல்வம்	(பா.ஜ.க.ஆ.சுயே.)	3,42,882
பி. ஜெயபெருமாள்	(அ.இ.அ.தி.மு.க.)	99,780
டாக்டர் சந்திர பிரபா ஜெயபால்	(நா.த.க.)	97,672
மற்றவை		53,560
நோட்டா		6,295

36. தூத்துக்குடி

மொத்த வாக்காளர்கள் : 14,58,430

பதிவான வாக்குகள் : 9,78,526

கனிமொழி கருணாநிதி (தி.மு.க.) வெற்றி

கனிமொழி கருணாநிதி	(தி.மு.க.)	5,40,729
ஆர். சிவசாமி வேலுமணி	(அ.இ.அ.தி.மு.க.)	1,47,991
எஸ். டி. ஆர். விஜயசீலன்	(த.மா.கா.)	1,22,380
ஜா. ரொவினா ரூத் ஜேன்	(நா.த.க.)	1,20,300
மற்றவை		37,320
நோட்டா		9,806

37. தென்காசி (தனி)

மொத்த வாக்காளர்கள் : 15,25,439

பதிவான வாக்குகள் : 10,39,119

டாக்டர் ராணி ஸ்ரீ குமார் (தி.மு.க.) வெற்றி

டாக்டர் ராணி ஸ்ரீ குமார்	(தி.மு.க.)	4,25,679
டாக்டர் கே. கிருஷ்ணசாமி	(பு.த.க.)	2,29,480
பி. ஜான் பாண்டியன்	(த.ம.மு.க.)	2,08,825
இசை மதிவாணன்	(நா.த.க.)	1,30,335
மற்றவை		27,635
நோட்டா		17,165

38. திருநெல்வேலி

மொத்த வாக்காளர்கள் : 16,54,503

பதிவான வாக்குகள் : 10,67,448

சி.இராபர்ட் புரூஸ் (இ.தே.கா.) வெற்றி

சி. இராபர்ட் புரூஸ்	(இ.தே.கா.)	5,02,296
நயினார் நாகேந்திரன்	(பா.ஜ.க.)	3,36,676
எம். ஜான்சி ராணி	(அ.இ.அ.தி.மு.க.)	89,601
சத்தியா	(நா.த.க.)	87,686
மற்றவை		43,793
நோட்டா		7,396

39. கன்னியாகுமரி

மொத்த வாக்காளர்கள் : 15,57,915

பதிவான வாக்குகள் : 10,29,055

விஜயகுமார் (எ) விஜய்வசந்த் (இ.தே.கா.) வெற்றி

விஜயகுமார் (எ) விஜய்வசந்த்	(இ.தே.கா.)	5,46,248
பொன். ராதாகிருஷ்ணன்	(பா.ஜ.க.)	3,66,341
பசலியான் நசரேத்	(அ.இ.அ.தி.மு.க.)	41,393
மரியா ஜெனிபர்	(நா.த.க.)	52,721
மற்றவை		18,596
நோட்டா		3,756

40. புதுச்சேரி

மொத்த வாக்காளர்கள் : 10,23,699

பதிவான வாக்குகள் : 8,07,940

வெ.வைத்திலிங்கம் (இ.தே.கா.) வெற்றி

வெ. வைத்திலிங்கம்	(இ.தே.கா.)	4,26,005
ஆ. நமச்சிவாயம்	(பா.ஜ.க.)	2,89,489
ஆர். மேனகா	(நா.த.க.)	39,603
கோ. தமிழ்வேந்தன்	(அ.இ.அ.தி.மு.க.)	25,165
மற்றவை		17,915
நோட்டா		9,763

கட்சிகளின் பெயர் விவரம்

தி.மு.க.	-	திராவிட முன்னேற்றக் கழகம்
அ.இ.அ.தி.மு.க.	-	அகிலஇந்தியஅண்ணாதிராவிடமுன்னேற்றக்கழகம்
இ.தே.காங்.	-	இந்தியத் தேசிய காங்கிரஸ்
நா.த.க	-	நாம் தமிழர் கட்சி
அ.ம.மு.க.	-	அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்
பா.ஜ.க.	-	பாரதிய ஜனதா கட்சி
இ.கம்யூ. (மா)	-	இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்)
இ.கம்யூ.	-	இந்திய கம்யூனிஸ்ட்
பா.ம.க.	-	பாட்டாளி மக்கள் கட்சி
வி.சி.க.	-	விடுதலைச் சிறுத்தைகள் கட்சி
தே.மு.தி.க.	-	தேசிய முற்போக்கு திராவிட கழகம்
ம.தி.மு.க.	-	மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகம்
இ.தே.மு.லீ.	-	இந்தியத் தேசிய முஸ்லிம் லீக்
எஸ்.டி.பி.ஐ.	-	சோசியல் டெமாக்ரடிக் பார்ட்டி ஆப் இந்தியா
பு.த.க.	-	புதிய தமிழகம் கட்சி
கொ.ம.தே.க	-	கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சி
ஐ.ஜே.கே.	-	இந்திய ஜனநாயக கட்சி
த.ம.மு.க.	-	தமிழக மக்கள் முன்னேற்றக் கழகம்
த.மா.கா.	-	தமிழ் மாநில காங்கிரஸ்

தமிழ்நாடு சட்டமன்ற இடைத்தேர்தல் – 2024

விளவங்கோடு தொகுதி

மொத்த வாக்குகள் : 2,37,741
பதிவான வாக்குகள் : 1,57,776

தாரகை கத்பர்ட் (இ.தே.காங்.) வெற்றி

தாரகை கத்பர்ட்	(இ.தே.காங்.)	91,054
வி.எஸ். நந்தினி	(பா.ஜ.க.)	50,880
ஆர். ஜெமினி	(நா.த.க.)	8,150
யு. ராணி	(அ.இ.அ.தி.மு.க)	5,267
மற்றவை		1,506
நோட்டா		919

இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத் துறை

கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டம்

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்

திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள்

01.03.2024 அன்று கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, கலைஞர் விளையாட்டு உபகரணங்களை வழங்கினார்.

தமிழரசு

Tamilarasu

R.N.I. No. 21446/70 Regn. No. TN/CCN/643/2024-2026
& WPP No. TN/PMG (CCR) 518/2024-2026

Date of Publication : 2nd week of every month
Date of Posting : 27th - 30th of every month

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு மலர் – ஜூன் 2024 வெளியீடு

Published by : Dr. R. Vaithinathan, I.A.S., on behalf of Information and Public Relations Department Government of Tamil Nadu, Secretariat, Fort St. George, Chennai - 600 009 and Printed by: T. Suyambulingom at TAMILARASU PRESS, Rajiv Gandhi Salai, Taramani, Chennai - 600 113. Editor : Dr. R. Vaithinathan, I.A.S.,